

கல்கி
வாழ்வது
உச்சியில்;
வாழ்க்கை
பாதாளத்தில்...



nutrine நியூட்ரின் குலாப் ஜாமுன் மிக்ஸ்.
மிருதுவான, ருசிமிகு குலாப் ஜாமுன்.
ஒரு 200 கிராம் பேக் கொண்டு 50 சுவைமிகு குலாப் ஜாமுன்கள் தயாரிக்கலாம். வெளியே பார்ப்பதற்கு பொன்நிறம் உள்ளே மிருதுவான ரச நயம். இந்தப் பண்டிகையிலே, உங்கள் மிட்டாய்க் கடைக்காரர் பொறாமையடையட்டும் நீங்கள் நியூட்ரின் இன்ஸ்டன்ட் குலாப் ஜாமுன்களை ருசித்து மகிழுங்கள்.
nutrine
GULAB JAMUN MIX
பொறாமையடையச் செய்யுங்கள்,
உங்கள் மிட்டாய்க் கடைக்காரரை.
Rediffusion/NC/6019 a TM

மெட்ராஸ் ரவுண்ட்-அப்



●● 'அக்னி' அமைப்பு, அண்மையில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி கவிராத்திரி. இதன் ஸ்பெஷாலிடி தமிழ், தெலுங்கு, கன்னட, மலையாளக் கவிஞர்கள், தத்தம் மொழியில் கவிதைகளைப் படித்ததுதான். தமிழில் கவி பாடினவர் டீ.வி. குவிஸ் புகழ் வ.வெ.சுப்ரமணியம். அவர் படித்தவற்றில் ஒரு பளிச் குட்டிக் கவிதை:

''பறித்த மலரை,
ஆண்டவனுக்குச் சூட்டினாலென்ன?
கல்லறையில் வைத்தாலென்ன?
மலருக்கென்னவோ
பறித்ததுமே வந்து விட்டது
மரணம்.''




●● தி. நகர் வெங்கட் நாராயணா சாலையில், ஒரு டிராபிக் சார்ஜெண்ட்டின் சைகையின்படி, கான்ஸ்டபிள் ஒரு லாரியை ஓரங் கட்டச் சொல்லிக் கையாட்டினார். ஆனால் டிரைவரோ ரொம்பக் கூலாக, ''இப்போதான் அங்கே வண்டியை நிப்பாட்டி இன்னோர் மாமனுக்குக் கப்பம் கட்டிட்டு வரேன். இன்னிக்கு அதுவே போதும்! போயிட்டு வா!'' என்று கூறியபடி வண்டியை நிறுத்தாமலே போய் விட்டார்!



●● மாம்பலம் ரங்கனாதன் தெரு காய்கறி வியாபாரிகள் ஒன்றரை ரூபாய், இரண்டு ரூபாய் என்று அட்டையில் பெரிதாய் எழுதி வைத்து விட்டு, அதையே உரக்கவும் கூவுகிறார்கள். கிட்டே போய்ப் பார்த்தால், அட்டையில் ஒரு மூலையில் 'கால் கிலோ' என்று சிறிதாய் எழுதப்பட்டிருக்கும்.



●● நுங்கம்பாக்கத்தில் உள்ள, குழந்தைகளுக்கான மருத்துவ மனையில் காணப்பட்ட வாசகம், ''பார்வையாளர் நேரம் தவிர மற்ற சமயம் நோயாளிகளின் அறையில், பார்வையாளர்கள் காணப்பட்டால் அபராதம் தலைக்கு ரூபாய் பத்து!''



●● வழக்கமாக, டெலிபோன் மணியடித்ததும், ரிசீவரை எடுத்து ''ஹலோ'' என்பார்கள்; இல்லை ''வணக்கம்'' என்பார்கள்; இல்லை தன் டெலிபோன் நெம்பரைச் சொல்வார்கள். அப்படியில்லையெனில் தன் பெயரைச் சொல்வார்கள். ஆனால் ஒரு எண்ணைச் சுழற்றினால், மறு முனையில் 'போயஸ் தோட்டம்' என்றுதான் குரல் கேட்கும். அது யார் நெம்பர்....? ம்... இவ்வளவு நேரம் கண்டுபிடித்திருப்பீர்களே! எஸ். யூ ஆர் கரெக்ட். ('போயஸ் தோட்டம்' என்பது ஜெயலலிதா குடியிருக்கும் பகுதியின் பெயரே தவிர, அவர் வீட்டின் பெயரல்ல; அப்படியிருந்தும் எப்படி இப்படிப் பதில் சொல்கிறார்கள் என்பதுதான் ஆச்சரியம்!)

— மௌஷ்மி.



வாழ்வது உச்சியில்;
வாழ்க்கை பாதாளத்தில்...

"கல்கி நிருபர் வந்தால் கவர்னர் துரையே வந்த மாதிரி..."

• சின்னண்ணன்: "சந்தன மரங்களைக் காபந்து பண்றது யாரு?"



'மதிப்பிற்குரிய கல்கி ஆசிரியர் அவர்களுக்கு, வடாற்காடு மாவட்டம் ஜவ்வாது மலைப் பகுதியிலுள்ள பீஞ்சமந்தை கிராம மக்கள் வணக்கமுடன் எழுதிக் கொள்வது. முப்பத்து நான்கு சிறிய கிராமங்களை உள்ளடக்கியதுதான் எங்கள் பீஞ்சமந்தை கிராமம். சுமார் இரண்டாயிரம் பேர் வசிக்கிறோம்.

'சுதந்திரம் பெற்று நாற்பதாண்டுகளுக்கு மேலாகியும் எங்களுக்கு இன்னமும் சரியானபடி குடிநீர் வசதி செய்து தரப்படவில்லை. எங்களுக்கு உதவுகிற மாதிரி மருத்துவ வசதியும் இல்லை. சாலை வசதி சுத்தமாகவே இல்லை. மலையிலிருந்து ஏதாவது பொருள்கள் வாங்க வேண்டுமானால் சுமார் எட்டு கி. மீட்டருக்கு மேல் கல்லும் முள்ளுமாக மண்டிக் கிடக்கும் ஒத்தையடி மலைப்பாதையில் உயிரைப் பணயம் வைத்துத்தான் நடந்துவர வேண்டும். இப்படித்தான் மலையடிவாரத்திலுள்ள பின்னத்

துரைக்கோ அல்லது அதன் அருகிலுள்ள ஒடுகத்தூருக்கோ அன்றாடம் வந்து சென்று கொண்டிருக்கிறோம்.

'எங்களின் இந்தக் கஷ்டங்கள் குறித்து அரசு அதிகாரிகளுக்கு எழுதியெழுதி அலுத்துப் போனோம். அதனால்தான் உங்களுக்கு எழுதுகிறோம். கல்கி ஆசிரியர் குழுவிலிருந்து யாராவது எங்கள் மலைக் கிராமங்களுக்குச் சிரமம் பாராது வந்து சென்றால், நாங்கள் கவர்னர் துரையவர்களே வந்த மாதிரி சந்தோஷப்படுவோம். ஐயா, தயவு செய்து வராமல் மட்டும் இருந்து விடாதீர்கள். இது எங்கள் வாழ்க்கைப் பிரச்னை. இப்படிக்கு — அல்லும் பகலும் உங்கள் மேலான வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கும் பீஞ்சமந்தை மலைவாசி மக்கள்.'

— இப்படியொரு கடிதம் நமது அலுவலகத்திற்கு வந்தபோது, 'அடாடா! நாம் ஓர் அமைச்சராகவோ அல்லது ஓர் அரசாங்க உயர் அதிகாரியாகவோ இல்லாமல் போனோமே என்ற வருத்தம் மேலிட்டது. அமைச்சராகவோ அரசு உயர் அதிகாரியாகவோ இருந்திருந்தால் கடிதத்தை உடனே ஒரு கோப்பில் போட்டு எத்தனையோ பல கோப்புக்களுடன் இதனையும் தூசி போர்த்திக் கொண்டு தூங்க அனுமதித்திருக்கலாம் அல்லவா? ஆனால் நமது துரதிர்ஷ்டம் நாம் அமைச்சரோ அதிகாரியோ இல்லை. எனவே ஜவ்வாது மலையில் அந்தக் கிராமம் எங்கே இருக்கிறது என்று தேட ஆரம்பித்தோம்.

முதலில் ஒடுகத்தூர் சென்று நமது ஏஜெண்டிடம் விஷயத்தைச் சொல்லிப் பீஞ்சமந்தை கிராமத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னபோது, "அது ரொம்பவும் கஷ்டமான வழி சார். நானே அந்தக் கிராமத்துக்கெல்லாம் சென்றதில்லை. போற வழியில் குடிக்கக் கூடத் தண்ணி கிடைக்காது. எதுக்கு அனாவசியமா ரிஸ்க் எடுத்துக் கறீங்க?" என்றார்.

இருப்பினும் நாம் விடாப்பிடியாக இருக்கவே, இரண்டு வாடகை சைக்கிள்களை எடுத்துக் கொடுத்து, "இங்கிருந்து பின்னத்துரை ஆறு கி. மீ. அதுவரை சைக்கிளில் செல்லலாம். அங்கு யார் வீட்டிலாவது சைக்கிள்களை விட்டு விட்டுக் காட்டுப் பாதையிலும் மலைப் பாதையிலுமாக நடந்துதான் செல்ல வேண்டும். வழி கேட்டால் சொல்லுவார்கள். மலைப்பாதை ரொம்பவும் சறுக்கலான செங்குத்துப் பாதை. ஏறும்போது இளைப்பு வாங்கும். நாக்கு வறளும். தண்ணீர் கிடைக்காது. அப்போதெல்லாம் இந்த குளுகோஸைச் சாப்பிட்டுக் கொள்ளுங்கள்..." என்று குளுகோஸ் பொட்டலங்களை வாங்கித் தந்து. "நீங்கள் போகும் வழியில் மழை வந்தாலும் வரலாம். எனவே, குடையையும் வைத்துக் கொள்ளுங்கள். இது மழைக்கும் பயன்படும், மலைப் பாதையில் ஊன்றிக் கொண்டு செல்லவும் பயன்படும்..." என்று ஒரு குடையையும் கொடுத்தனுப்பினார்.



* மலைப் பாதையில் திரும்பும்போது...

பின்னத்துரை வரை சைக்கிளில் சென்று, அங்கே சைக்கிள்களை விட்டுவிட்டுச் செல்வதற்காக ஒரு பாதுகாப்பான இடம் தேடி, அங்குள்ள ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களிடம் போய் விசாரித்த போது, அவர்கள் நமது ஒடுகத்தூர் ஏஜெண்டை விடவும் இரண்டு மடங்கு அனுதாபத்தோடு நம்மைப் பார்த்தார்கள். அவர்களிடம் முன்பு நாம் மேற்கொண்டிருந்த மாவட்டச் சுற்றுப்பயணங்களின்போது நமது மலை ஏறிய அனுபவங்களையெல்லாம் வரிசையாகத் தொகுத்துச் சொன்ன பிறகுதான் கடைசியில் ஒரு வழியாக நமது பயணத்திற்குச் சம்மதித்தார்கள்.

புறப்பட்டோம்.

அடிவாரத்தை அடையவே நான்கு கி. மீக்கு மேல் நடை. அடிவாரத்திலிருந்து செங்குத்தாக ஏறும் மலைப் பாதை. அதுவும் முதல் நாள்தான் தூறல் போட்டிருந்தது என்பதால் இரண்டடி ஏறினால் மூன்றடி சறுக்குகிற ஆபத்தான நிலை. மரத்தின் வேர்தான் இப்படிச் சுருண்டு கிடக்கிறதோ என்று அதன்மேல் காலை வைத்தால் வழுக்

இக் கொண்டு நெளியும் சிறுசிறு பாம்புகள் நிறைந்த பாதை!

இப்படிப்பட்ட பாதையில்தான் மூச்சு இரைக்க — நாக்கு வறள — முட்டிக் கால்கள் கதற — அங்கங்கே உட்கார்ந்து குளூகோஸ் பொட்டலங்களைக்காலி செய்துகொண்டே ஒரு வழியாக இரண்டு மலைகளை ஏறிக் கடந்து பீஞ்சமந்தை கிராமத்தைச் சென்றடைந்தோம்.

ஊர் மக்களின் சார்பாக நமக்குக் கடிதம் எழுதியிருந்தவரும் அந்த மலைக் கிராமங்களில் கொஞ்சம் விவரம் தெரிந்தவருமான பீஞ்சமந்தை கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் கோவிந்தன், துரதிருஷ்டவசமாக நாம் சென்ற சமயம் ஊரிலில்லை. ஏதோ முக்கிய காரியமாக அவர் வெளியூர் சென்றுவிட்டதால், நம்மைக் கண்ட மற்ற மலைவாசிகளுக்கு வந்திருப்பது யாரோ எவரோ என்று ஒரே பயம்! அந்த பயத்தின் காரணமாக நம்மைக் கண்ட ஒவ்வொரு மலைவாசியும் எதற்கும் இருக்கட்டுமே என்று பயந்தபடியே கும்பிடு போட்டு வைத்தார்.

நம்மைப் பற்றி அவர்களிடம் விளக்கமாக எடுத்துரைத்த பிறகுதான் அவர்கள் அரை மனத்தோடு நாம் சொன்னதை நம்பிக் கொஞ்சம் தோழமையோடு பேச ஆரம்பித்தார்கள். "சாருங்க ரண்டு பேரும் கீழ்நாட்டுலேருந்து வர்றதைப் பார்த்ததுமே ஏதோ போலீஸ்காரங்களோ இல்லே பாரஸ்ட் ஆபீஸருங்களோதான் வர்றாங்களோன்னுதான் பயந்து போயிட்டோம்..." என்றார்கள் அவர்கள்.

"போலீஸ்காரங்களையும், பாரஸ்ட் ஆபீஸர்களையும் பார்த்து எதற்காகப் பயப்பட வேண்டும்?" என்றோம் நாம்.

"போலீஸ்காரங்க வந்தா அது இதுன்னு மெரட்டி அபராதம் (லஞ்சத்திற்குத்தான் அங்கே அபராதம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள்) கேட்பாங்க.பாரஸ்ட் ஆபீஸருங்கன்னாலும் அந்த மரத்தை எங்கே காணோம்? அந்தச் சந்தன மரத்தில காஞ்சு தொங்கின இலையை எங்கே காணலைன்னு அபராதம் கேப்பாங்க. கொடுக்காட்டி அடிப்பாங்க... அதுதான் பயந்துட்டோம்..."

"சரி, வேறு பிரச்னைகள் என்ன?" என்றோம்.

"நீங்களேதான் பார்த்தீங்களே, பாதை வசதி எப்படி? எனக்குப் பக்கத்திலிருக்கிற மலைக் கிராமமான கோயிலூருங்க. பீஞ்சமந்தையில என் பொண்ணைக் குடுத்திருக்கேன். பார்த்திட்டுப் போகலாம்னு வந்தேன். நடந்தேதான் வரணும். இந்த வயசில (அறுபத்தைந்து வயது) எப்பமுங்க முடியும்? பாரஸ்ட்காரங்களுக்கு எங்க பட்டா நெலத்தில இருக்கிற சந்தன மரத்தையெல்லாம் பாதுகாப்பாக் காபந்து பண்ணிக் காப்பாத்தித் தர்றோமே... அதெல்லாம் அரசாங்கத்துக்குத்தானே லட்ச லட்சமாய் போய்ச் சேருது. அந்தப் பணத்திலிருந்து எங்களுக்கு ரோடு போட்டுத் தந்தா என்ன சாரு? நாங்க ஒண்ணும் கீழ்நாட்டுக்காரங்க கிட்டே வரி போட்டு எங்களுக்கு ரோடு போட்டு பஸ் வுடச் சொல்லலை. எங்க ஏரியாவுல வெளையற சந்தன மரங்களோட வருமானத்திலதான் போட்டுத் தரச் சொல்றோம். யாரு செய்யறாங்க...?" என்றார் சின்னண்ணன் என்ற அந்தப் பெரியவர்.


"இதோ அரசாங்கத்திலே உங்களுக்காகக் கட்டித் தந்த வீடுகள்தானே இதெல்லாம்... அரசாங்கம் உங்களுக்கு உதவி செய்யலைன்னா எப்படி?" என்று உள்ளூர்க்காரர்களிடம் கேட்டோம்.

"சாரு, எங்க பேரை வெளியில சொல்லிடாதீங்க. இந்த வூடுங்க ஒவ்வொண்ணுக்கும் அரசாங்கத்திலே பத்தாயிரம் ரூபா செலவழிஞ்சதாக் கணக்கு. ஆனா எங்க கைக்கு வந்தது எவ்வளவுன்னு தெரியுமா? ஆறாயிரத்திலேர்ந்து ஏழாயிரம் ரூபாதான்! அதுல எப்படி காத்துலயும் மழையிலயும் வுழாம வூடு கட்டறது? நீங்களே பாருங்க... கட்டி நாலஞ்சு வருஷங்கூட இல்லை. சுவரெல்லாம் மழைல கரைஞ்சுக்கிட்டு இருக்கு... இதே மாதிரி தாங்க ஆடுவாங்கவும், தேனீ வளர்க்கவும் லோன் தர்றாங்க. எதுலயும் முழுசா எங்க கைக்கு வர்றதில்லை..." என்றார்கள்.

"இதோ பாருங்க, பள்ளிக்கூடக் கட்டடம். ஆரம்பப் பள்ளிக்கூடமுங்க... இதுக்கு ரங்கசாமி, எத்திராஜுன்னு ரண்டு வாத்தியாருங்க. நாத்திப் பத்துக் கொழந்தைங்க படிக்கிறாங்க. ஆனா வாத்தியாருங்க ரண்டு பேரும் ஒழுங்கா வர்றாங்களான்னா வர்ற

* ஆசிரியர்களே வராத ஆரம்பப் பள்ளி.







• சின்னப் பொண்ணு: ''நானும் தாதி... என் அத்தைகளும் தாதி...''

இல்லை. இந்த வாரம் பூராவும் அவங்க வரலை. (நாங்கள் அங்கே இருந்த நாள் வியாழக்கிழமை) அப்புறம் எப்படி கொழந்தைங்க படிக்க முன்னுக்கு வரும்? இதே மாதிரிதான் பக்கத்தூரிலிருக்கிற ஆஸ்பத்திரி நிலையும். அரசாங்கம் சொல்ற புள்ளி வெவரப்படி மலைமேல ஆஸ்பத்திரி இருக்கிறது வாஸ்தவம்தான். ஆனா டாக்டரு வர்ற இல்லையே... என்ன செய்ய? யாருகிட்டே போய்ச் சொல்ல?'' என்றார்கள் நொந்து போன நிலையில்.

குடிநீர் வசதி எப்படி? பீஞ்சமந்தை கிராமத்தில் அரசாங்கம் கிணறு ஒன்றை வெட்டித் தந்திருக்கிறது. ஆனால் மற்ற கிராமங்களில் ஏதும் இல்லை. அங்கெல்லாம் காவி நிறத்தில் சேறும் சகதியுமாக (அட்டைப் படம்) இருக்கிற தண்ணீரைத்தான் காட்டோடைகளில் ஊற்றுத் தோண்டி எடுத்து வந்து குடித்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தனைக்கும் அவர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தருவதொன்றும் பெரிய விஷயமே இல்லை. அவர்கள் ஊற்றுத் தோண்டியிருக்கிற இடங்களெல்லாம் எந்தக் கோடை காலத்திலும் வறண்டு போகாத இடங்கள் என்பதால் அங்கெல்லாம் ஓர் இருபதடி ஆழத்திற்குப் 'போர்' போட்டுக் கைப்பம்புகளைப் பொருத்திவிட்டாலே போதும்; சுத்தமான குடிநீர் கிடைத்து விடும். அப்படியிருந்தும் செய்யப்படவில்லையே என்பதுதான் நேரில் பார்த்த நமது வேதனை.

மேலும் அந்தக் காட்டோடைகளையெல்லாம் நம்மை அழைத்துச் சென்று காட்டிய அந்த மக்கள், ''அங்கங்கே இந்த ஓடைகளில் சின்னச் சின்ன தடுப்பு அணைகள் கட்டிக் கொடுத்தால் எங்களுடைய பயிர்த் தொழி

• கட்டிக் கொடுத்த வீடுகளின் கதி...



லுக்கு ரொம்பவும் வசதியாக இருக்கும். இப்போது விளைய வைப்பதைப் போல் இரண்டு மூன்று மடங்கு அதிகமாக விளைய வைக்க முடியும்...'' என்றார்கள். ''இப்போது எங்கள் வாழ்க்கை நிலை என்பதெல்லாம் அரை வயிறு, கால் வயிறு நிலை தான்'' என்றார்கள்.

உண்மைதான். அவர்கள் வாழ்க்கைத் தரம் என்பது எந்த அளவுக்கு வறுமைக் கோட்டுக்கும் கீழே அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கிறது என்பதற்கு ஓர் உதாரணம், அன்றிரவு அந்த மலைக் கிராமத்திலேயே நாங்கள் தங்கிச் சாப்பிடும்போது, பாத்திரத்தைப் பார்த்துச் சாப்பிடுவதற்கு வசதியாக எங்களுக்கு அவர்களால் ஒரு மண்ணெண்ணெய்விளக்குக்கூடக்கொடுக்க முடியாத நிலை!

ஒவ்வொரு கிராமத்திற்கும் அரசாங்கம் ஒவ்வொரு டியூப் லைட்டை இலவசமாகப் போட்டுத் தந்திருக்கிறது என்றாலும் மின்சார சப்ளை சரியாக இல்லாததால் பல சமயங்களில் அதுவும் எரிவதில்லை என்பதால் அவர்கள் இருட்டுடனேயே தங்கள் வாழ்க்கையைப் பழக்கப்படுத்திக் கொண்டு விட்டார்கள்.

நாங்களும் அவர்களைப் போலவே இருட்டும் ஓர் இயற்கைதானே என்று இருளையும் நேசித்துவிட்டு, மறுநாள் காலையில் அங்கிருந்து புறப்பட்டோம். அப்போது சின்னப் பொண்ணு என்ற பெண்மணி தட்டுத் தடுமாறி எங்களிடம் வந்தார். ''மங்கா, வெள்ளையா...'' என்று கூப்பிட்டார். வீட்டுக்குள்ளிருந்து அவருடைய குழந்தைகள் இருவரும் அவரைப் போலவே தட்டுத் தடுமாறிக் கொண்டு வாசலுக்கு வந்தார்கள்.

''சாரு, நீங்க கீழ்நாட்டுலேர்ந்து வந்திருக்கீங்களா...? மெட்ராஸ்லேர்ந்தா? எனக்குப் புருஷன் இல்லே. அவரு செத்துப் போயிட்டாரு... இவங்கதான் என் கொழந்தைங்க. எங்க மூணு பேருக்குமே கண்ணுத் தெரியாது; மங்கலாக் கொஞ்சம் தெரியும்... அவ்வளவுதான். அதை வெச்சுக்கிட்டுத் தான் ஏதோ அப்படியும் இப்படியுமோ எங்க மலைச்சனங்ககிட்டேயே கூலி வேலை செஞ்சு பொழைக்கிறோம். அவங்களும் எனக்குப் பார்வை சரியில்லேன்னாலும் இரக்கப்பட்டு ஒதவறாங்க. என் பையன் பாருங்க... இந்த வயசிலேயே பீடி குடிச்சுக் கெட்டுப் போறான். கண்ணுத் தெரிஞ்சா அவன் இப்படிச் செய்வானா? அரசாங்கத்திலேயும் எங்களுக்கு ஒதவி செய்யலை. நீங்களாவது சாரு, எங்களுக்குப் பார்வை வர்ற மாதிரி ஏதாவது செய்ய முடியாதுங்களா...'' என்றார் தமது குருட்டுக் குழந்தைகளைத் தடவிக் கொண்டே.

நம் மனம் கலங்கிப் போனது. ஆனால் இப்படிப்பட்ட அப்பாவிகளின் தலைகள்தான் மிளகாய் அரைப்பதற்கு ரொம்பவும் தோதாக இருக்கிறது என்று நமது அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் படுகுஷாலாக அரைத்துக் கொண்டிருக்கிறார்களே, அது யாருடைய தோல்வி? சந்தேகமென்ன? பிடித்து வைத்த மண்ணு மாதிரி ஒவ்வொரு தேர்தலிலும் போய் யோசனையின்றி வோட்டுப் போடுகிற நம்முடைய தோல்வியேதான்!

— இளங்கோவன்

அட்டை வண்ணப்படங்களும், மற்ற படங்களும்: **கே. வி. ஆனந்த்.**

தேர்தல் பிரசார ரதங்களைத் தேடி...

-செம்பியன்-



தேர்தல் பிரசாரச் சுற்றுப் பயணங்களைக் கருதி, தமிழகத்தின் ஒவ்வொரு கட்சி அல்லது அணியின் தலைவரும் ஒரு ''ரதம்'' தயாரித்துக் கொண்டிருக்கிறார். அவை ஒவ்வொன்றும் ஜப்பானியக் கூட்டுறவுடன் தயாரிக்கப்படும் 'வேன்' ஒன்றில் அவரவருக்கும் தேவையான மாற்றங்களுடன் உருவாகி வருகிறது. இச்செய்தியை நாளிதழில் படித்த கணத்திலிருந்து அத்தகைய ரதங்களை நேரில் போய்ப் பார்த்து அவை ஒவ்வொன்றின் தனித் தன்மைகளையும் ஆராய வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கியது.

திருநாவுக்கரசைச் சந்தித்து வெகுநாட்கள் ஆகி விட்டதால் அவருடைய ரதத்தை முதலில் ஆராயலாம் என்ற நோக்கில் போய்ச் சேர்ந்தேன். ரதத்தின் உட்புறம் மையமாக மேஜை போட்டுச் சுற்றிலும் நாலு நாற்காலிகள் இருந்தன. ''அடடா! என்ன முன் யோசனை!'' என்று வியந்தேன்.

''எதைச் சொல்கிறாய்?'' என்றார் திருநாவுக்கரசு.

''சுற்றுப்பயணம் செய்யும் போதே நேரத்தை வீணாக்காமல் உங்கள் அணியின் கொள்கைகள், திட்டங்கள் பற்றி நீங்கள் நாலு பேரும் அமர்ந்து விவாதிக்க வசதியாக மேஜை நாற்காலிகளைப் போட்டு வைத்திருக்கிறீர்களே, அதைத்தான்!''

''ஆமாமாம்'' என்றார் திருநாவுக்கரசு அலுப்புடன். ''நாவலர், பண்ருட்டி, அரங்க. நாயகம் நான் எல்லாரும் பெரிசா திட்டங்களையும் கொள்கைகளையும் வகுக்கப் போறோம், பாரு!''

எனக்கு ஏதோ சந்தேகம் தோன்ற, மேஜையின் நாலு பக்கமும் இருந்த இழுப்பறைகளுள் ஒன்றை இழுத்தேன். உள்ளே இருந்த சீட்டுக்கட்டு என்னைப் பார்த்துச் சிரிக்க, நான் திருநாவுக்கரசைப் பார்த்து அசடு வழிய, திருநாவுக்கரசு என்னைப் பார்த்து, 'ஹிஹி' என்றார்.

நான் மெல்லச் சமாளித்து, ''கூட்டம் சேரலைன்னா இந்த மாதிரி ஏதாவது பொழுதுபோக்கு உங்க நாலு பேருக்கும் தேவைதான்... அது சரி இந்தக் கணக்குப் புத்தகங்கள் எல்லாம் எதுக்கு?'' என்று ஒரு பக்கமாக அடுக்கப்பட்டிருந்த பேரேடுகளைச் சுட்டிக் காட்டிக் கேட்டேன். ''உங்க அணியின் கணக்கு வழக்குகளை உடனுக்குடன் எழுதி எல்லாவற்றையும் குறை கூற இடமின்றிக் கச்சிதமா வைச்சுக்குவீங்களாக்கும்!''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை; இதிலிருப்பதெல்லாம் ஜெயலலிதா அணியின் கணக்கு! அதாவது, அவர் வைத்துக் கொள்ளாத கணக்கு! அதாவது, அந்த அணிக்குச் சேர வேண்டிய, ஆனால் சேராமல் அவர் சொந்தக் கணக்கில் சேர்ந்த தொகைகளின் கணக்கு!''

''ஓகோ! அப்படியானால் உங்க அணியின் கணக்குகள்?''

''அதை எதற்கு நான் வைத்துக் கொள்ள வேண்டும்? வேண்டுமானால் ஜெயலலிதா எழுதி வைத்துக் கொள்ளட்டுமே!'' என்றார் திருநாவுக்கரசு சற்றுக் காட்டமாக.

அவர் பதில் ரொம்ப நியாயமானதாகப்படவே, அவரிடம் விடைபெற்று விரைந்து சென்று மூப்பனார் ரதத்தை அடைந்தேன். அவர் ரதத்தின் மீது ஒரு 'டிஷ் ஆன்டன்னா' இருந்தது. ''இது எதற்கு?'' என்றேன்.

''ரதத்தில் பயணப் படும்போதே ராஜீவுடன் நேரடித் தொடர்பு கொள்ளத்தான்'' என்றார் மூப்பனார். ''நான் டெலிபோனில் பேசுவது இன்ஸாட்டுக்குப் போய்,



இன்லாட்டிலிருந்து பிரதமர் வீட்டில் இறங்கி, டெலிபோன் ரிஸீவர் மூலம் அவர் காதுகளை எட்டும்! புரிகிறதா? உனக்கெங்கே புரியப் போகிறது? இதெல்லாம் 21-ம் நூற்றாண்டு சமாசாரம்!'' என்றார்.

''பிட்ரோடாவுக்குப் புரிந்தால் சரி'' என்று கூறிவிட்டு, ரதத்தின் உள்ளே நுழைந்து நோட்டம் விட்டேன். ஊதுவத்தி மணம் மூக்கைத் துளைத்தது. ''இப்போதான் பூஜை முடித்தாற் போலிருக்கிறது. கூடம் கூட இன்னும் அணையவில்லையே! இது தான் சுவாமி அலமாரியா?'' என்று கேட்ட வாறே மூடியிருந்த அதன் கதவுகளைத் திறக்கப் போனேன்.

''நில்லு! நில்லு!'' என்று அலறினார் மூப்பனார்.

அது காதில் விழுமுன்னரே திறந்து விட்டதாக பாவனை செய்து அகலத் திறந்தே விட்டேன்!

ஆச்சர்யம்! கிருஷ்ணராகவும், ராமராகவும், சிவபெருமானாகவும் இன்னும் பல தெய்வங்களின் உருவிலும் சாட்சாத் என்.டி. ஆரின் புகைப் படங்கள் ஃபிரேம் போட்டு மாட்டியிருந்தன! அவற்றுக்குப் பூஜை நடந்திருப்பதும் தெரிந்தது!

''என்ன இப்படி....'' என்று நான் ஆரம்பிக்கு முன்,

''வேறொன்றுமில்லை, தி.மு.க.வை விமர்சிக்க எனக்கு வகையாக ஒரு விஷயமும் கிடைக்காமலிருந்தது. பழைய லஞ்ச ஊழல் விவகாரம் இப்போ எடுபடலை. திராவிட பாரம்பரியம் என்ற சொற் பிரயோகமும் பிசுபிசுத்து விட்டது. இந்தச் சமயம் பார்த்து ஏழு கட்சி கூட்டணியை உருவாக்கி, தி.மு.க.வ்வையும் அதில் என்.டி.ஆர். இழுத்துப் போட்டாரா, இது தான் சமயம் என்று ஹிந்தி பிரச்னையைக் கிளறி, 'நேருவின் உறுதி மொழியைக் காப்போம் என்று கூடச் சொல்லாத கட்சிகளின் வலையில் கருணாநிதி விழுந்து விட்டார்; ஹிந்தி எதிர்ப்பைக் கைவிட்டுத் தமிழக மக்களுக்குத் துரோகம் செய்து விட்டார்' என்று குற்றம் சாட்ட எனக்கு ரொம்ப வசதியாக இருந்தது! ஒரே ஒரு வலுவான குற்றச்சாட்டையாவது தி.மு.க. மீது சுமத்த வழி செய்து தந்த என்.டி.ஆரை....''

''நன்றியோடு நினைத்து வழிபடுகிறீர்களாக்கும்! நன்றி மறப்பது நன்றன்றுதான்! கன்னத்தில் போட்டுக் கொண்டால் மட்டும் போதாது; காதுகளைப் பிடித்துக் கொண்டு தினம் எட்டு தோப்புக்கரணமும் போடுங்கள்!'' என்று கூறிவிட்டு அடுத்ததாக ஜானகியின் ரதத்தைப் பார்வையிடப் புறப்பட்டேன்.

அதிலே படுக்கை அறை, குளியல் அறை, மேக்-அப் அறை, வரவேற்பறை என்று எல்லா வசதிகளும் இருந்த போதிலும் ஜானகி வருத்தமாக உட்கார்ந்திருந்தார்.

''என்ன விஷயம்? ரதம்தான் பிரமாதமாய் இருக்கிறதே!'' என்றேன்.

என் உடல்நிலையை உத்தேசித்து ஏர்-கண்டிஷன் செய்திருக்கிறார்கள். அதனால் எப்போதும் கதவுகளைச் சாத்தியே வைக்க வேண்டியிருக்கிறது. கட்சிக் கதவுகள் திறந்திருந்தால்தானே எதிர் அணியினர் உள்ளே வர வசதியாக இருக்கும்?'' என்றார் ஜானகி.

''அது சரி. கதவைச் சாத்தி வைத்திருந்தால் உள்ளே இருப்பவர் வெளியேறி விடாமல் கண்காணிக்கலாம் அல்லவா?'' என்றேன்.

''கதவை உடைத்தாவது கொண்டு போய் விடுவார்கள் போலிருக்கே'' என்று ஜானகி மேலும் சோகமானார். ''காளிமுத்துவை ராபின் மெய்ன் விவகாரத்துக்காக இழுத்துப் போகா விட்டாலும் புதிதாக அமுலுக்கு வந்துள்ள அவதூறுகள் தடைச் சட்டத்தின் அடிப்படையிலாவது நிச்சயம் கொண்டு போய் விடப் போகிறார்கள்! என்னவெல்லாம் பேசுகிறார் மனுஷன்! எப்படியெல்லாம் அவதூறுகளை அடுக்குகிறார்! எனக்கு ஒரே கலக்கமாயிருக்கிறது!''

''அதெல்லாம் ஒன்றுமில்லை! அவர் மீது கை வைக்கவே மாட்டார்கள்! அப்படி வைத்தால் அது அவருக்கும் உங்களுக்கும் அனுதாபத்தையும் பிராபல்யத்தையும் தேடித் தந்து, உங்கள் அணிக்கும் புகழ் சேர்த்து வைக்கும் என்பது சிதம்பரத்துக்குத் தெரியாதா என்ன? இ. காங்கிரஸுக்குத் தான் கெடுதலாக முடியும் என்று அவருக்குப் புரியாதா என்ன?''

''அது சரி, நீ இப்படியெல்லாம் பேசுவதைப் பனா சினா கேட்க நேர்ந்தால் புதிய அவதூறு தடைச் சட்டத்தின் கீழ் உன் கதி என்ன என்பதை யோசித்துப் பார்த்தாயா?'' என்று ஜானகி அம்மையார் அன்புடன் என்னை எச்சரிக்க, 'கப்'பென்று இரு கரங்களாலும் வாயைப் பொத்திக் கொண்டு நழுவினேன்.


உங்கள்
வீட்டிலோர்
அமுதக்
கனி மரம்...
ஸ்ரீராம் சிட்டு நிறுவனம் போல் பல வகைகளில் உங்கள் வாழ்க்கையில் உதவுகிறது பலா.
ஸ்ரீராம் சிட்டு நிதியில் உள்ள உங்கள் பணம் போல் கண்ணெதிரே தினம் தினம் பெரிதாக வளர்ந்து வரும் பலாக்கனி.
பலாப்பழம் அமுதத்தின் மறுபெயர். அதன் சுவையாக உங்களை மகிழ்விக்கிறது. உணவுக்கு ஏற்ற பிஞ்சாகவும், கொட்டையாகவும், சாப்பிட தையல் இலையாகவும், வீடு கட்ட மரமாகவும், பலகையாகவும், இனிய சங்கீதத்தை உண்டாக்கும் இசைக் கருவிகளாகவும், மற்றும் எத்தனையோ வகைகளில் மக்கள் நலனுக்கு உதவுவதே அதன் பணி.
ஸ்ரீராம் சிட்டு நிறுவனம், உங்கள் அவசரத் தேவைக்கோ, வீட்டுக் கல்யாணத்திற்கோ, வீடு வாங்கவோ, புதுப்பிக்கவோ, வியாபாரத்திற்கோ, தொழிலை விஸ்தரிக்கவோ, வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கவோ நிதி உதவி புரிகிறது.
பலாவைக் காணும்போது, ஸ்ரீராம் சிட்டு நிறுவனம் உங்கள் ஞாபகத்துக்கு வருவது திண்ணம்.
பலதரப்பட்ட, ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட அங்கத்தினர்கள் இன்று இருப்பதில் ஆச்சரியமில்லை. ஆண்டுக்கு ரூ. 55 கோடிக்கு மேல் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. அதில் 30% திருமண செலவினங்களுக்கு உதவுகிறது. 30% வீடுகட்ட/புதுப்பிக்க உபயோகப்படுகிறது. 20% கல்வி சம்பந்தமான செலவுக்கு உபயோகப்படுகிறது. மீதி உள்ள 20% வியாபாரத்திற்கோ அல்லது இதர இடைச் செலவுகளுக்கோ உதவுகிறது.
உங்கள் ஆதரவினால் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டு வருகிறது இந்த வளர்ச்சி.
MADRAS
ஸ்ரீராம் சிட்ஸ் &
இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்
123, அங்கப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1. போன் : 581401/581431.
கிளைகள் : சென்னை : ● அடையாறு ● அண்ணா நகர் ● மவுண்ட் ரோடு ● மயிலாப்பூர் ● கச்சேரி ரோடு ● தி.நகர் ● தெற்கு உஸ்மான் ரோடு ● திருவொற்றியூர் நெடுஞ்சாலை.
திருச்சி ● மதுரை ● கோயம்புத்தூர் ● வேலூர் ● பெங்களூர் ● மைசூர்.
ரெசிடெண்ட் மேனேஜர்கள் : ● சேலம் ● பாண்டிச்சேரி ● நெய்வேலி ● நாகர்கோவில் ● காஞ்சீபுரம் ● நாகப்பட்டினம் ● புதுக்கோட்டை ● கடலூர் ● கல்பாக்கம் ● ஓசூர் ● ராணிப்பேட்டை ● திருநெல்வேலி ● வேலூர் ● விசாகப்பட்டினம் ● திருப்பதி ● ஹாசன்.
ஸ்ரீராம் சேமிப்பில் சேருங்கள், சீரும் சிறப்புமாய் வாழுங்கள்.


போஃபர்ஸ் ஊழல் இல்லை!..
நீர்மூழ்கி ஊழல் இல்லை!
எண்ணெய் குழாய் ஊழல் அறவே இல்லை!
ஹெலிகாப்டர் ஊழல் இல்லவே இல்லை!
பிரதமர் பாட்டுக்கு நீங்க ஜோரா ஜால்ரா போடணும்!
சிதம்பரம்
பத்திரிகைகள்
அவதூறு தடைச் சட்டம்
லஞ்சம், ஊழல், மோசடி, கள்ளக் கையெழுத்து, ஆட்டோ-சங்க கருக்கு உதவி...
... இப்படி கணக்கு வழக்கில்லாம தொகுதி மக்களுக்கு சேவை செஞ்சிருக்கோம்!
தொகுதி மக்களிடம் அவங்க செஞ்ச சேவையை சொல்லணும்னு பேசினீங்க... சொல்றாங்க! பூரா கேக்காம ஓடாதீங்களே!
தேர்தல்
உரிய காலத்தில் தேர்தல்
ஸ்டாப்பிங்லே நிறுத்தாம பஸ்ஸை எங்கேயோ நிறுத்தறானே!.. ஓடுங்க.. ஓடுங்க...!



கல்கி

1988 செப்டம்பர் 11
மலர் 47 இதழ் 6
விபவ ஆவணி 26



பத்திரிகைச் சுதந்திரம் பறிபோகிறது!

அபிப்பிராய சுதந்திரம் இல்லையெனில் ஜனநாயகமே இல்லை. மக்கள், தலைவர்களை எடை போடவும் அவர்களுடைய கொள்கைகளை எடை போடவும் உதவுவது இந்தச் சுதந்திரமே. இதன் அடிப்படையில்தான் ஒரு தலைவருக்கு அல்லது ஒரு கட்சிக்கு வோட்டுக்கள் விழுகின்றன; அல்லது விழாமல் போகின்றன.

மக்களின் அபிப்பிராய சுதந்திரத்துக்குப் பக்கபலமாக நிற்பது பத்திரிகைச் சுதந்திரம். பல பத்திரிகைகள் அச்சமின்றியும் விருப்பு வெறுப்பு இன்றியும் எழுதும் பல்வேறுபட்ட கருத்துக்களை மக்கள் எடை போட்டுத் தங்களுக்கென்று ஓர் அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொள்கிறார்கள். பத்திரிகைகளின் கருத்தை ஆதரித்து அல்லது எதிர்த்துப் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். இந்த விவாதங்களினால் தெளிவு பிறக்கிறது. கட்சிக் கொள்கைகளை மட்டுமின்றித் தலைவர்களையும் அவர்களது நல்ல, தீய இயல்புகளையும் எடை போட மக்களுக்கு உதவுவது பத்திரிகைச் சுதந்திரமே.

இந்நாட்டில் ரேடியோவும் டீவியும் அரசாங்கத்தின் ஓர் அங்கமாகி விட்டபடியால் பத்திரிகைகள் மட்டும்தான் மெய்யான ஜனநாயகப் பணியாற்றி மக்களுக்கு உண்மைகளை எடுத்துக் கூறி வருகின்றன. அரசு மட்டுமின்றி எதிர்க் கட்சிகளும் செய்கிற தவறுகளை இடித்துக் காட்டியும் நற்பணிகளைத் தட்டிக் கொடுத்தும் நல்லது கெட்டதை மக்கள் புரிந்து கொள்ள உதவுகின்றன. எனவே பத்திரிகைச் சுதந்திரத்துக்கும் ஆபத்து வந்து விட்டால் இந்நாட்டில் ஜனநாயகம் என்பது கேலிக் கூத்தாகி விடும்.

இத்தகைய ஒரு பேராபத்து 'அவதூறுகள் தடைச் சட்டம்' என்ற பெயரில் இந்நாட்டின் பத்திரிகைகளையும் ஜனநாயகத்தையும் பாதிக்க வந்திருக்கிறது. ஏற்கெனவே காகித விநியோகம், அதன் விலை நிர்ணயம், பத்திரிகை இயந்திரங்கள் இறக்குமதி முதலான அம்சங்களை அரசு தன் இரும்புப் பிடிக்குள் வைத்துக் கொண்டு, பத்திரிகைகள் மீது மறைமுக ஆதிக்கம் செலுத்தி வருகிறது. தற்போது நேரடியாகப் பத்திரிகைகளை மிரட்டிப் பணிய வைக்கத் துணிந்திருக்கிறது.

இத்தகைய ஒரு சட்டத்தை அவசரம் அவசரமாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டிய அவசியம் என்ன வந்தது? சமீப காலமாக ஃபேர்ஃபேக்ஸ், போஃபோர்ஸ், நீர்மூழ்கி பேர ஊழல், எண்ணெய் பேர ஊழல், ஹெலிகாப்டர் பேர ஊழல் என்று பல லஞ்ச லாவண்யங்களைப் பத்திரிகைகள் அம்பலப்படுத்தியுள்ளன. இவைதாம் மத்திய அரசை ஒரு கலக்குக் கலக்கி இப்படி ஒரு புதிய சட்டத்தை இயற்றச் செய்துள்ளன எனலாம். ஆக பத்திரிகைகளைக் கண்டு அரசு பயப்பட ஆரம்பித்து விட்டது என்றே அர்த்தம். 'அப்பன் குதிருக்குள் இல்லை' என்ற கதைதான் நினைவுக்கு வருகிறது என்று கூறினால் அதற்காகவே புதிய சட்டத்தின் அடிப்படையில் இந்தப் பத்திரிகை மீது அரசு நடவடிக்கை எடுக்கக் கூடும்! புதிய சட்டம் அத்தனை கடுமையானது! பத்திரிகை மீது அவதூறு எழுதியதாகக் குற்றம் சுமத்தப்பட்டால் தாம் குற்றமற்றவர் என்று நிரூபிப்பது பத்திரிகை ஆசிரியரின் பொறுப்பாகிறது! 'ஒருவர் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டாலொழிய அவர் குற்றமற்றவரே' என்ற அடிப்படை நீதி நெறியை இந்தப் புதிய சட்டம் காற்றிலே பறக்க விட்டு விடுகிறது.

இத்தகைய கடுமையான சட்டத்துக்கு உண்மையில் அவசியமே இல்லை. ஏற்கெனவே 'இந்தியன் பீனல்கோட்' சட்டம் உள்ளது. தவிர பிரஸ் கவுன்சில் பத்திரிகைகளைக் கண்காணித்து அவ்வப்போது எல்லை மீறும் பத்திரிகைகளை எச்சரித்து வருகிறது. பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் நியாயம் பெறவும் வழியிருக்கிறது. இவையெல்லாவற்றையும் விட முக்கியமானது, வீண் அவதூறுகளைப் பரப்பும், அபவாதங்களைச் சுமத்தும் பத்திரிகைகளை மக்கள் படித்தாலும் கூட நம்ப மாட்டார்கள் என்பதுதான். பொறுப்புள்ள விதத்தில், கௌரவமாக நடத்தப்படும் பத்திரிகைகள் எடுத்துக் காட்டும் குற்றம் குறைகளுக்கே மக்கள் மதிப்பளிப்பார்கள். புதிய சட்டமானது மக்களின் இந்த ஆற்றலையும் தகுதியையும் அவமதிக்கிறது. அரசுக்கு மட்டும்தான் எல்லாம் தெரியும், மற்ற எல்லாரும் அசடுகள் என்று கருதுகிறது.

மக்கள் அவையில் நிறைவேறியுள்ள சட்டம், மாநிலங்கள் அவை, ஜனாதிபதியின் ஒப்புதல் என்ற இரு கட்டங்களை இன்னும் தாண்ட வேண்டியிருக்கிறது. அதற்கு முன்பாக அரசுக்கு விவேகம் பிறந்தால் ஜனநாயகம் பிழைக்கும்.


தாய்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

கி. சந்திரசேகரன் தொழிலால் வழக்கறிஞர். கலை இலக்கியத் துறைகளிலும் ஈடுபாடு காட்டி, உன்னதங்களின் சார்பாக வழக்குரைத்தவர்; தரக்குறைவானவற்றைக் கூண்டில் நிறுத்திக் குற்றம் சாட்டியவர். சங்கீத வித்வத் சபை, கலா க்ஷேத்ரா ஆகியன தொடங்கிய போதிலிருந்தே அவற்றுடன் அவருக்குத் தொடர்பு உண்டு. கலா ரசனைக்கு ஓர் "ஆச்ரமம்" ஆகத் திகழ்ந்த அவர் இல்லத்தில் அவர் ஸஹ்ருதயராக வாழ்ந்தார். தமிழ் இலக்கியங்களில் மட்டுமின்றி சமஸ்கிருதத்திலும் பாண்டித்யம் பெற்றிருந்த அவர், 'ஸஹ்ருதயம்' என்ற சொல்லுக்கு விளக்கம் தருவதை இன்றெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கலாம். சமஸ்கிருதக் கல்லூரி, சமஸ்கிருத அகாடமி போன்றவற்றில் சிறப்புத் தொண்டாற்றிய அவர், சிறந்த சிறுகதை எழுத்தாளராகவும் விளங்கினார். பாரதியிடம் பற்றுக் கொண்டு பாரதியார்சங்கத்தில்முக்கியபொறுப்பேற்றுசிறப்புப்பணியாற்றினார். தாகூரிடம் அவருக்கிருந்த பிரேமையைச் சொல்லி மாளாது. சந்திரசேகரன் காலமான செய்தி அறிந்ததுமே, ஏதனாலோ கல்கி காரியாலயத்தில் நீண்ட காலமாக உள்ள தாகூர் புத்தகம் ஒன்றைப் புரட்டி ஒரு கீதாஞ்சலிப் பாடலையாவது படிக்க வேண்டும் என்று ஓர் உந்துதல் ஏற்பட்டது. உள்ளத்தின் இந்த உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து புத்தகத்தின் கனமான அட்டையைப் புரட்டியதுமே முதல் பக்கத்தில் பின்வரும் வரிகள் காணப்பட்டன:

அன்புள்ள கல்கி கிருஷ்ணமூர்த்திக்கு புத்தாண்டுப் பரிசு

— கி. சந்திரசேகரன்.

13.4.1940.



குழலமுது

நரஹரி ராவ் தாழ்வாரத்தின் விளிம்பில் நின்றபடியே கீழே முற்றத்தில் தமது வாயிலிருந்த புகையிலையின் உச்சிஷ்டத்தை உமிழ்ந்தார். வாயையும் நன்றாகச் செம்பிலுள்ள நீரைக் கொண்டு சுத்தம் செய்து கொண்டு வாசற்பக்கம் செல்ல ரேழியைக் கடந்தார்.

அவர் மனைவி யமுனாபாயி, "இலை போட்டாச்சு; சாப்டல்லையா?" என்று கன்னடத்தில் கேட்டாள்.

"உம்" என்றார் ராவ். ஆனால் இதற்குள் அவர் வாசலுக்குச் சென்று விட்டார்.

அவர் கையில் எதையோ எடுத்துக் கொண்டு செல்வதை யமுனா கவனித்திருந்தாள். ஒருவாறு புரிந்தும் கொண்டாள்.

'சரி; இன்னிக்குச் சோத்துலே மண்தான் போ!' என்று தனக்குத் தானே முணுமுணுத்துக் கொண்டு, கூடத்தில் போட்டிருந்த இலையைச் சரேலென்று எடுத்து அலமாரியொன்றில் வைத்தாள்.

வாசலில் நின்ற நரஹரி, யாரையோ எதிர்பார்த்தவராகச் சற்று நிதானித்தவர், என்ன முடிவுக்கு வந்தாரோ, தெரியவில்லை; உள்ளேயிருந்து சுருதிப் பெட்டியை இடது கையிலும் வலது கரத்தில் புல்லாங்குழல் பெட்டியையும் தூக்கிக் கொண்டு, வாசல் திண்ணையில் போய் அமர்ந்தார்.

இரவு மணி ஏழு அல்லது ஏழரை கூட இருக்கலாம். அவர் வீடு இருந்தது திருவையாற்றிலுள்ள ஒரு சிறிய சந்தில்தான். சுக்லபக்ஷ முன்பாகமானதால் நிலவின் காந்தி அவ்வளவாக இல்லை. தெருவிலும் விளக்கு அவர் வீட்டின் அண்டையில் எங்குமே இல்லை. அக்காரணம் போலும், இருட்டின் ஆதிக்கம் பலமாக இருந்தது.

மெதுவாக அவர், "யமுனா, யமுனா!" என்று தமது மனைவியைக் கூப்பிட்டார். அவர் அவளை உள்ளே இருந்த ஹரிக்கேன் விளக்கைச் சற்று வாசல் திண்ணையில் கொணர்ந்து வைத்துச் செல்வதற்காகவே அழைத்தார். பதில் வராததால் தாமாகவே மெதுவாக ரேழியைக் கடந்து, கூடத்தில் கம்பியில் தொங்கிய விளக்கை எடுக்க வந்தார். யமுனா வெடித்தாள்: "இந்த ஏழவு வீட்டில் விளக்கு வெளிச்சத்துக்குக் கூடக் கிராக்கியாயிடுத்து! இன்னொரு விளக்கு வாங்கு வாங்குன்னாத் தரித்திரப் படறது! இப்போ வாசத் திண்ணையிலே ஜமா சேர்த்துண்டு கச்சேரி பண்றேளே! இருட்டிலே நான் மட்டும் சாகறதா? பாம்பு, தேளு கடிச்சுச் செத்துத் தொலையறேன்;

கி. சந்திரசேகரன்


நீங்க பாட்டுக்குப் புல்லாங்குழல் ஊதிண்டு ஊரைக் குஷால் படுத்துங்கோ.''

நரஹரிராவ் பதில் சொல்லவில்லை. திரும்ப விளக்கைக் கம்பியில் மாட்டிவிட்டு வாசலுக்கே சென்று விட்டார்.

அவர் வாசலில், முதலில் யாரையோ எதிர்பார்த்த விதம் நிதானித்தாரல்லவா? சுருதியைப் போட எதிராத்துக் கோபு வருவது வழக்கம். அதுவும் அவனாக வந்தால்தான். இல்லாவிட்டால் சுருதியே வைத்துக் கொள்ளாமல் புல்லாங்குழலை ஊதுவது நரஹரிராவின் வெகு நாளைய சம்பிரதாயம். ஆனால் ஒன்று மட்டும் கூற வேண்டும். சுருதி வைத்துக் கொள்ளாத பொழுதும் அவர் ஊதலின் ச்ராவ்யமான ஒலி காதுள்ளவர்களைக் கவரத்தான் கவரும். காதுள்ளவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள் திருவையாற்றிலுங்கூட? பிரபலமடைந்த சங்கீத வித்வான்களின் பாட்டைக் கேட்பதையே மட்டும் முறையாக்கிக் கொண்டவர்கள்தாம் பலரும். நரஹரி ராவின் குரு பரம்பரையைப் பற்றி அறிந்தவர்கள் அவரைக் குறை கூற மாட்டார்கள் என்றாலும், நரஹரியின் சுபாவத்தில் தோன்றிய அகம்பாவந்தானோ என்னவோ அவரை ரசிக்க இயலாத விதம் பலரைச் செய்துவிட்டது.

அவருக்கு வரும்படி சொற்பம். காலத்துக்கு ஏற்றபடி பக்க மேளங்களின் சௌஜன்யமும் போதவில்லை அவருக்கு. பிடில் வாசிப்பவர்கள் அவரிடம் மதிப்பைக் காட்டத் தயங்குவதுண்டு. அவர் வாசிப்பில் உள்ள குளிர்ச்சி அவர்களை என்ன விதந்தான் இழுத்துப் போர்த்திக் கொள்ளச் செய்ததோ தெரியவில்லை. இரண்டொருவர் மட்டும், 'புல்லாங்குழல், வாசிப்பதில் அவருக்கு இணையே இல்லை!' என்று கூறுவார்கள். ஆனால் அவருடன் உறவு காட்டி அவருக்கு அனுசரணையாகப் பக்க வாத்தியம் வாசிக்க ஒன்றுபோல் எல்லோரும் இணங்குவதில்லை. நரஹரிக்கும் எல்லாம் தெரியும். ஆனால் தன்னை அவர்கள் அவமதித்ததாகவோ அல்லது தன் வாசிப்புக்கு அவர்கள் இணையில்லை என்றோ ஒரு சமயமும் அவர் காட்டிக் கொண்டதில்லை.

மிருதங்க வித்துவான்கள் அவருடைய லயக் கோளாறை நினைத்துத்தானோ என்னவோ என்றுமே அவரை அணுகியதில்லை. உண்மையில் லயமெல்லாம் அவர் சங்கீதத்தில் நன்கு புகுந்து கொண்டிருந்ததை. அவர்கள் அறியாமல் இல்லை. அவருடைய போக்கு அவர்களுக்கு எதையோ அவர் மனத்தில் வைத்துக் கொண்டு தங்களைப் பரீட்சை செய்வதாகவே படவைத்தது. அவர் காலந்தள்ளியே பாட்டுக்களை ஆரம்பிப்பார். சரணத்திலிருந்து திடீரென்று மிடுக்காய்க் கிளம்பி, கண் இமை மூடித் திறப்பதற்குள் சரணத்தையும் அனுபல்லவியையும் முடித்து விடுவார். இதிலெல்லாம் அவருக்குத் தனி



வழி போன்ற ஏதோ ஒன்று தூக்கி நிற்கும். மிருதங்கம் வாசிப்பவர்களுடன் சரச சல்லாபம் செய்ய மாட்டார். எப்பொழுதாவது மிருதங்கக்காரன் அவருடைய ராக ஆலாபனையை ரசித்துக் கவனித்து விட்டால் பிற்பாடு அவன் தம்முடன் ஒத்துழைக்க அவராகவே வழிகாட்டி விடுவார். இதன் சூட்சுமம் அவர்களில் சிலருக்கே தெரியும். எல்லோரும் சங்கீதத்தையா நினைத்துக் கொண்டு பக்க வாத்தியம் வாசிக்க வருகிறார்கள்? ஊதியமும், ஒருவரை ஒருவர் அண்டிப்பிழைப்பதின் சௌகரியங்களும் அவசியமாகி வரும் காலத்தில், கலையின்பம் ஒன்றையே குறியாகத் தொழில் செய்பவர்கள் வைத்துக் கொள்வது சாத்தியமில்லை என்பதாகத்தான் உலகமறிந்த வித்துவான்களும் முடிவு கட்டுவார்கள்.

நரஹரி இவைகளுக்கு விலக்கு. அவர் நல்ல வழியில் பாடம் கற்றவர். அவர் பாணி என்று கூடச் சிலர் கருதும் விதம் அவர் ஊதலில் தனியாக ஓர் இனிப்பு உண்டு. சிறிது கம்மலாகக் காற்றின் பிசிருகளின்றி அவருடைய மத்தியஸ்தாயி சஞ்சாரங்கள் அவரையே மெய்மறக்கச் செய்வனவாக அமைவது உண்டு. அக்காலங்களில் அவரும் அவருடைய புல்லாங்குழலும் தவிரப் பக்க வாத்தியக்காரர்களின் அருகாமையே அவரைப் பாதித்ததில்லை. அவர்கள் வெகு நேரம் கையைக் கட்டிக் கொண்டு அவரையே விழித்துப் பார்ப்பார்கள். அவருக்கு அவர்கள் விழிகள் எதைத் தெரிவித்தன என்பதற்கு வேண்டிய சுற்று உணர்ச்சி ஞாபகம் அக்காலங்களில் இருந்திருந்தாலல்லவா அவர்கள் செய்யும் புகாரை அறிய இயலும்? அநேக சமயங்களில் அவர்கள், சபாஷ் போடுவதை ஒருவிதமாய்த்தான் அவர் அங்கீகரிப்பதை அவர்களும் குறிப்பாய் அறிந்திருந்தார்கள். எல்லாமாக அவரை வர வரத் தனியாக்கிவிட்டன.

யாருக்கு அதன் விளைவு தெளிவாகியதோ இல்லையோ, யமுனாபாயிக்கு நன்கு விஷயம் புலனாகியது. அவள் ஒரே மகளை எங்கேயோ கிணற்றில் தள்ளியதைப் போல் கல்யாணம் செய்து வைத்துவிட்டு, சங்கீதப் பைத்தியம் பிடித்து அலையும் புருஷனைக் காண அவளுக்கு அருவருப்பு அதிகமாகிக் கொண்டே வந்தது. முட்டுக் கட்டை போடுவதுபோல், அவர் புல்லாங்குழலை எடுக்கச் சென்றால் இலையைப் போடுவாள். அல்லது கோவிலுக்குச் சென்று வரலாம் என்பாள். இன்னும் தன்னால் முடிந்த அளவில் தடை செய்யத்தான் செய்வாள். அவருடைய சங்கீதம் அவள் காதுகளில் நாராசமாக விழுந்தது. அவர் வாசல் திண்ணையில், கோபு சுருதி போட, வாசிக்கையில் கதவை இழுத்துச் சாத்திக் கொண்டு நித்திரை போய் விடுவாள்.


இன்றும் அதே மாதிரி வாசற் கதவு அடைபட்டது. உள்ளே ரேழியைத் தாண்டி இரண்டாம் கதவும் சாத்தப்பட்டது. ஆனால் தாழிடப்படவில்லை. இருட்டில் அமர்ந்து கொண்டு, தமது குழல் வைத்திருந்த பெட்டியைத் தடவித் திறந்து கொண்டிருந்த நரஹரி, கதவுகள் சாத்தப்படுவதைக் கவனித்தார். வாஸ்தவத்தில் அவருடைய உள்ளத்தில் நிம்மதி நிலவியது. வெளிச்சம் சிறிதும் இல்லை. சுருதி போடக் கோபுவும் வரவில்லை. அதனால் என்ன? தமது குழலை எடுத்துத் துடைத்து விட்டுக் கீழ் உதட்டின் சமீபம் கொண்டு சென்றார் நரஹரி.

நரஹரி, மனோதர்ம வெளியில் இறக்கைகளை நன்றாகப் பிரித்துக்கொண்டு ஆகாசத்தின் உயரத்தில் வட்டமிடும் கருடனைப் போல் எவ்வளவு நேரம் மிதந்து கொண்டிருந்தாரோ தெரியவில்லை. ஒவ்வொரு தடவையும் ரிஷபத்திலிருந்து மத்தியமத்தில் அவர் தங்கி, நிஷ்டையில் ஈடுபட்டார் என்றே சொல்ல வேண்டும். அவர் கானம் அவருக்கென்றே சிருஷ்டிக்கப்பட்ட விதம் இருந்தது. வெள்ளத்தின் நுரையும் குழப்பமும் தணிந்து, நீரில் மலர்ச்சி வந்து எய்திய பின் நதியொன்று எவ்விதம் நீராடுபவனின் உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே பரிசுத்தப்படுத்துமோ அவ்விதம் ராக ஆலாபனம் அவரைச் செய்து கொண்டிருந்தது. தாமாகவே இடையே குழலை வாயிலிருந்து நீக்கி, 'அப்பா, அப்பா!' என்று முனகியதைத் தவிர எதிரேயுள்ள கோணலான தெருவையும் இருட்டையும் தம்மைச் சுற்றியுள்ள சூன்யத்தையும் உணராதவராகவேதான் அவர் விடாமல் இசை இன்பத்தைப் பொழிந்து கொண்டிருந்தார்.

திடீரென்று தொண்டையில் கபம் போன்ற ஏதோ ஒன்று அடைத்தது. சட்டென்று சங்கீதம் துண்டுபட்டது. அருமையான ராக மூர்ச்சனையில் இறங்கியவர், நல்ல அனுபவத்தில் எதிர்பாராதபடி தடைப்பட்டார். குழலைக் கையில் ஏந்தியவர் தொண்டையைக் கனைத்துக் கனைத்துக் கோழையை வாயில் வரவழைத்துக் கொண்டிருந்தார். ஒன்றும் உடனே சரியாக வரவில்லை. அவர் எழுந்து வாசற்படியில் வந்து நின்று கவனித்தார்..

யாரது? எதிர்த் திண்ணையின் கீழ், புழுதி சேர்ந்திருந்த ஓரமான ரஸ்தாவில், சேர்த்துக் கட்டிக் கொண்டிருந்த கால்களைக் கந்தைத் துணியினால் மூடிய வண்ணம் உட்கார்ந்திருந்த ஓர் ஏழையின் உருவம் தென்பட்டது.

நரஹரி எழுந்ததைக் கவனியாத அப்பிச்சைக்காரன், இசை இன்பத்திலேயே திளைத்தவன் போல் முகத்தை நிமிர்த்தி இமைகளில் நீர் சுரந்தபடியே அசைவற்று இருந்தான். அவனுக்குப் பாட்டு நின்றதை அறியச் சற்று நேரம் பிடித்திருக்க வேண்டும். ஏனெனில், நரஹரி, அவனைக் கூர்ந்து கவனித்து, அவன் இருந்த இடத்துக்குச் சற்றுச் சமீபம் வரும் வரையில் ஒன்றையுமே உணராதவன், "ஐயோ! பாட்டு நின்னு போச்சா! சாமி, இன்னிக்கு இவ்வளவுதான் தருவாரு போலே



கரூர் வைஸ்யா பாங்க்

திருமலை திருப்பதி தேவஸ்தானத்துடன்

இணைந்து நித்திய அன்னதான திட்டத்திற்கு துணை புரிகிறது.

எமது வாடிக்கையாளர்கள், நலம் நாடுவோர், பொது மக்கள் மற்றும் நன்கொடையாளர்கள் அனைவருக்கும் ஓர் நற்செய்தி.

திருமலை திருப்பதி தேவஸ்தானம் நடத்தும் **'நித்திய அன்னதான'** திட்டத்திற்கென தனிப்பட்டவர்கள் செலுத்தும் ரூ. 1,000/- அல்லது அதன் மடங்குகளான தொகைகளை எமது பாங்கின் அனைத்து கிளைகளிலும் கமிஷன் இல்லாமல் ஏற்றுக் கொள்ளப்படும். செலுத்தப்படும் தொகை முழுவதும் திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு அனுப்பப்படும். நன்கொடை செலுத்துவோர் எங்களது கிளைகளில் ரொக்கமாகவோ அல்லது செக்/டிமாண்ட் டிராப்ட் மூலமாகவோ செலுத்தலாம். மேற்படி நன்கொடைகளுக்கு வருமான வரி சட்டத்திலிருந்து (80-ஜி) விலக்கு உண்டு.

இவ்வாறு செலுத்தப்படும் நன்கொடைகள் மூலம் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் நாள் ஒன்றுக்கு சுமார் 10,000 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

இந்த பெரும் 'நித்திய அன்னதானப் பணிக்கு' தங்களால் இயன்ற நிதியை தாராளமாக அளித்து திருவேங்கடப் பெருமானின் அருளைப் பெற அன்புடன் அழைக்கிறோம்.

கரூர் வைஸ்யா பாங்க் லிமிடெட்

கரூர் - 639 002.

பி. பாஸ்கரன் - சேர்மன்

அன்னியச் செலாவணியில் வர்த்தகம் புரிய அங்கீகாரம் பெற்றவர்கள்

Anugrah - 243/88 Tam.

ருக்கு'' என்று வாயினால் சொன்னதை நரஹரி கேட்டுவிட்டார்.

ஏதோ ஒரு புதிய உற்சாகம் அவருடைய இதயத்தை உந்தியது போல் இருந்தது. அவனுடைய வார்த்தைகளைத் தாமும் ஆமோதிப்பவர்போல் அவரும், ''ஆமாம்; ஸ்வாமி இன்றைக்கு இவ்வளவுதான் தருவார்'' என்றார். தமது தொண்டையில் சிக்கிய கபம் தமது மனோதர்மத்தை நிறுத்திவிட்ட துக்கத்தை அவர் வேறு எப்படிச் சொல்லி ஆற்றிக் கொள்ள இயலும்! ஆனால் மேலும் அவனிடம் பரிவுடன், ''நீ யாரப்பா. என்னைப் போலவே தனிப் பிரகிருதியாகி விட்டாய்?'' என்றார்.

''நானா... என்னையா. கேக்கறீங்க? தேசாந்திரி சாமி, நான்... நடந்து நடந்து கால் கனத்துப் போச்சுங்க... வயிறுதான் என்ன பாடு படுத்திச்சு, இத்தனை நாழி! ஆனா... இந்தப் பாட்டைக் கேட்டேனோ இல்லையோ, எம் பசி எங்கேயோ ஓடிடுத்துங்க... இன்னமே ராவிக்குச் சுகமாய்த் தூங்குவேன்... மவராஜனாயிருக்கணும் நீங்க... தேனைக் கொட்டியிருக்கீங்க போன பிறப்பிலே சாமி பேர்லே...இல்லாப்போனா இப்படியா பசியை மறைக்கும் ஒரு பாட்டு!''

அவன் பேச்சு ஒரு குடம் பசும்பாலைத் தம் பேரில் அபிஷேகம் செய்வித்தது போல் நரஹரியைத் திணறச் செய்தது. தமது கண்களை விரித்தவர் அவனையே உற்றுப் பார்த்தார்.

''ஆமாம், உன்னைப் பார்த்தால் சர்வ தரித்திரனாய்க் காண்கிறதே! உனக்குப் பாட்டை ரசிக்க எப்படித் தெரிந்தது?'' என்றார் உண்மையான ஆச்சரியத்துடன்.

''ஐயோ, சாமி, பாட்டு, சாமான்யமாயிருந்தா ரசிக்கத் தெரிஞ்சுக்கணும். ஆனா, அதோ பாருங்க. அந்தப் பஞ்சநதீசுவரன் புண்ணியத்திலே, உங்க பாட்டு எம் பசியைப் போக்கடிச்சுடுத்துங்களே! பாட்டைக் காதாலே மட்டும் ரசிச்சாப் போதுங்களா?'' அவன் இடையே தனது வலது கையினால் இதயத்தைத் தடவிக் கொண்டான், ''என்னமோ... இங்கே பாருங்க... இந்த இடத்திலே பொங்குதுங்க... வாயாலே சொல்லத் தெரியலீங்க. பசி ஓடியே போயிடுதுங்க... நான் விடியற வரையில் சுகமாக என்னையே மறந்து தூங்கப் போறேன்'' என்றான் பிச்சைக்காரன்.

நரஹரியின் கண்களில் நன்றி துளும்பியது. ''வா அப்பா உள்ளே, உனக்குச் சோறு தர்றேன்'' என்றார் அவனைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டே. கதவை அழுத்திச் சாத்தாததால் சப்தமிடாமல் திறக்க முடிந்தது.

உள்ளே யமுனாபாயின் குறட்டை ஆரோஹண அவரோஹணக் கிரமத்தில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

நரஹரி, சப்தம் செய்யாமல் சமையலறையில் நுழைந்தார். அங்கே தமக்காக வைத்து மூடியிருந்த சோற்றையும் கறி, குழம்பு முதலியவைகளையும் எடுத்துத் தமக்காக வைத்திருந்த இலையில் கொட்டிப் பிசைந்தார். ஒரு பெரிய உருண்டையாக அதை உருட்டி, இலையையும் போட்டுச் சுற்றிக் கையில் எடுத்துக் கொண்டு வெளியே வேகமாக வந்தார்.

ஆனால், அவனைக் காணவில்லை!

ஒரு தடவை தெருவைத் துருவிப் பார்த்தார். எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது.

திடீரென்று திண்ணையோரத்திலிருந்து ஓர் எச்சிற்கலை நாய் ஏதோ பலமான பதார்த்தம் கிடைப்பதை எதிர்பார்த்துத் தன் வாலைக் குழைத்துக் கொண்டு எதிரே வந்து, தள்ளி நின்றது.

ராயர் கையில் இலையால் மூடப்பட்ட சோற்று உருண்டை அப்படியே இருந்தது. பிச்சைக்காரனைக் காணவில்லை, எவ்வளவு தேடியும். ''சரி, போ... உனக்குத்தான் அதிர்ஷ்டம்; சாப்பிடு'' என்று சொல்லிக் கொண்டே சாதத்தை எதிரே வாலையாட்டிய நாயின் முன் எறிந்தார். நாயும் ஒரே பாய்ச்சலில் அதைக் கௌவித் தின்னத் தொடங்கியது.

நரஹரி, உள்ளே சென்று கையை அலம்பி விட்டு வாசலில் மறுபடியும் வந்து நின்றார். பிச்சைக்காரன் சிரித்துக் கொண்டே எதிரே பிரசன்னமானான். ''அடபாவிப் பயலே... எங்கே போனாய்...? உனக்காகக் கொண்டு வந்ததை நாய்க்குப் போட்டுட்டேனே. அவசரத்தில்'' என்றார் பதைபதைக்க.

''எனக்கு ஏதுக்காம், சாமி? எம் பசி போயி எத்தனையோ நாழி ஆயிடுத்து. உங்க சாப்பாட்டையல்ல நீங்க வீண் பண்ணிட்டீங்க? பசிக்குமே சாமி; உடம்புலே பலம் வேணுமே வாசிக்க! உங்களைப் பாத்தாக் காத்தையே சாப்பிட்டுவிட்டு வாயாலே அந்தக் காத்தை ஊதறாப்பலேதான் தோணுது'' என்றான், அவரை மிக்க கௌரவத்துடன் பார்த்துக் கொண்டு.

நரஹரி பேசினார்.

''அப்பா ரசிகத் தன்மைக்கு உன்னிடம் அல்லவா பிச்சை வாங்க வேண்டும் மற்றவர்கள்? இன்றைக்கு உன்னிடம் பெற்ற வெகுமதியைப் போல் ஒரு நாளும் நான் ஒருவரிடமும் பெற்றதில்லை. என் பசியும், தணிந்து விட்டது. உன்னைப் போல் நானும் கவலையின்றித் தூங்கப் போகிறேன். பகவான் உன்னைப் போன்ற ஒரு ரசிகனையாவது படைத்தாரே!'' அவர் குரல் தழுதழுத்தது.

நாய் சாப்பாடு அவ்வளவையும் விழுங்கி விட்டுத் தூரத்தில் சென்று சுகமாக வாலைச் சுருட்டிக் கொண்டு படுத்தது.

'உனக்குப் போட வேண்டியதை நாய்க்குப் போட்டேன்! இன்றைக்கா? என்றைக்குந் தான்!'' — நரஹரி மனமுருகினார்.

பிச்சைக்காரன் ஒன்றும் புரியாதவனாக மறுபடியும், ''வர்றேனுங்க'' என்று வணங்கி விட்டுக் கிளம்பினான்.



* பெரிய ஸ்ரீமத் ஆண்டவர்.



* பத்தாவது ஆண்டவர்

83 வயது சீனியர்; 79 வயது ஜூனியர்!

கர்ப்பகிரஹத்தை விட்டு ஸ்ரீரங்க நாதரே எழுந்து வந்து தம்மைத் தரிசிக்க வந்திருந்த வழுத்தூராரை அணைத்துக் கொண்டு, "வைஷ்ணவ சம்பிரதாயத்தை ஆளவந்தவரே" என்று சொன்னதாக ஐதீகம். இதனால் அவர், "வழுத்தூர் ஆண்டவர்" எனப் பெயர் பெற்று, ஆண்டவன் சம்பிரதாய ஆசிரமத்தை ஸ்தாபித்தார். இவரைத் தொடர்ந்து ஆசிரமத்தின் பொறுப்பை ஏற்ற பல பக்த சிரோமணிகளுள் ஒன்பதாவது ஆண்டவர் பாரத தேசமெங்கும் சுமார் மூவாயிரம் கி. மீட்டருக்கு மேல் கால்நடையாகவே சுற்றுப்பயணம் செய்து வைஷ்ணவத் தொண்டாற்றி இன்றும் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார்.

தற்போது ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆசிரமத்தின் பத்தாவது ஸ்ரீமத் ஆண்டவராக கோபாலாச்சாரியார் என்ற பூர்வாசிரமப் பெயர் கொண்டவர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். இவர் மைசூர்க்காரர். வயது எழுபத்தொன்பது! இதுவரை பொறுப்பு வகித்து வந்துள்ள சீனிவாச ராகவாச்சாரியார் என்கிற பூர்வாசிரமப் பெயர் கொண்ட பெரிய ஸ்ரீமத் ஆண்டவருக்கு வயது எண்பத்து மூன்று!

"சிறிய வயதுடையவரை நியமிக்காமல், எழுபத்தொன்பது வயதுடையவரை வாரிசாய் நியமித்ததற்கு என்ன காரணம்?"

ஆசிரமத்தின் பொறுப்பிலுள்ள சமஸ்கிருதக் கல்லூரியின் முதல்வரான மாதவன் சொல்கிறார்: "வைஷ்ணவ சம்பிரதாயத்

தில், கிரஹஸ்தனாய் இருந்த பின்புதான் சன்யாசி ஆகவேண்டும். அதாவது, மனிதன் தேவ, ரிஷி, பித்ரு 'கடன்களுடன் பிறக்கிறான். கிரஹஸ்தனாகி, தன் கடமைகளை முடித்து விட்டுத்தான் சன்யாசம் வாங்க வேண்டும். தமக்குப் பின், ஆசிரமத்தைத் திறமையாய் நிர்வாகம்செய்யக்கூடிய, வைஷ்ணவ சம்பிரதாயங்களில் தேர்ந்த நபர் என்று கருதுபவரை வாரிசாக நியமிப்பது வழக்கம். அதன்படி, மூத்த ஆண்டவன் ஸ்வாமிகள், தமக்குப் பின் வாரிசாய் நியமிக்கத் தகுதி பெற்றவர் என நினைத்து, மைசூரிலிருந்த ஸ்ரீ கோபாலாச்சாரியாருக்குத் தகவல் அனுப்பி வரவழைத்துப் பொறுப்பேற்கச் செய்திருக்கிறார்."

"ஸ்ரீரங்கத்தில் உள்ள அகோபில மடமும், ஆண்டவன் ஆசிரமமும் ஒன்றுக்கொன்று போட்டியானவை என்று ஒரு கருத்து நிலவுகிறதே?" என்றபோது, "இது முற்றிலும் தவறானது. இரண்டுமே இரண்டு கண்கள் மாதிரி வைணவத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ளவை. ஆண்டவன் சுவாமிகள் ஜீயரையும், ஜீயர் சுவாமிகள் இவரையும் சந்தித்து அளவளாவுவது என்பது சகஜமான விஷயம். ஸ்ரீரங்கம் ராஜகோபுரத்தில்கூட ஜீயர் சுவாமிகளைப் போலவே, ஆண்டவன் சுவாமிகளும் ஒரு மாடத்துக்குப் பொறுப்பேற்றுக் கட்டித் தந்தார்; கும்பாபிஷேகப் பணியிலும் பங்கேற்றார்..." என்று சொன்னார் மாதவன்.

இந்த ஆசிரமத்துக்கு இந்தியாவெங்கும் சுமார் ஒரு லட்சம் சிஷ்யக் குடும்பங்கள் உள்ளன. இன்றைய ஜனாதிபதி ஆர். வி., உதவி ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா ஆகிய இருவருமே, ஸ்ரீமத் ஆண்டவரின் பக்தர்கள். சமீபத்தில் இரண்டு பேருமே ஆசிரமத்துக்கு வந்து போனார்கள். ஸ்ரீமத் ஆண்டவர் ஆசிரமம், சமஸ்கிருதக் கல்லூரி தவிர ஆஸ்பத்திரிகளும், பள்ளிக்கூடங்களும் நடத்தி வருகிறது.

— எஸ். சந்திரமௌலி.

வண்ணப்படங்கள்: **சுபா. ரவிசங்கர்.**

மகாராஷ்ட்ராவிலும் மதிய உணவுத் திட்டம்

தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டு பிரபலமடைந்த நண்பகல் உணவுத் திட்டம் இப்போது மகாராஷ்ட்ராவிலும் ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

முதலமைச்சர் சரத் பவார் இதற்காகச் சுமார் ரூ. 200 கோடி செலவழிக்கத் திட்டம் தீட்டியுள்ளார். ஆரம்பப் பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கான இந்த வசதியில் பால், பழம் மற்றும் முட்டை கலந்த உணவு மதியத்தில் அளிக்கப்படும்.

இந்தத் திட்டம் பரவலாக வரவேற்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அடுத்த பொதுத் தேர்தலை முன்னிட்டுத்தான் மதிய உணவுத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த முதலமைச்சர் பவார் துடியாக இருக்கிறார் என்பது ஒரு சிலரின் கருத்து.

பொது ஜனங்களுக்கு உதவ ஆங்காங்கே நிறுவப்பட்டுள்ள தொலைபேசிகள் பலமுறை நமது நாணயங்களை விழுங்கி விட்டுத் தொடர்பு கொள்ள வேண்டியவருடன் பேச விடாமல் சங்கடப்படுத்தியுள்ளன. கூடிய விரைவில் இந்நிலை மாறும், டெலிபோன் சேவையின் தரம் உயரும் என்ற நம்பிக்கை இப்போது ஏற்பட்டிருக்கிறது. டெலிபோன் துறையானது பம்பாயில் ஒரு நூதனக் கருவியை அறிமுகம் செய்திருக்கிறது. பப்ளிக் டெலிபோனில் நாணயங்கள் போடாமல், காசு கொடுத்து வாங்கக் கூடிய அட்டையைத் தொலைபேசிப் பெட்டியில் நுழைத்துப் பேசும் வசதி நிறுவப்பட்டிருக்கிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை இது ஒரு நூதனப் புரட்சி. பம்பாய் கொலாபா பகுதியில் உள்ள 'டெலிபோன் பவன்' என்ற கட்டடத்தில் நிறுவப்பட்டிருக்கும் இந்த வசதியில் இந்தியாவிற்குள் மட்டுமின்றி வெளிநாடுகளில் வசிப்பவருடனும் போனில் பேசலாம். முதலிலேயே பணம் கட்டி அட்டை வாங்க வேண்டும். பேச்சு முடிந்தவுடன் பேசிய நேரம், செலுத்த வேண்டிய தொகை முதலிய விபரங்கள் ஒரு காகிதத்தில் அச்சாகி வரும். அதிகப்படிப்பணம் கட்டியிருந்தால் திருப்பிக் கொடுக்கப்படும்.

பம்பாயின் இதர பகுதிகளிலும் இது போன்ற டெலிபோன் கேந்திரங்களை நிறுவத் திட்டம் உள்ளது. மக்களுக்கு இது எந்த அளவுக்கு வசதியாக உள்ளது என்பதைப் பொறுத்து இந்த ஏற்பாடு இதர நகரங்களிலும் படிப்படியாகப் பரவும்.

— ஜி. சந்திரசேகர்

* செலுத்தப்பட்டுள்ள கட்டணத்துக்கு ஏற்ப டெலிபோன் அட்டைக்கு மதிப்பு ஏற்றித் தருகிறார் டெலிபோன் ஊழியர்.



6 நீரில் மிதக்கும் நிலா

"என்னை நானே இன்ட்ரட்யூஸ் பண்ணிக்கறேன். நான் நடராஜன். சிவராமனோட ஃபாதர். இது என் ஒய்ஃப் ஜகதா."

மதுமதி தயங்கிய குரலில் கேட்டாள்.

"சிவா வரலியா?"

நடராஜன் மனைவியைப் பார்த்தார். ஜகதா கணவனைப் பார்த்தாள். நடராஜன் தலையைக் குனிந்து கொண்டார். சட்டென்று நினைத்துக் கொண்ட மாதிரி, கையோடு கொண்டு வந்திருந்த தோல் பையை ஜிப்பிழுத்துத் திறந்தார். அதிலிருந்து ஏதோ ஒன்றை எடுத்து ஜகன்னாதனிடம் நீட்ட, அது ஓர் அலங்காரமான சிகரெட் லைட்டர்!

சிவப்புக்கல் பதித்துப் பட்டையாய்த் தீப்பெட்டியை விட மெல்லிதாய் இருந்தது.

"சிவராமன் இதை உங்களுக்காக வாங்கியிருந்தான்... இந்தாங்க"

ஜகன்னாதன் மறுப்பதா, ஏற்பதா என்று புரியாத பிரமிப்பில் கைநீட்டி அதை வாங்கிக் கொண்டார்.

ரோகிணி பரபரப்பாய் உள்ளே போய் ஒரு ட்ரேயில் நான்கு சின்னத் தட்டுகளில் ஸ்வீட்டும், ஸ்பூனும் வைத்து எடுத்து வந்தாள். நடு மேஜையில் வைத்தாள்.

"எடுத்துக்குங்க. சிவராமுக்குப் பிடிக்கும்னு மதுமதி சொல்லிச்சி. தம்பி வரலை போல் இருக்கு?"

ஜகதாவின் கண்களில் நீர் பொங்கியது. கரகரவென்று கன்னத்தில் வழிய முற்பட்டது.

"ஷ்" என்று நடராஜன் அடக்கினார். "மதுமதி. இப்ப நான் சொல்லப் போற விஷயத்தை நீங்களெல்லாம் ரொம்பத் தைரியமா கேட்டுக்கணும். நடுவில் யாரும் பேசக் கூடாது...

மதுமதி குழம்பிப் போய்ப் பார்த்தாள். 'சிவராமனுக்கும் உனக்கும் அந்தஸ்தில் எட்டாது' என்று சொல்லி சினிமா அப்பாக்கள் போல் விலகி இருக்குமாறு கேட்டுக் கொள்ளப் போகிறாரா?

"ஜகதாவோட பர்த்டேக்காகச் சிவராமன் பெங்களூர் வந்திருந்தானில்ல... அப்ப நாங்கல்லாம் ஒரு பிக்னிக் போயிருந்தோம்.... ஊட்டிக்கு...."

சரசரவென வளைந்து திரும்பியது பாதை. அதன் குதிரை லாட வளைவுகளில் கார் விரைந்தது.

"விஜி" — டிரைவிங் சீட்டில் உட்கார்ந்திருந்த சிவராமன் மெலிதாய்க் கூப்பிட்டான்.

"என்னண்ணா?"

"நீயும் மெட்ராஸ் வரியா?"

"ம். என்னிக்குப் போறோம்?"

"செவ்வாய்க்கிழமை. மது பத்தி நீ எதுவுமே சொல்லலியே!"

"நல்ல களையான முகம். வீடியோவிலயே இவ்வளவு களைன்னா, நேர்ல பாத்தா இன்னும் நல்லா இருப்பா" என்றாள் ஜகதா இடையில் புகுந்து.

"சிவராம்... நீ பாட்டுக்கு அந்தப் பொண்ணைப் பத்தி நெறையச் சொல்லிட்டே இருக்கே. நாங்களும் சரின்னுட்டோம். ஆனா அவங்க வீட்ல என்ன சொல்வாங்களோ?"

"முதல்ல பயப்படுவாங்கப்பா. நம்ம பணத்தைப் பார்த்து பயம். நான் பேசிட்டேன். நீங்களும் வந்து பேசிப் பாருங்க. மனுஷங்க நல்லவங்கதான்."

ஒரு வளைவின் முனைவரை சென்று சரசரவென்று ஸ்டியரிங்கை வளைத்துத் திருப்பினான் சிவராமன்.

ஒரு சின்ன மேகத் துணுக்கு தத்தித் தத்தி மலையேறிப் பாதையில் குறுக்கில் ஓடித் தளர்ந்து புகையாய்ப் படர்ந்து மறைந்தது. சில்லென்று காற்று திறந்த ஜன்னல் வழியே உள்ளே பாய்ந்தது.

"இங்கயே ஓரமா நிறுத்திடு சிவராம். அந்த மரத்துக்குக் கீழ போய் உக்காந்துக்கலாம்."

மலைச்சரிவில் ஒரு சமதளம். குடை விரித்த பரந்த மரத்திற்குக் கீழ ஒரு சின்ன விருந்து நடத்தலாம் போல் பரப்பளவு. கையெட்டுகிற தூரத்தில் ஓடை. தண்ணீரில் புரண்ட மெருன் கூழாங்கற்கள். கண்ணாடி நீரில், விஜி காதில் மாட்டியிருந்த அன்னத் தோடின் சிவப்புக்கல் பிரதிபலிப்பு.

"ஃபண்டாஸ்டிக்" என்று கைகள் இரண்டையும் தூக்கி வியந்து போனாள் விஜி.

"மைகாட்... என்ன ஒரு ஸீனரி இங்கேர்ந்து பாத்தா... மதுவுக்குக் கூட இந்த மாதிரி நாச்சுரல் ஸீன்ஸ்லாம் ரொம்பப் பிடிக்கும்மா. விஜி காமிராவை எங்கிட்ட குடுத்துட்டு அந்த மரத்துமேல சாய்ஞ்சி ஒரு போஸ் குடு பாப்போம்."

க்ளிக். கிளிக். க்ளிக்.

"விஜி, அந்தப் பாறையைப் பாரு..

இத்தனூண்டு டச்தான் தரையோட... ஆனா உருளாம எப்படி நிக்குது பாரு. அதை ஒரு ஸ்நாப் அடிக்கணும் விஜி. வித்தியாசமா. நான் அதும் மேல ஏறி உச்சியில நின்னுக்கறேன். நீ கீழே இங்க உக்காந்து அண்ணாந்த வாக்கில ஒரு கிளிக் அடி.

"வேண்டாம் சிவராம். அது மேல் ஏற முடியாது. பயங்கரமா வழுக்கும். வேணும்னா கீழ நின்னு ஃபோட்டோ எடுத்துக்க...."

"இல்ல... ஜாக்கிரதையா ஏறிடுவேன்" என்றான் சிவராமன்.

பக்கத்துப் பாறை ஏறுவதற்கு எளிதாக இருந்தது. மெல்ல அதைப் பிடித்து அதன் மேல் ஏறினான். அடுத்த பாறைக்குத் தாவினான். கிடைத்த பிடிப்பில் காலை வைத்து அழுத்தி மேலே ஏறினான். மெல்ல மெல்ல, பாறையோடு உடம்பைத் தேய்த்துத் தேய்த்து, உச்சியை எட்டினான். பாறை உச்சியில் தட்டையாய் இருந்தது.

"ஓ.கே?" என்று கேட்டான்.

"ஓ.கே" என்றாள் விஜி.

க்ளிக். க்ளிக். க்ளிக்.

மூன்று கோணங்களில் படம் பிடித்தாள் விஜி.

இறங்க வேண்டியதுதான்.

பாறையில் உட்கார்ந்து மெல்ல வழுக்கிக் காலை நீட்டி அந்தப் பிடிப்பைத் தேடுகையில் திடீரெனக் கை வழுக்கியது. புரிந்து சுதாரிக்கு முன் உடலின் பாரம் கீழே இழுத்து விட்டது. இந்தப் பாறையில் மோதினான். பக்கத்துப் பாறைக்கு மாறினான். பிடிப்பின்றிக் குப்புற மோதினான். முன் மண்டையில் விரிசல். கையும், காலும் ஏதேதோ கோணங்களில் மடங்கிக் கொள்ளக் குபுகுபுவென்று ரத்தம்.

சிவராமனிடமிருந்து ஒரு முனகல் இல்லை.

நடராஜனின் முதுகு குலுங்கியது. மதுமதிக்கு ஏற்கெனவே கண்களில் குளம் கட்டியிருந்தது.

"அப்புறம் ஆஸ்பிடலுக்கு எடுத்திட்டுப் போய் ஊர்ல இருக்கற அத்தனை பெரிய டாக்டருங்களும் வந்து பார்த்தாங்க. அதைப் பிரிச்சாங்க. இதைத் தச்சாங்க. ஒரு வழியா நேத்திக்குக் காலைலதான் கண்ணைத் திறந்தான். மூணு மணி நேரம் பேசிட்டிருந்தான். அந்த மூணு மணி நேரமும் உன்னைப் பத்தித்தான் நெறையக் கவலைப்பட்டான். நீ எப்படித் தாங்குவியோன்னு வருத்தப்பட்டான். 'புதன் கிழமை சாயந்தரம் வரேன்னு சொல்லிட்டேனே. அவ காத்திட்டிருப்பாளே'ன்னு மாய்ஞ்சு போனான். 'திருவான்மியூர்ல அவளுக்கு ஒரு வீடு கட்டறேன்னு சொன்னேனே... செய்யாமப் போறேனே'ன்னு புலம்பினான். 'அப்பா அப்படி ஒருவேளை நான் பொழைக்காமப் போய்ட்டா, அவளுக்காகத் திருவான்மியூர்ல என்னால ஒரு வீடு கட்டித்தர முடியலைன்னா, பெங்களூர்ல இருக்கற நம்ம துவாரகா மாளிகையை அவளுக்குக் கொடுத்திடுங்கப்பா. அவளுக்கு வேணுங்கற அத்தனையும் செய்ஞ்சு கொடுத்துடுங்க... எனக்கு நீங்க கொடுக்க நெனைச்சதையெல்லாம் அவளுக்குக் கொடுங்கப்பா. மறுக்காம ஒத்துக்கணும்னு சொல்லுங்கப்பா'ன்னான். 'புதன் கிழமை சாயங்காலம் அவளைப் போய்ப் பார்த்திடுங்கப்பா... இங்க கூட்டிட்டு வரவேண்டாம். என்னை சந்தோஷமா, ஆரோக்கியமாப் பாத்திருக்கா. அவ நெனைப்புல நான் அப்படியே இருக்கேன். ஆஸ்பத்திரி படுக்கைல என்னைப் பாத்தா, இதான் கடைசி வரைக்கும் அவ மனசில நின்னு போகும்'ன்னான்."

மதுமதியால் அதற்கு மேல் தாங்க முடியவில்லை.

"இப்ப சிவாவுக்கு எப்படி இருக்கு?" என்று படபடக்கக் கேட்டாள்.



இனிப்புகளில் வந்து மொய்த்துக் கொண்டிருந்த ஈக்களை நோட்டமிட்டுக் கொண்டே நடராஜன் தலையைக் குனிந்து கைகளைத் தேய்த்துக் கொண்டார். குரல் தழுதழுத்து வந்தது.

"சிவராமுக்கு நேத்து ராத்திரியிலிருந்து, வலியில்லை... வேதனையில்லை.... ஒண்ணுமேயில்லம்மா.... மொத்தமா எல்லாம் நின்னுடிச்சி...."

பிருத்விராஜ் கதையை நிறுத்தி விட்டான்.

ஷில்பா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள், கண்களை விரித்து வைத்துக் கொண்டு. பிருத்விராஜ் கதை சொன்ன விதத்தில் ஒரு மாயக் கவர்ச்சி இருந்தது. மதுமதி அழுதபோது பிருத்விராஜ் அழுதான். சிவராமன் மதுமதிக்காக உருகிய போது அவனும் உருகினான். கைகளை ஆட்டி, கண்களின் பாப்பாக்களை உருட்டி, சிரித்து, அழுது, கோபப்பட்டு, சந்தோஷப்பட்டு, காதலித்து, ஊடி.... ஷில்பாவால் இன்னும் பிருத்விராஜின் மேல் நிலைக்க வைத்த கண்களை எடுக்க முடியவில்லை. அவன் கதையை நிறுத்தி விட்டான் என்பதை உணர முடியவில்லை.

பிருத்விராஜ் அவள் எதிரே இரண்டு கைகளையும் நீட்டி அசைத்துப் பார்த்தான்.

ம்ஹூம். ஷில்பா மதுமதியாகவோ



என்னவோ மாறியிருந்தாள்.

இரண்டு கன்னங்களிலும் இரண்டு உள்ளங் கைகளையும் பதித்து அவள் சற்றே குனிந்து உட்கார்ந்திருந்த விதத்தை இளங் குமரன் பார்த்திருந்தால் நிச்சயம் அந்தப் போஸைத் தவறவிட்டிருக்க மாட்டான்.

பிருத்விராஜ் அவளுடைய இரண்டு கைகளையும் பற்றிச் சட்டென்று இழுத்தான். ஷில்பாவின் முகம் கீழே இறங்கியது. பிருத்விராஜ் தொட்டதைப் பெரிதுபடுத்தாமல், "பாவம் மதுமதி" என்றாள்.

பிருத்விராஜ் மலர்ந்து சிரித்தான்.

"மதுமதி பாவம் இல்ல ஷில்பா. ஹீரோ இந்த எடத்தில கதையை விட்டு வெலகிப் போயிடறான். அதனால அஸ்வின் குமாருக்கும் வேலை இல்ல. அதனால உனக்கும் கஷ்டம் இல்ல. ஹீரோ உயிரோட இருந்திருந்தா ஷில்பாதான் பாவம். அஸ்வின் குமார் படம் முழுக்க இருப்பான் இல்ல?"

"மதுமதி என்ன ஆவா பிருத்வி?"

"இது முழுக்க முழுக்க ஷீரோயின் சப்ஜெக்ட் ஷில்பா. மதுமதியை இனிமேத் தான் யாருன்னு நீ தெரிஞ்சிக்கப் போறே"

"மதுமதி என்ன ஆவா பிருத்வி? தற்கொலை செய்ஞ்சிப்பாளா?"

"ம்ஹூஹூம். சொல்ல மாட்டேன். நீ படத்தில உண்டா, இல்லியா?"

ஷில்பா யோசித்தாள். பிருத்விராஜைப் பார்த்து இரண்டு விரல்களை நீட்டினாள்.

"ரெண்டுல ஒண்ணு தொடுங்க" என்றாள்.

பிருத்விராஜ் தொட்டான்.

"உண்டு" என்றாள் ஷில்பா.

"இன்னொரு விரலைத் தொட்டிருந்தா....?"

"அதுக்கும் நான் உண்டுன்னுதான் நெனைச்சிக்கிட்டிருந்தேன்" என்று சொல்லி ஊட்டியில் காலையில் முழுவதுமாய் மலர்ந்திருந்த சூரியகாந்தியைப் போல் 'பளிச்' சிரிப்புச் சிரித்தாள் ஷில்பா.

"நான் சொல்லலை.... நான் சொல்லலை. பிருத்விராஜ்தான்யா லாயக்கு. பார். போய் ஹீரோயினைக் கூட்டிட்டு வந்துட்டான் பாரு... இங்க வாய்யா பிருத்விராஜ்" அழைத்த இளங்குமரனை நெருங்கினான் பிருத்விராஜ்.

"என்னய்யா சொக்குப் பொடி போட்டே... நீ சொன்னா மட்டும் குட்டி இந்த ஆட்டம் ஆடறாளே..." என்று பிருத்விராஜிடம் ரகசியமான குரலில் கேட்டான் இளங்குமரன்."

பிருத்விராஜ் லேசான கோபத்துடன் இளங்குமரனை முறைத்தான்.

"சரி விடு... சொன்னேன்னா அதே மெத்தடை நானும் ஃபாலோ பண்லாம்னு நெனைச்சேன். மொத நான் ஷூட்டிங். பேசாம வேடிக்கை பாரு. ஷில்பா... ஓடும்மா. செருப்பைக் கீழேயே விட்டுட்டு மலை மேல ஏறு... அங்கே நான் சொல்ற எடத்துல நின்னுக்க... காமிரா உன்னைப் பார்த்துக்கிட்டு இருக்கும்... அஸிஸ்டெண்ட் டைரக்டரு விசில் அடிச்சவுடனே நீ மலையிலேர்ந்து இறங்கி ஓடி வரே. உன் காதலனோட சேரப் போறே. அதனால சிரிச்ச முகமா வரணும். பேஸ்ட் அட்வடைஸ்மெண்ட்ல சிரிப்பாங்களே.... அப்படி சிரிக்கணும். ரெண்டு கையையும் விரிச்சிக்கிட்டு எறங்கி வரணும்... சரியா...?"

"சரிங்க" என்றாள் ஷில்பா. அணிந்திருந்த உடையை ஒருமுறை பார்த்துக் கொண்டாள். மலைமேல் ஏறினாள். மலை உச்சியில் அவளுக்காகத் தலையில் வெள்ளைத் தொப்பியுடன் அஸிஸ்டெண்ட் ஒருவன் காத்திருந்தான். நல்ல வெயில். கால்கள் அவ்வப்போது செடி முளைக்காத வழுக்குப் பாறைகளில் பதிந்த போது ஷில்பாவின் கால்களுக்குக் கீழே நெருப்புப் பூக்கள் இறைத்திருந்த மாதிரி இருந்தது.

ஷில்பா மலை மீது ஏறினாள். அஸிஸ்டெண்ட் டைரக்டர் காட்டிய இடத்தில் நின்றாள். திரும்பினாள். கீழே பார்த்தாள். காமிராவின் மூக்கு அவளைப் பார்த்தது. அங்கங்கே ரிஃப்ளெக்டர்கள் ஒப்புக்குச் சப்பாணிகளாக நின்றன.

அஸ்வின்குமார் காரில் சாய்ந்து சிகரெட்டைப்புகைத்துக்கொண்டே அவளைப் பார்த்தான். கையில் பைனாகுலர்ஸ். நிச்சயம் அவளுடைய சகல உடைகளையும் உருவிக் கொண்டிருப்பான் என்று ஷில்பாவிற்குத் தோன்றியது.

ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்கள் அங்கங்கே தெரிந்த மர நிழல்களில் மேய வந்த ஆடுகள் போல.

டைரக்டருக்குப் பின்னால் பிருத்விராஜ் தெரிந்தான்.

இளங்குமரன் சைகை காட்டினான். எங்கேயோ ஒரு விசில் ஊதப்பட, ஷில்பா இரு கைகளையும் விரித்தாள்.

பிருத்விராஜ் அழைத்தான். காமிரா ஒரு சின்ன விர்ருடன் கீழே இயங்கியது.

'வா... மதுமதி....

'உன்னைத் தேடித்தான் வருகிறேன் சிவா' — "க்ளாஸ்... ஸிம்ப்ளி க்ளாஸ்" என்றான் இளங்குமரன்.

"வா ஷில்பா.

"இதோ பிருத்வி."

"எம் பொண்ணுங்க" என்று பெருமையுடன் மகளைப் பார்த்தார் ஜூபிடர் ரத்தினம்.

ஷில்பா பிறந்த நாளில் இருந்தே காதலில் ஈடுபட்டவளைப் போல மலைச்சரிவில் ஆனந்தமான சிரிப்புடன் இறங்கினாள். அவள் பாதங்களில் ஒன்று நீட்டிக் கொண்டிருந்த சின்னப் பாறையைக் கவனிக்காமல் மோதியது. ஷில்பா பிடிப்பின்றி ஒரு கணம் அந்தரத்தில் மிதந்து, மலைச்சரிவில் இறங்கி உருளத் தொடங்கினாள்.

"ஷில்பா" என்று கத்தினான் பிருத்விராஜ்.

(தொடரும்)



அன்னையர், அறிவர்: கேட்பரீஸ் போர்ன்விடா கோகோ, மால்ட், பால் மற்றும் அசல் சீனியின் ஊட்ட நலன்களைக் கொண்டது. போர்ன்விடா குழந்தைகள் மிக விரும்பும் அத் தனிச் சுவையை பாலின் குணத்துடன் அளிக்கிறது.

தினமும் போர்ன்விடா அளிக்கப்படும் குழந்தைகள் வேலையிலும் விளையாட்டிலும் கூர்மையோடிருக்கிறார்கள். அது. அவர்களுக்கு ஆரோக்கியத்தையும் சுறுசுறுப்பையும் அளிக்கிறது. அவர்களுடைய வளர்ச்சிக்கு எல்லா வகையிலும் நலன் அளிக்கிறது.

அதன் தனிச் சுவையுடன் இணைந்திட்ட இன்றைய வளர்ச்சி.

கேட்பரீஸ்
போர்ன்விடா





மலர் என்பார்,
மதி என்பார்,
மயில் என்பார்.
எப்படி
அழைப்பினும்
கண்ணே,
ஈடில்லை எதுவும்
உனக்கு!
ஸென்ஸேஷன்ஸ்
ஸாரிகள் மற்றும் டிரெஸ் மெட்டீரியல்ஸ்
மஃபத்லால்
—நம்பிக்கைக்குப் பெயர் பெற்றது
மஃபத்லால்
ஃபேப்ரிக்ஸ்
Location Courtesy: The Taj Mahal Hotel, Bombay.
MF 635 D TAM

மேளம் கொட்டு தாலி கட்டு

விஜுசக்ரவர்த்தியின் பெண் சரண்யா. சரண்யாவின் முறைமாப்பிள்ளை ராமராஜன். விஜுசக்ரவர்த்தி மகளை, முறைப் பையனுக்குக் கட்டித்தர மாட்டேன் என்று சூளுரைப்பு. கதாநாயகன் ராமராஜன், முறைப் பெண்ணையே கட்டிக் கொள்வேன் என்று சபதம். இடையில் கிராமத்து மைனரின் வில்லத்தனம். சாம்பிராணிப் புகை போடும் ஒரு நாரத எஸ். எஸ். சந்திரன். ரேக்ளா வண்டி ரேஸ். டிஷ்யூம். டிஷ்யூம். டிஷ்யூம். சுபம்.

கிராமத்து மைனர் பாண்டியன். முதன் முறையாக வில்லன். 'ஆஹா, ஓஹோ, அபாரம்' என்ற வார்த்தைகள் எல்லாம் பக்கத்தில் நிற்காமல் ஓடுகின்றன. என்னை உபயோகி, என்னை உபயோகி என்று கெஞ்சும் ஒரே வார்த்தை, 'சகிக்கவில்லை.'

சரண்யாவிற்குத் தமிழ் சினிமா உலகில் நாயகன் படம் மூலம் ஓர் அரியாசனம் தந்து உட்கார வைத்திருந்தார்கள். அதைக் காலால் உதைத்துக் கீழே தள்ளிவிட்டார் அவர். இரண்டு சிரிப்பு, இரண்டு டூயட், இரண்டு அழுகை. இதற்கொரு சரண்யா. ஐயோ பாவம்!

ராமராஜனுக்கு ஏதோ ஒரு முனிவரின் சாபம், விமோசனமே ஆகாமல் இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அதனால் தான் அதே கிராமத்து ஹீரோ, வெட்டு, குத்து பாவமே இல்லாத முகம் என்று தொடர்கிறார்...

எஸ். எஸ். சந்திரன், கோவை சரளா, சின்னி ஜெயந்த். வெற்றி பெற வாய்ப்பே இல்லாத 'கூத்து'க் கூட்டணி.

அந்தப் பைத்தியம், கதையில் அவ்வப்போது தாலியுடனும் ஒரு முன்கதைச் சுருக்கத்துடனும் தலை நீட்டுகிறது. கடைசியில் பழிவாங்குவதற்காக உபயோகப்படுத்தப் படும் காரெக்டர். அது மட்டும் டைரக்டரின் புத்திசாலித்தனத்தை ஓரளவு சொல்கிறது.

இசை ஹேமதாஸன். (கேமதாஸன்?) அறிமுக மியூஸிக் டைரக்டரோ? இரண்டு பாடல்கள் பரவாயில்லை. நெஞ்சத்தில் மஞ்சம் போட்டுத் தாலாட்டுகின்றன.

ம்ஹூம்! என்னத்தைச் சொல்வது?

— ஜெயமன்மதன்



அ) ... கள்/திருமகள் டெபாசிட்டுகளை ரூ. 1000 அல்லது அதன் மடங்குகளில் டெபாசிட் பெற்றுக் கொள்ளப் படும்.

ஆ) ரெக்கரிங் டெபாசிட்டுகளை ரூ. 25 அல்லது அதன் மடங்குகளில் பெற்றுக் கொள்ளப்படும்.

பாங்குகள் அல்லாத பண முதலீட்டுக் கம்பெனிகளின் விதிகள் (ரிசர்வ் பாங்கு) 1977-பாங்குகள் அல்லாத முதலீட்டுக் கம்பெனிகள் மற்றும் இதர பாங்குகள் அல்லாத கம்பெனிகளுக்கான (விளம்பரம்) விதிமுறைகள் 1977-ன் படி, கீழ்க்கண்ட விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

A. கம்பெனியின் பெயர் : லக்ஷ்மி ட்ரேட் கிரெடிட்ஸ் லிமிடெட்

B. கம்பெனி ஆரம்பிக்கப்பட்ட தேதி : 1.6.1977

C. கம்பெனியால் நடத்தப்படும் வியாபாரம் : மோட்டார் வாகனங்கள் மற்றும் மெஷின்களை தவணையில் வாங்க கடன் அளித்தல்.

D. கம்பெனியின் நடப்பு பற்றிய சிறிய விளக்கம் : கம்பெனியின் போர்ட் ஆப் டைரக்டர்கள் மேற்பார்வையில் மேனேஜிங் டைரக்டரால் கம்பெனி நடத்தப்படுகிறது.

E. கம்பெனி டைரக்டர்களின் பெயர், விலாசம் மற்றும் தொழில்

பெயர்	விலாசம்	தொழில்
1. திரு. P.G. சரண்யன் சேர்மன்	15, சலிவன் கார்டன் காலனி, கீழ்பாக்கம், சென்னை 600 010	பாங்கர்.
2. திரு. ஸ்ரீஹரி நாயுடு	12, ரயில்வே ஸ்டேஷன் ரோடு, குடியாத்தம், வடஆற்காடு மாவட்டம் தமிழ்நாடு	தொழிலதிபர்.
3. திரு. H.R. பலவராஜ்	26/A 2, ... ரோடு, பெங்களூர் 560 052 கர்நாடக மாநிலம்.	தொழிலதிபர்.
4. திரு. ... செட்டியார்	624, அண்ணா சாலை, சென்னை 600 006.	தொழிலதிபர்.
5. திரு. M.P. சிவண்ணா	பொம்மனஹள்ளி, D.R. காலேஜ்போஸ்ட், பெங்களூர் 560 029.	தொழிலதிபர்.
6. திரு. J. மோகன் ராஜ்	மஹாத்மாகாந்தி ரோடு, வெங்கல் போஸ்ட், கரூர் தாலுக்கா, திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.	விவசாயி.
7. திரு. S. பிரேம்சந்த் (மானேஜிங் டைரக்டர்)	15, சலிவன் கார்டன் காலனி, கீழ்பாக்கம், சென்னை 600 010.	தொழிலதிபர்.

F. இந்த விளம்பரம் பிரசுரமான ஆண்டின் முந்தைய மூன்று ஆண்டுகளில் கம்பெனிக்கு ஏற்பட்ட லாபங்கள் - (வருமானவரி செலுத்துவதற்கான ஏற்பாட்டின் முன்பும், பின்பும்)

ஆண்டு முடிவின் லாபம்.	வரிக்கான ஏற்பாட்டின் முன் ஏற்பட்ட லாபம். ரூ.	வரிக்கான ஏற்பாடு செய்தபின் லாபம். ரூ.	அளிக்கப் பட்ட டிவிடெண்டு.
31-12-1985	1,52,466.00	1,23,589.00	15%
31-12-1986	2,55,604.00	2,29,691.00	16%
31-12-1987	4,52,167.00	3,73,829.00	16%

G. தற்போதைய, கணக்கு சரிபார்க்கப்பட்ட, பாலன்ஸ்ஷீட்டின்படி, கம்பெனியின் நிதிநிலைமையின் விளக்கம்.

கம்பெனியின் நிதிநிலைமை

கடன்கள்	31.12.87	31.12.86	சொத்துக்கள்	31.12.87	31.12.86
	(ரூ. லட்சங்களில்)			(ரூ. லட்சங்களில்)	
ஷேர் கேபிடல்	20.40	20.24	நிலையான சொத்துக்கள்	38.95	29.36
இருப்பு மற்றும் அதிகப்படி லாபம்	13.68	13.21	மற்ற முதலீடுகள்	0.24	0.10
பாதுகாப் புள்ள கடன்கள்	28.80	17.85	சொத்துக்கள், கொடுத்த கடன்கள், அட்வான்ஸ் தொகைகள்	164.63	97.07
பாதுகாப்பில் லாத வாங்கிய முடியாத கடன்கள்	109.26	62.31			
தற்போதைய கடன்கள்	31.68	12.92	இதர செலவுகள்	—	—
மொத்தம்	203.82	126.53	மொத்தம்	203.82	126.53

தொடரும் கடன்கள் - இல்லை.

H. a) விதிகளின்படி, முதலீட்டுத் தொகைகள் மூலம் கம்பெனியால் திரட்ட முடியும் தொகை - ரூபாய் 217 லட்சங்கள்.

b) 31-12-1987 அன்று வரை டெபாசிட்டுகளின் கூட்டுத் தொகை - ரூ. 109.26 லட்சம்.

I. கம்பெனியில் OVERDUE மற்றும் UNCLAIMED டெபாசிட்டுகள் இல்லை.

J. i) விதிகளின்படி எல்லா தகுதிகளையும் கம்பெனி பெற்றிருக்கிறது.

ii) இந்திய ரிசர்வ் பேங்கின் விதிகள் கடைப்பிடிப்பதால் மட்டும் டெபாசிட்களை திரும்ப அளிப்பதற்கு ரிசர்வ் பாங்கின் உத்தரவாதம் கிடையாது.

iii) இந்தக் கம்பெனியில் செய்யப்படும் முதலீடுகள் பாதுகாப்பானவை அல்லாத ரகத்தைச் சேர்ந்தது. மற்ற, பாதுகாப்பற்ற கடன் தொகைகளுக்கு ஈடாக மதிக்கப்படுகிறது.

போர்டின் ஆணைப்படி,
லக்ஷ்மி ட்ரேட் கிரெடிட் லிமிடெட்.

P.G. சரண்யன்,
சேர்மன்
(கருர்வைஸ்யா பாங்கின் முன்னாள் சேர்மன்)
சென்னை.

S. பிரேம்சந்த்
மானேஜிங் டைரக்டர்.


லக்ஷ்மி ட்ரேட் கிரெடிட்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : கிங்ராஜ் எஸ்டேட், 624, அண்ணாசாலை, சென்னை 600 006.
தொலைபேசி : 476646/470311.
கிளை : 80, ஸ்டேஷன் தெரு, ராதா நகர், குரோம்பேட், சென்னை 600 044. தொலைபேசி : 401267.

LTC :
கடந்த 11 வருட காலமாக
எங்கள் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ள
வாடிக்கையாளர்களுக்கு நன்றி !


துப்பறியும்
சூர்யா-கிரண்
நவீன் பிரதாப் முல்லிக்.
பயணிகள் எல்லாரும் பயந்து போனார்கள்.
ஓர் அறிவிப்புத் தொடர்ந்தது...
நமது விமானம் கடத்தப்படுகிறது. ஜெட்டாவின் பழைய விமான நிலையத்துக்குச் செல்கிறோம்...
ஜெட்டாவில் கேட்பாரற்றுக் கிடந்த விமானத்தளம்...
நமது பலி ஆடு வருகிறது!
ஒவ்வொருவராய் வரவேண்டும்!
தப்பி ஓடப் பார்க்காதீங்க; குண்டு துளைக்கும்!
தனித்தனியாய், ஒவ்வொருத்தராய் இந்த அறைக்குள் நுழையணும்.
இவங்க நோக்கம் என்ன? புரியலையே?
உள்ளே போங்க மேடம்; சீக்கிரம்!
அறைக்குள் நுழைந்த கிரண் பிரமித்துப் போனாள்!
அவன் எதிரே கல்தான் உட்கார்ந்திருந்தான்!
ஓகே! இந்தப் பெண்தான்!
6

(தொடரும்)


நான் ஸின்த்தால் உபயோகிக்கிறேன். நீங்கள்?
Godrej
NEW CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
CINTHOL
வினோதின் உடலுக்கும் உள்ளத்திற்கும் தன்னம்பிக்கை தருவது ஸின்த்தால்
MADISON-G-001-TAM



அத்தியாயம் 35

“வேளை நெருங்கிவிட்டது”

நூறு வருஷங்களுக்கு முன்பு கட்டப் பட்டு, இப்போது பாழடைந்து காடு அடர்ந்திருந்த பள்ளிப் படைக் கோவிலை முன்னொரு தடவை நாம் பார்த்திருக்கிறோம். ஆழ்வார்க்கடியான் இங்கே ஒளிந்திருந்து தான் ரவிதாஸன் முதலியவர்களின் சதியைப் பற்றி ஓரளவு தெரிந்து கொண்டான். அதே இடத்துக்கு இப்போது வந்தியத்தேவனும் மற்றவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

பாழடைந்த பள்ளிப் படையின் ஒரு பக்கத்துச் சுவர் ஓரமாக வந்தியத்தேவனையும் அவன் குதிரையையும் அழைத்து வந்தார்கள்.

“அப்பனே! சற்று நீ இங்கேயே இரு! உன்னைக் கூப்பிட வேண்டிய சமயத்தில் கூப்பிடுகிறோம். தப்பித்துச் செல்லலாம் என்று கனவு காணாதே! பழக்கப்பட்டவர்களைத் தவிர வேறு யாரும் இக்காட்டுக்குள் வரவும் முடியாது; வெளியேறவும் முடியாது. அப்படி வெளியேற முயன்றால், நிச்சயம் உயிரை இழப்பாய்!” என்றான் ரவிதாஸன்.

“அப்படி நான் வழி கண்டு பிடித்துப்போகப் பார்த்தால் நீ மந்திரம் போட்டுக் கொன்று விடுவாய்! இல்லையா,... மந்திரவாதி!” என்று கூறி வந்தியத் தேவன் நகைத்தான்.

“சிரி, சிரி! நன்றாய்ச் சிரி!” என்று சொல்லி, ரவிதாஸனும் சிரித்தான்.

அச்சமயம் பார்த்து எங்கேயோ தூரத்தில் நரி ஒன்று ஊளையிடத் தொடங்கியது. அதைக் கேட்டுப் பக்கத்தில் எங்கேயோ கோட்டான் ஒன்று முனங்கியது.

வந்தியத் தேவனுடைய உடல் சிலிர்த்தது. குளிரினால் அல்ல.. அடர்ந்த அந்தக் காட்டின் மத்தியில் வாடைக் காற்றுப் பிரவேசிக்கவும் பயந்ததாகக் காணப் பட்டது. ஏன்? அங்கே மழைகூட அவ்வளவாகப் பெய்ததாகத் தெரியவில்லை. தரையில் சில இடங்களில் மட்டும் மழைத் துளிகள் சொட்டி ஈரமாயிருந்தது. காற்று இல்லாதபடியால் இறுக்கமாக இருந்தது. அங்கே வந்து சேர்வதற்குள் வந்தியத் தேவனுடைய அரைத் துணி உலர்ந்து போயிருந்தது. சுற்றிக் கட்டியிருந்த துணிச் சுருள் மட்டும் ஈரமாயிருந்தது. அதை எடுத்து விரித்துப் பக்கத்தில் கிடந்த பாறாங் கல்லின் மீது உலர்த்தினான். அதே கல்லின் ஒரு மூலையில் வந்தியத் தேவன் உட்கார்ந்து பள்ளிப்படைச் சுவரின் மீது சாய்ந்து

அமரர் கல்கி

கொண்டான். அவனுக்குக் காவலாக அருகில் ஒருவன் மட்டும் இருந்தான்.

சற்றுத் தூரத்தில் காட்டின் மத்தியில் ஏற்பட்டிருந்த இடைவெளியில் அவனுடன் வந்தவர்களில் மற்றவர்கள் வட்ட வடிவமாக உட்கார்ந்தார்கள். பள்ளிப் படைக்கு உள்ளேயிருந்து ஒருவன் பழைய சிம்மாதனம் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து போட்டான். அதில், 'சக்கரவர்த்தி' என்று அழைக்கப்பட்ட சிறுவனை உட்காரச் செய்தார்கள். தீவர்த்திகளில் இரண்டை மட்டும் வைத்துக் கொண்டு மற்றவற்றை அணைத்து விட்டார்கள். அவ்விதம் தீவர்த்திகளை அணைத்த போது எழுந்த புகை நாலாபுறமும் சூழ்ந்தது.

''ராணி இன்னும் வரவில்லையே?'' என்றான் ஒருவன்.

''சமயம் பார்த்துத்தானே வர வேண்டும்? இரண்டாவது ஜாமத்திலேதான் நானும் வரச் சொல்லியிருக்கிறேன். அதுவரையில் வழுதி குலத்துப் புகழ் மாலையை யாராவது பாடுங்கள்!'' என்றான் சோமன் சாம்பவன்.

இடும்பன்காரி உடுக்கு ஒன்றை எடுத்து இலேசாக அதைத் தட்டினான். தேவராளன் ஏதோ ஒரு பாட்டுப் பாடத் தொடங்கினான்.

வந்தியத்தேவன் தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான்; கேட்டுக் கொண்டுமிருந்தான். 'வழுதி குலம்'' என்பது பாண்டிய குலம் என்று அவன் அறிந்திருந்தான். பாடல் ஏதோ ஒரு சோகப் பிரலாபமாக அவன் காதில் தொனித்தது. உடுக்கின் நாதமும் சோகப் பாடலின் இசையும் அவன் உள்ளத்தில் ஒரு நெகிழ்ச்சியை உண்டாக்கின. பாடலில் சிற்சில வார்த்தைகள் அவன் காதில் விழுந்தன. அவற்றிலிருந்து முன்னால் நடந்த மாபெரும் போரைப் பற்றிய வரலாறு அவன் நினைவுக்கு வந்தது.

ஆம்; அங்கேதான் வரகுண பாண்டியனுக்கும் அபராஜித பல்லவனுக்கும் மூன்று நாட்கள் கொடிய யுத்தம் நடந்தது. பல்லவனுக்குத் துணையாகக் கங்க மன்னன் பிருதிவீபதி வந்தான். அப்போரில் மாண்ட லட்சக்கணக்கான வீரர்களைப் போல் அம்மகா வீரனும் இறந்து விழுந்தான். அவனுடைய ஞாபகமாகக் கட்டிய பள்ளிப்படைக் கோவில்தான் இப்போது சதிகாரர்கள் கூடும் இடமாக அமைந்திருந்தது.

கங்க மன்னன் இறந்ததும் பல்லவர் படைகள் சிதறி ஓடத் தொடங்கின. பாண்டிய சைன்யத்தின் வெற்றி நிச்சயம் என்று தோன்றியது. இச்சமயத்தில் சோழர் படைகள் பல்லவர்களின் உதவிக்கு வந்தன. அப்படைக்குத் தலைமை வகித்துத் திருமேனியில் தொண்ணூற்றாறு புண் சுமந்த விஜயாலய சோழன் வந்தான். இரண்டு கால்களையும் முன்னமே இழந்திருந்த அவ்வீரப் பெருங்கிழவனை நாலு பேர் தூக்கிக் கொண்டு வந்தார்கள். இரண்டு கைகளிலும் இரண்டு நெடிய வாள்களை ஏந்திக் கொண்டு அவன் பாண்டியர் சைன்யத்தில் புகுந்தான். இரண்டு வாள்களையும் சக்ராகாரமாகச் சுழற்றிக் கொண்டே போனான். அவன் சென்ற இடங்களிலெல்லாம் இருபுறமும் பாண்டிய வீரர்களின் உயிரற்ற உடல்கள் மலை மலையாகக் குவிந்தன.

சிதறி ஓடிய பல்லவ சேனா வீரர்கள் திரும்பி வரத் தொடங்கினார்கள்.

ஜண ஜண ஜண ஜணார்! — பதினாயிரம் வாள்கள் மாலைச் சூரியனின் மஞ்சள் வெயிலில் மின்னிக் கொண்டு வந்தன!

டண டண டண டணார்! — பதினாயிரம் வேல்கள் இன்னொரு பக்கமிருந்து ஒளி வீசிப் பாய்ந்து வந்தன!



வாள்களும் வேல்களும் மோதின!

ஆயிரம் பதினாயிரம் தலைகள் நாலா புறமும் உருண்டன.

ஆயிரம் பதினாயிரம் உயிரற்ற உடல்கள் விழுந்தன!

ஈ ஈ ஈ ஈ! — குதிரைகள் கனைத்துக் கொண்டே செத்து விழுந்தன!

ப்ளீ ளீ ளீ ளீ! — யானைகள் பிளிறிக் கொண்டே மாண்டு விழுந்தன!

இரத்த வெள்ளத்தில் செத்த மனிதர்கள் — மிருகங்களின் உடல்கள் மிதந்தன!

இருபதினாயிரம் கொட்டைப் பருந்துகள் வட்டமிட்டுப் பறந்து வானத்தை மூடி மறைத்தன!

முப்பதினாயிரம் நரிகள் ஊளையிட்டுக் கொண்டு ஓடி வந்து போர்க் களத்தைச் சூழ்ந்து கொண்டன!

''ஐயோ ஓ ஓ ஓ!'' என்ற ஐம்பதினாயிரம் ஓலக் குரல்கள் ஒன்றாகச் சேர்ந்து எழுந்தன!

''விடாதே! பிடி! துரத்து! வெட்டு! குத்து!''

இவ்விதம் நூறு ஆயிரம் குரல்கள் முழங்கின.

பதினாயிரம் ஜயபேரிகைகள் ''அதம்! அதம்! அதம்!'' என்று சப்தித்தன.

இருபதினாயிரம் வெற்றிச் சங்கங்கள் ''பூம்! பூம்! பூம்!'' என்று ஒலித்தன.

''ஹா! ஹா! ஹா! ஹா!!'' என்று அறுபதினாயிரம் பேய்கள் சிரித்தன.

வந்தியத்தேவன் திடுக்கிட்டுக் கண் விழித்தான். நாலாபுறமும் பார்த்து விழித்தான். பள்ளிப் படைச் சுவரில் சாய்ந்தபடியே சிறிது நேரம் தான் கண்ணயர்ந்து விட்டதாக அறிந்து கொண்டான். அந்த அரைத் தூக்கத்தில் கண்ட பயங்கரமான கனவை மறுபடி நினைத்துப் பார்த்தான். கனவுதானா அது? இல்லை! உடுக்கின் முழக்கத்துக்கு இணங்கத் தேவராளன் பாடிய பாடலில் போர்க்களத்தைப் பற்றிச் செய்த வர்ணனைதான் அப்படி அவன் மனக்கண் முன் தோன்றச் செய்திருக்க வேண்டும்.

அச்சமயம் தேவராளன் பாண்டியர் படைக்கு முன்னால் பல்லவரும் கங்கரும் தோற்று ஓடியதைப் பற்றிப் பாடிக் கொண்டிருந்தான். அதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் சிரித்த களிச் சிரிப்புத்தான் அப்படி அநேகாயிரம் பேய்களின் சிரிப்பைப் போல் ஒலித்து வந்தியத்தேவனைத் திடுக்கிட்டுக் கண் விழிக்கச் செய்திருக்க வேண்டும்

உடுக்கு முழக்கம் திடீர் என்று நின்றது. தேவ

ராஜனும் பாட்டை உடனே நிறுத்தினான்.

சற்றுத் தூரத்தில் ஒருதீவர்த்தி வெளிச்சம் தெரிந்தது. அது நெருங்கி நெருங்கி வந்தது. தீவர்த்தி வெளிச்சத்தைத் தொடர்ந்து ஒரு பல்லக்கு வந்தது. பல்லக்கைச் சுமந்து வந்தவர்கள் அதைக் கீழே இறக்கி வைத்தார்கள். பல்லக்கின் திரைகள் விலகின. உள்ளேயிருந்து ஒரு ஸ்திரீ வெளியில் வந்தாள். ஆம்; அவள் பழுவூர் ராணி நந்தினிதான். ஆனால் முன் தடவைகளில் வந்தியத்தேவன் பார்த்தபோது அவள் சர்வாலங்கார பூஷிதையான மோகினியாக விளங்கினாள். இப்போது தலைவிரி கோலமான உக்கிர துர்க்கா தேவியாகக் காட்சி தந்தாள்.

அவளை இந்தத் தோற்றத்தில் பார்த்த வந்தியத்தேவனுடைய உள்ளத்தில் ஒரு திகில் தோன்றியது; அவன் உடம்பில் ஒரு நடுக்கம் ஏற்பட்டது.

நந்தினி பல்லக்கிலிருந்து இறங்கியதும் சிம்மாதனத்தில் வீற்றிருந்த சிறுவனைப் பார்த்தாள். அவனையே பார்த்தவண்ணம் நடந்து வந்தாள்.



சிறுவனும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். மற்ற அனைவரும் அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சிறுவனைப் பாழும் மண்டபத்துக்குத் தேடி ஓடி வந்த ஸ்திரீ — அவனால் அம்மா என்று அழைக்கப்பட்டவள் — சிம்மாதனத்துக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தாள்.

நந்தினி சிறுவன் அருகில் வந்ததும் தன் இரு கரங்களையும் நீட்டினாள்.

சிறுவன் அவளையும் தனக்குப் பின்னால் நின்ற ஸ்திரீயையும் மாறி மாறிப் பார்த்தான்.

"நீதானே என் அம்மா? இவள் இல்லையே?" என்று கேட்டான்.

"ஆம், கண்மணி!"

"இவள் ஏன் என்னுடைய அம்மா என்று சொல்லிக் கொள்கிறாள்?"

"அவள் உன்னை வளர்த்த தாய்!"

"நீ ஏன் என்னை வளர்க்கவில்லை? ஏன் உன்னுடன் என்னை வைத்துக் கொள்ளவில்லை? இவள் எதற்காக என்னை எங்கேயோ மலைக் குகையில் ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறாள்?"

"கண்மணி! உன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகத் தான். உன் தந்தையைக் கொன்றவர்களைப் பழிக்குப் பழி வாங்குவதற்காகத்தான்!"

"ஆமாம்; அது எனக்குத் தெரியும்!" என்று சிறுவன் எழுந்து நந்தினியை அணுகினான்.

நந்தினி அவனைத் தன் இரு கரங்களாலும் அணைத்துக் கொண்டாள். உச்சி முகந்தாள். சிறுவனும் அவளைக் கெட்டியாகப் பிடித்துக் கட்டிக் கொண்டான். மறுபடியும் அவள் தன்னை விட்டுப் போகாமலிருக்கும் பொருட்டு அவன் அப்படிப் பிடித்துக் கொண்டான் போலும்.

ஆயினும் இந்தக் காட்சி நீடித்திருக்கவில்லை. அவனுடைய குஞ்சுக் கரங்களை நந்தினி பலவந்தமாக எடுத்துத் தன்னை விடுவித்துக் கொண்டாள். சிறுவனைச் சிம்மாதனத்தில் உட்கார வைத்தாள். மீண்டும் பல்லக்கின் அருகில் சென்றாள். அதனுள்ளிருந்து நாம் முன் பார்த்திருக்கும் வாளை எடுத்துக் கொண்டாள். பல்லக்குத் தூக்கி வந்தவர்களைப் பார்த்து ஏதோ சமிக்ஞை செய்தாள். அவர்கள் பல்லக்கைத் தூக்கிக் கொண்டு சற்றுத் தூரத்தில் போய் மறைவாக உட்கார்ந்து கொண்டார்கள்.

நந்தினி மீண்டும் சிம்மாதனத்தின் அருகில் வந்தாள். கத்தியை அச் சிம்மாதனத்தின் மீது குறுக்காக வைத்தாள்.

சிறுவன் அதை அடங்கா ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டே "நான் இதைக் கையில் எடுக்கலாமா?" என்று கேட்டான்.

"சற்றுப் பொறு, என் கண்மணி!" என்றாள் நந்தினி.

பிறகு, ரவிதாஸன் முதலியவர்களையும் வரிசைக்கிரமமாக உற்றுப் பார்த்தாள்.

"சபதம் எடுத்துக் கொண்டவர்களைத் தவிர இங்கு வேறு யாரும் இல்லையே?" என்று கேட்டாள்.

"இல்லை, தேவி!" என்றான் சோமன் சாம்பவன்.

ரவிதாஸனைப் பார்த்து நந்தினி "சேநாபதி!......" என்று ஆரம்பித்தாள்.

ரவிதாஸன் சிரித்தான்.

"இன்றைக்கு உமக்குச் சிரிப்பாயிருக்கிறது. அடுத்த மாதம் இந்த நாளில் எப்படியிருக்குமோ, யார் கண்டது!"

"தேவி! அந்த நல்ல நாள் எப்போது வரப் போகிறது என்று எத்தனையோ காலமாக நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம்."

"ஐயா! நாமோ ஒரு சிலர். நம் சக்கரவர்த்தி சின்னஞ்சிறு குழந்தை. சோழ ராஜ்யம் மகத்தானது. சோழர்களின் சேனாபலம் அளவற்றது. நாம் அவசரப்பட்டிருந்தோமானால் அடியோடு காரியம் கெட்டுப் போயிருக்கும். பொறுமையாக இருந்ததினால் இப்போது காரியசித்தி அடையும் வேளை நெருங்கியிருக்கிறது. ரவிதாஸரே! நீர் ஏதாவது சொல்ல வேண்டியதிருக்கிறதா? இங்குள்ள வேறு யாரேனும் ஏதாவது சொல்ல வேண்டியதிருக்கிறதா!"

ரவிதாஸன் அங்கே இருந்தவர்களின் முகங்களை வரிசையாகப் பார்த்துக் கொண்டு வந்தான். அனைவரும் மோன விரதம் கொண்டவர்

களாய்க் காணப் பட்டார்கள்.

"தேவி! நாங்கள் சொல்ல வேண்டியது எதுவும் இல்லை. தாங்கள் தான் சொல்ல வேண்டும். சபதம் நிறைவேறும் வேளை நெருங்கி விட்டது என்றீர்கள். எங்கே, எப்படி, யார் மூலமாக நிறைவேறப்போகிறது என்று சொல்லி அருள வேண்டும்" என்றான்.

"ஆகட்டும்; அதைச் சொல்வதற்காகவே இங்கு வந்தேன். அதற்காகவே உங்கள் எல்லாரையும் இங்கே தவறாமல் வரச் சொன்னேன். நம்முடைய சக்கரவர்த்தியையும் அழைத்து வரச் செய்தேன்" என்றாள் நந்தினி.

சிம்மாதனத்தில் வீற்றிருந்த சிறுவன் உள்பட அனைவரும் நந்தினியின் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள். அவள் மேலும் கூறினாள்:

"உங்களில் சிலர் அவசரப்பட்டீர்கள். நாம் எடுத்துக் கொண்ட சபதத்தை மறந்து விட்டேனோ என்றும் சிலர் சந்தேகப்பட்டீர்கள். அந்தச் சந்தேகம் அடாதது. மறவாமல் நினைவு வைத்துக் கொள்ள உங்கள் எல்லோரைக் காட்டிலும் எனக்குத்தான் காரணம் அதிகம் உண்டு. இல்லை; நான் மறக்கவில்லை. சென்ற மூன்று ஆண்டுகளாக அல்லும் பகலும் அனவரதமும் நான் வேறு எதைப் பற்றியும் சிந்தித்ததில்லை. நாம் எடுத்துக் கொண்ட சபதத்தின்படி பழி வாங்குவதற்குச் சமய சந்தர்ப்பங்களையும் தந்திர உபாயங்களையும் தவிர வேறு எதையும் பற்றி நான் எண்ணியதில்லை; எங்கே சென்றாலும், என்ன காரியம் செய்தாலும், யாரிடம் பேசினாலும், நமது நோக்கம் நிறைவேறுவதற்கு அதனால் உபயோகம் உண்டா என்பதைத் தவிர வேறு நினைவு எனக்கில்லை. சமய சந்தர்ப்பங்கள் இப்போது கூடியிருக்கின்றன. சோழ நாட்டுச் சிற்றரசர்களும் பெருந்தர அதிகாரிகளும் இரு பிரிவுகளாகப் பிரிந்திருக்கிறார்கள். பழுவேட்டரையர், சம்புவரையர் முதலானோர் மதுராந்தகனுக்குப் பட்டம் கட்ட முடிவு செய்து விட்டார்கள். கொடும்பாளூர் பூதி விக்கிரம கேசரியும் திருக்கோவலூர் மலையமானும் அதற்கு விரோதமாயிருக்கிறார்கள். பூதிவிக்கிரம கேசரி தென் திசைச் சைன்யத்துடன் தஞ்சை நோக்கி வருவதாகக் கேள்விப்படுகிறேன். திருக்கோவலூர் மலையமான் படை திரட்டி வருவதாகவும் அறிகிறேன். இரு தரப்பாருக்கும் எந்த நிமிஷமும் யுத்தம் மூளலாம்......"

"தேவி! அப்படி யுத்தம் மூளாதிருப்பதற்குத் தாங்கள் பெருமுயற்சி செய்து வருவதாகக் கேள்வியுறுகிறோம். கடம்பூர் சம்புவரையன் மாளிகையில் சமரசப் பேச்சு நடக்கப் போவதாக அறிகிறோம்."

"ஆமாம்; அந்த ஏற்பாடு செய்திருப்பது நானேதான். ஆனால் என்ன காரணத்திற்காகவென்று உங்களால் ஊகிக்க முடியவில்லையா?"

"முடியவில்லை, ராணி! ஒரு பெண் உள்ளத்தின் ஆழத்தைக் கண்டுபிடிக்கச் சர்வேசுவரனால் கூட முடியாது என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். எங்களால் எப்படி முடியும்?"

"அது உங்களால் முடியாத காரியந்தான். நான் சொல்கிறேன்; தெரிந்து கொள்ளுங்கள். நம்முடைய சபதம் நிறைவேறுவதற்கு முன்னால் சோழ ராஜ்யத்தில் இந்த உள்நாட்டுச் சண்டை மூண்டால், அதன் விளைவு என்ன ஆகும் என்று சொல்ல முடியாது. சுந்தர சோழன் இன்னும் உயிரோடிருக்கிறான்; அன்பில் பிரம்மராயன் ஒருவனும் இருக்கிறான். இவர்கள் தலையிட்டு இரு கட்சிக்காரர்களையும் அடக்கிவிடுவார்கள். அல்லது ஒரு கட்சி தோற்று இன்னொரு கட்சி வலுத்து விட்டாலும் நம்முடைய நோக்கம் நிறைவேறுவது அசாத்தியமாகி விடும். அதற்காகவே இந்தச் சமாதானப் பேச்சை இப்போது தொடங்கியிருக்கிறேன். சண்டை உண்மையாக மூளுவதற்குள்ளே நம் நோக்கத்தை நிறைவேற்றி விட வேண்டும். அப்படி நிறைவேறிய பிறகு சோழ ராஜ்யத்துச் சிற்றரசர்களுக்குள் மூளும் சண்டைக்கு முடிவேயிராது. இரு கட்சியாரும் சர்வநாசம் அடையும் வரையில் சண்டை நடந்து கொண்டேயிருக்கும். இப்போது தெரிகிறதா?... சமா

தானப் பேச்சு தொடங்கியதின் காரணம்?''

இதைக் கேட்டதும் அங்கே சூழ்ந்து நின்றவர்கள் எல்லாருடைய முகங்களிலும் வியப்புக்கும் உற்சாகத்துக்கும் அறிகுறிகள் காணப்பட்டன. பழுவூர் இளைய ராணியின் மதி நுட்பத்தை வியந்து அவர்கள் ஒருவருக்கொருவர் மெல்லிய குரலில் பேசிக் கொண்டார்கள். ரவிதாஸனும்கூட ஆச்சரியப்படாமலிருக்க முடியவில்லை.

"தேவி! தங்களுடைய அபூர்வமான முன் யோசனைத் திறனை வியக்கிறோம். சமாதானப் பேச்சின் கருத்தை அறிந்து கொண்டோம். ஆனால் சபதம் நிறைவேறும் நாள் நெருங்கி விட்டது என்றீர்கள். அதை நடத்துவது யார்? எப்படி? எப்போது?'' என்றான்.

"அதற்கும் சேர்த்துத்தான் இந்த யுக்தி செய்திருக்கிறேன். சமாதானப் பேச்சு என்ற வியாஜத்தின் பேரில் நமது முதற் பகைவனைக் கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்கு வரும்படி அழைப்பு அனுப்பியிருக்கிறது. அவன் அங்கே கட்டாயம் வந்து சேருவான். நம்முடைய சபதத்தை அங்கே தான் நிறைவேற்றியாக வேண்டும். வீர பாண்டிய சக்கரவர்த்தியின் ஆபத்துதவிகளே! உங்களுடைய பழி தீரும் வேளை நெருங்கி விட்டது. இன்றைக்குச் சனிக்கிழமையல்லவா? அடுத்த சனிக்கிழமைக்குள் நம்முடைய சபதம் நிறைவேறி விடும்!...''

அங்கே இருந்த இருபது பேர்களும் ஏக காலத்தில் ஆஹா காரம் செய்தார்கள்.

சிலர் துள்ளிக் குதித்தார்கள்.

உடுக்கு வைத்திருந்தவன் உற்சாக மிகுதியினால் அதை இரண்டு தடவை தட்டினான்.

மரக்கிளைகளில் தூங்கிக் கொண்டிருந்த ஆந்தைகள் விழித்து உறுமிக் கொண்டு வேறு கிளைகளுக்குத் தாவின.

வௌவால்கள் சடசடவென்று சிறகுகளை அடித்துக் கொண்டு ஓடின.

வந்தியத்தேவனுடைய குதிரை உடம்பைச் சிலிர்த்துக் கொண்டது.

வந்தியத்தேவனும் நிமிர்ந்து பார்த்தான். நந்தினி தன்னைச் சுற்றியிருந்தவர்களிடம் ஏதோ பரபரப்புத் தரும் விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருந்தாள் என்பது மட்டுந்தான் தெரிந்தது. அவளுடைய பேச்சு ஒன்றும் அவன் காதில் விழவில்லை.

ரவிதாஸன் மற்றவர்களுடைய உற்சாகத்தைக் கையமர்த்தி அடக்கினான்.

"தேவி! தங்களுடைய கடைசி வார்த்தை எங்களுக்கு அளவிலாத குதூகலத்தை அளித்திருக்கிறது. நமது முதற் பகைவனைக் கொன்று பழி முடிக்கும் காலம் இவ்வளவு அண்மையில் வந்திருப்பதை எண்ணிக் களிக்கிறோம்! ஆனால், பழி முடிக்கும் பாக்கியம் யாருக்கு?'' என்று கேட்டான்.

"அதற்கு நமக்குள் போட்டி ஏற்படுவது இயற்கைதான். அதை யாருக்கும் மனத்தாங்கல் இல்லாத முறையில் முடிவு செய்வதற்காகவே வீர பாண்டியரின் திருக்குமாரச் சக்கரவர்த்தியை இங்கு அழைத்து வரச் செய்தேன். வீர பாண்டியரின் கத்தியும் இதோ இருக்கிறது. இந்தச் சின்னஞ்சிறு குழந்தை தந்தையின் கத்தியைத் தொட்டு நம்மில் எவர் கையில் கொடுக்கிறதோ, அவர் பழி முடிக்க வேண்டும். மற்றவர்கள் அக்கம் பக்கத்தில் உதவிக்குச் சித்தமாக நிற்க வேண்டும். ஏற்றுக் கொண்டவர் தவறி விட்டால் மற்றவர்கள் முன் வந்து முடிக்க வேண்டும். கடம்பூர் மாளிகைக்குள்ளேயே நான் இருப்பேன். இடும்பன் காரி கோட்டைக் காவலர்களில் ஒருவனாக இருப்பான். பழி முடிக்கும் பொறுப்பு ஏற்றுக் கொண்டவர் மாளிகைக்குள் பிரவேசிப்பதற்கு நாங்கள் உதவி செய்வோம். இந்த ஏற்பாடு உங்களுக்கெல்லாம் சம்மதந்தானே?''

ஆபத்துதவிகள் ஒருவரையொருவர் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டார்கள். எல்லாருக்கும் அந்த ஏற்பாடு சம்மதமாகவே தோன்றியது.

ரவிதாஸன் கூறினான்: — "தாங்கள் சொன்னது சரியான ஏற்பாடுதான். அதற்கு நாங்கள் எல்லாரும் சம்மதிக்கிறோம். ஆனால் இன்னும் ஒரு விஷயம். பழி முடிக்கும் பொறுப்பு



''நேற்று ராத்திரி என் வீட்டுக்குத் திருடன் வந்தான்....''

''ஐயய்யோ! அப்புறம்...?''

''சும்மா விடுவேனா... என் கஷ்டங்களைச் சொல்லி அழுது ஐந்நூறு ரூபாய் கடன் வாங்கி விட்டேன்....!''

— ஏ. ஆர். வீரராகவன்.

யாருக்குக் கிடைக்கிறதோ, அவர் சொல்கிறபடி மற்றவர்கள் கண்டிப்பாகக் கேட்கிறதென்று வைத்துக் கொள்ள வேண்டும். சக்கரவர்த்திக்குப் பிராயம் வருகிற வரையில் பழி முடித்தவன் இட்டதே சட்டமென்று மற்ற அனைவரும் நடந்து கொள்ள வேண்டும்.''

இதைக் கேட்ட நந்தினியின் முகத்தில் புன்னகை அரும்பியது.

''என்னையும் உட்படுத்தித் தானே சொல்கிறீர்?'' என்று கேட்டாள்.

''ஆம், தேவி! விதிவிலக்குச் செய்ய முடியாது!'' என்றான் ரவிதாஸன்.

''சந்தோஷம். இப்போது ரவிதாஸர் கூறியதும் உங்கள் எல்லாருக்கும் சம்மதந்தானே?'' என்று நந்தினி மற்றவர்களை நோக்கி வினவினாள்.

எல்லாரும் ஒருவரையொருவர் பார்த்தார்கள். மறுமொழி சொல்வதற்குத்தயங்கினார்கள்.சிலருக்குஅந்த ஏற்பாடு சம்மதமில்லையென்று தோன்றியது.

சோமன் சாம்பவன், ''அது எப்படி நியாயமாகும்? நமக்கு எல்லா உதவியும் அளித்து வரும் தேவியை எப்படிப் பொது விதிக்கு உட்படுத்த முடியும்?'' என்று கேட்டான்.

''என்னைப் பற்றிக் கவலை வேண்டாம். நான் உயிர் வாழ்ந்திருப்பதே வீரபாண்டியச் சக்கரவர்த்தியின் கொடூரக் கொலைக்குப் பழி வாங்குவதற்காகத்தான். அந்தப் பழியை முடித்துக் கொடுக்கிறவர் யாராயிருந்தாலும், அவருக்கு நான் என்றென்றும் அடிமையாக இருக்கச் சித்தம்!'' என்றாள் நந்தினி.

பின்னர், இந்தப் பேச்சுக்களையெல்லாம் புரிந்தும் புரியாமலும் கேட்டுக் கொண்டிருந்த சிறுவனை நந்தினி தேவி பார்த்து, ''என் கண்மணி! இந்த வீர வாள் உன் தந்தையினுடையது. இதை உன் குஞ்சுக் கையினால் எடுத்து இங்கே உள்ளவர்களில் உனக்கு யாரை அதிகமாய்ப் பிடித்திருக்கிறதோ, அவரிடம் கொடு!'' என்றாள்.

ரவிதாஸன் சற்று அருகில் வந்து ''சக்கரவர்த்தி! எங்களையெல்லாம் நன்றாய்ப் பாருங்கள்! எங்களில் யார் வீரன் என்றும், தைரியசாலி என்றும் தங்களுக்குத் தோன்றுகிறதோ, அவனிடம் இந்தப் பாண்டிய குலத்து வீர வாளைத் தொட்டுக் கொடுங்கள்!'' என்றான்.

சிம்மாசனத்தில் வீற்றிருந்த சிசு சக்கரவர்த்தி சுற்றுமுற்றும் பார்த்தார்.

எல்லாரும் அடங்காத ஆவலுடனும் பரபரப்புடனும் சக்கரவர்த்தியின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவருடைய கண்களும் ''என்னிடம் கொடுங்கள்! என்னிடம் கொடுங்கள்!'' என்று கெஞ்சும் பாவத்தைக் காட்டின.

ரவிதாஸனுடைய முகமும் கண்களும் மட்டும் ''என்னிடம் கொடுங்கள்!'' என்று அதிகார பூர்வமாகப் பயமுறுத்திக் கட்டளையிட்டன.

சிறுவன் இரண்டு மூன்று தடவை எல்லாரையும் திருப்பித் திருப்பிப் பார்த்த பின்னர், கத்தியைக் கையில் எடுத்தான். அதைத் தூக்க முடியாமல் தூக்கினான்.

அனைவருடைய பரபரப்பும் சிகரத்தை அடைந்தது.

சிறுவன் பளிச்சென்று நந்தினி நின்ற பக்கம் திரும்பினான். ''அம்மா! எனக்கு உன்னைத்தான் எல்லாரைக் காட்டிலும் அதிகமாகப் பிடித்திருக்கிறது. நான் பெரியவனாகும்வரையில் நீதான் எனக்காக இராஜ்யத்தை ஆள வேண்டும்!'' என்று சொல்லிக் கொண்டே வாளை அவளிடம் கொடுத்தான்.

(தொடரும்)

மானுடம் நியாயங்கள்!

அண்ணா ஊரிலிருந்து கடிதம் எழுதியிருந்தான்.

சம்பிரதாயமான விசாரிப்புகளுக்குப் பிறகு "போன ஞாயிறன்று அம்மா கிணற்றடியில் திடீரென்று விழுந்து விட்டார். டாக்டரிடம் கூட்டிப் போனோம். வலது கையும் வலது காலும் செயலிழந்து போய் விட்டன. இனி ஏதும் செய்ய முடியாது எனக் கையை விரித்து விட்டார்கள். நானும் உன் மன்னியும் எத்தனை நாட்கள்தான் லீவு போட முடியும்? ஆகவே ஒரு பெண்ணை வேலைக்கு அமர்த்தியிருக்கிறேன்...''

"சரி... அம்மா 'புறப்பட்டுப் போவதற்கு' ஆயத்தம் ஆகிவிட்டாள்'' என முடிவு செய்தேன். மாலையில் என் கணவர் வீடு வந்ததும் அண்ணாவின் கடிதத்தைக் காண்பித்தேன்.

"என்று புறப்படப் போகிறாய்?'' எனக் கேட்டார் கொஞ்சமும் பதற்றமில்லாமல்.

"நீங்கள் வரவில்லையா?'' எனக் கேட்டேன் ஆற்றாமையுடன்.

"நானா? நான் எதற்கு...? அத்தை நன்றாக வளைய வந்து கொண்டிருந்தபோதே என்னுடன் அதிகம் பேச மாட்டார்.''

"என்ன இருந்தாலும் வயசான தேகம்... என்றைக்கு என்ன நடக்குமோ...''

"கமலம்... உனக்கு அம்மாதான்... என்றைக்கும் நீ அவர்கள் குழந்தை. ஆனால் உனக்குப் பேரன் பிறந்தாகி விட்டது. வயது அவர்களுக்கு மட்டும் கூடவில்லை. நமக்கும் தான். எனக்கு இந்த 'பஸ்' பயணம் ஒத்துக் கொள்வதில்லை எனத் தெரியாதா உனக்கு?''

"ஏதோ சாக்குப் போக்கு... போன மாதம் அவர் ஒன்றுவிட்ட சித்தப்பா சென்னையில் காலமானதற்குக் கடிதமே ஒரு வாரம் கழித்துக் கிடைத்தது. துக்கம் விசாரிக்க மதுரையிலிருந்து சென்னைக்குப் பஸ்ஸில் போய் பஸ்ஸில் திரும்பி வந்தார். இப்போது கடலூருக்குப் பஸ்ஸில் போய் வரச் சிரமப்படுமாம். அப்போது அவர் சித்தப்பா... இப்போது சிரமப்படுவது என் அம்மாதானே....

என்ன சொல்லியும் அவர் கேட்கப் போவதில்லை என எனக்குத் தெரியும். மேலே வாக்குவாதத்தைத் தொடராமல் நான் மட்டும் அன்று இரவு புறப்பட்டேன்.

என் அம்மாவுக்கு மூன்று பெண்கள். நான் மூத்தவள். இரண்டாமவள் கல்யாணி. நியூயார்க்கில் இருக்கிறாள். கல்யாணம் முடிந்து போனவள்தான். வருஷா வருஷம் புது வருட வாழ்த்து அனுப்புவதுடன் சரி. கடைசித் தங்கை கஸ்தூரி அவளுடன் வேலை பார்த்த கிறிஸ்டோபரைக் கல்யாணம் செய்து கொள்வதற்காக "காதரீன்'' என்னும் பெயருடன் மதம் மாறிப் போனாள். அவளிடமிருந்து கடிதப் போக்குவரத்து கூடக் கிடையாது.

அம்மாவுக்கு அவள்தான் செல்லப் பெண். ஆனால் வீட்டுக்குத் தெரியாமல் — யாரிடமும் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் அவள் இப்படிச் செய்ததனால் அவள் விஷமாகிப் போனாள். அவள் பேச்சை எடுத்தாலே தன் காதுகளைப் பொத்திக் கொள்ளும் அளவுக்கு மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு விட்டாள்.

அம்மா....?

யாருக்குத்தான் அம்மா இல்லை... யார் தான் அம்மா இல்லாமல் பிறந்தார்கள்... ஆனால் எங்கள் அம்மா ஒரு தனிப் பிறவி. அண்ணாவிற்குப் பத்து வயது ஆகும் போதே அப்பா போய் விட்டார். கஸ்தூரி இரண்டு வயதுக் குழந்தை அப்போது.

வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டு — இருபத்து நான்கு மணி நேரத்தில் இருபது மணி நேரம் உழைத்து எங்களை ஆளாக்கிய அந்தத் தெய்வம் இப்போது சாய்ந்து கிடக்கிறது. பகலெல்லாம் எவரெவர் வீடுகளிலோ நடக்கும் சுப, அசுப காரியங்களுக்குச் சமையல் வேலை. இரவுகளில் ஒரு மிட்டாய் கடைக்குத் தேவையான மிக்சர், காராபூந்தி தயாரிப்பு. அடுப்பங்கரையில் கருகிக் கருகிப் பைசா பைசாவாகச் சேர்த்துத்தான் எங்களைக் கரையேற்றியிருக்கிறாள்.

மறுநாள் காலை ஊர் போய்ச் சேர்ந்தேன்.

ஒரு கட்டிலின் மேல் அம்மா கிடந்தாள். இல்லை, கிடத்தப்பட்டிருந்தாள். சேலையைச் சும்மா போர்வை போல் போர்த்தியிருந்தார்கள். எந்தப் பக்கமும் திரும்பிப்

பாலாஜி

படுக்க முடியாத ஒரு நிலை. விட்டத்தையே வெறித்துப் பார்த்துப் படுத்திருந்தாள்.

என்னைப் பார்த்தவுடன் அவள் கண்களில் நீர்ப்பெருக்கு. பேச முயன்றாள். ஆனால் பேச்சு தெளிவாக வரவில்லை.

அண்ணா 'காம்ப்' போயிருந்தான். மன்னி தன் அலுவலகத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். வீட்டில் ஒருவரும் கிடையாது. அண்ணாவின் ஒரே பெண் டில்லியில் வேலையாக இருந்தாள்.

"வாங்க அக்கா!" என என்னை வரவேற்றவள் தனியாக அழைத்துப் போனாள்.

"எனக்கு இன்றைக்குக் கட்டாயம் ஆபீஸ் போயாக வேண்டிய நிர்ப்பந்தம். வேலைக்காரப் பெண் இப்போது வந்து விடுவாள். எதற்கும் இந்த அட்டவணையைப் பார்த்துக் கொள்ளுங்கள். அம்மாவுக்கு எப்போது எப்போது எந்த எந்த ஆகாரம், எந்த எந்த மருந்து கொடுக்க வேண்டும் என்று எழுதி வைத்திருக்கிறேன்."

மன்னி புறப்படும் முன் அந்த வேலைக்காரப் பெண் வந்து விட்டாள்.

வயது பதினெட்டு இருக்கும். வாளிப்பாக வளர்ந்திருந்தாள். வந்து நின்ற தோற்றம் எனக்குக் குமட்டியது.

எண்ணெய் கண்டிராத தலை. அழுக்குச் சேலை. அதைவிட அழுக்கான ஒரு சட்டை. காலையில் வேறு எங்கேயோ வேலை பார்த்துவிட்டு வருகிறாள் போலும்! கிட்ட வந்தாலே ஒரு வியர்வை நெடி.

மன்னி என்னைக் காட்டி அவளிடம் ஏதோ சொன்னாள். அவளும் புரிந்து கொண்டது போல் தலை அசைத்தாள்.

அன்று அந்தப் பெண்ணை அம்மாவிடம் நெருங்க விடவில்லை. எண்ணெய், சீயக்காய் எடுத்துக் கொடுத்துக் குளித்து வரச் சொன்னேன். வீட்டில் இருந்த பழைய பீரோவைக் குடைந்தேன். கஸ்தூரியின் புடைவை ஒன்று கிடைத்தது. அதை உடுத்திக் கொள்ளச் சொன்னேன். என் கையிலிருந்து பணம் கொடுத்துத் தினமும் சோப் தேய்த்துக் குளித்து விட்டுத்தான் வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்க வேண்டும் என உறுதியாகச் சொன்னேன்.

அடிக்கடி அம்மாவின் இயற்கை உபாதைகளின் சமயம் தூக்கிப் பக்கத்து நாற்காலியில் உட்கார வைத்துப் படுக்கையை மாற்ற வேண்டி இருந்தது. உடல் ஒடுங்கிப் போயிருந்த போதே கனம் அதிகமாகத்தான் இருந்தது.

அந்தப் பெண் இந்தப் பணிவிடைகளைச் செய்யும் பொழுது ஓர் அலட்சியம் தெரிந்தது. அம்மா வலியால் முனகுவதை அவள் லட்சியம் செய்வதாகத் தெரியவில்லை.

எனக்கு அண்ணா — மன்னி மேல் கோபம் கோபமாக வந்தது.

இனிமேல் இவர்கள் யாருக்காகச் சம்பாதிக்க வேண்டும்? மன்னி வேலை பார்க்கா விட்டால் என்ன...? இல்லை மாற்றி மாற்றி லீவு போட்டு இரண்டு பேரும் நேரடியாகப் பார்த்துக் கொள்ளக் கூடாதா? மன்னிக்கு வேண்டுமானால் பாசம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இவனுக்கு எங்கே போயிற்று புத்தி...? பத்து மாதங்கள் சுமந்து பெற்றதுமில்லாமல் அப்புறம் எத்தனை கஷ்டப்பட்டிருக்கிறாள்?

அண்ணா இரவு வந்தான்.

"நீ வந்ததில் எனக்கு ரொம்பவும் ஆறுதல்... அம்மா முகத்தில் கூடக் கொஞ்சம் தெளிவு தெரிகிறது... இல்லையா கீதா?" என மன்னியைக் கேட்டான்.

அவன் வருவதற்குப் பத்து நிமிஷம் முன்புதான் அவள் வந்தாள், அலுத்துக் களைத்துப் போய்.

நாளைக்குக் காலை கண்டிப்பாகக் கேட்டு விட வேண்டியதுதான். பஸ்ஸில் வந்த களைப்பு, பகலிலும் தலையைச் சாய்க்கவில்லை. ஒன்பது மணிக்கெல்லாம் உறங்கி விட்டேன்.

சட்டென விழித்துப் பார்த்த போது மணி பன்னிரண்டு.

அண்ணாவும் மன்னியும் அம்மாவிற்குப் படுக்கை மாற்றிப் போட்டார்கள்.

மணி இரண்டு. மறுபடியும் அதே பணிவிடை.

மணி நான்கு. அடுத்த முறை.

நான் கண் விழித்த போது மணி ஆறு. அதற்குள் அம்மாவிற்கு "ஸ்பாஞ்சு பாத்"



கொடுத்துப் பவுடர் போட்டு சாய்ந்தாற் போல உட்கார்த்தி வைத்திருந்தார்கள்.

செய்யட்டுமே! கடமைப்பட்டவர்கள் செய்கிறார்கள்....? இன்னும் எத்தனை நாட்கள்? ஒரு வருஷம்? ஆறு மாதம்...?

"ராத்திரியெல்லாம் தூக்கமில்லை போலிருக்கிறது! என்னை எழுப்பக் கூடாதா?" எனக் கேட்டேன்.

"பாவம், அக்கா! ரொம்ப அசதியாகத் தாங்கிக் கொண்டிருந்தீர்கள்?"

"ஏன், கமலம்... இன்றைக்கே ஊருக்குக் கிளம்புகிறாயாமே...! கொஞ்ச நாட்கள்...?"

உம்... ஏமாந்தால் தலையில் மிளகாய் அரைத்து விடுவார்கள்... புருஷனும் பெண்டாட்டியும் ஜாம் ஜாமென்று வெளியே கிளம்ப நான் இங்கே அல்லாட வேண்டும். எனக்கென்று குடும்பம் இல்லையா...?

"என்னப்பா செய்வது...? உன் அத்தான் இந்த இரண்டு நாட்கள் ரொம்ப சிரமப்பட்டிருப்பார்... அல்ஸர் கம்ப்ளெயிண்ட். வெளிச் சாப்பாடு ஒத்துக் கொள்ளாது... தானாக ருசியாகச் சமைத்துக் கொள்ளவும் தெரியாது... வயது ஆகிவிட்டதல்லவா?"

"ஆமாம், ஆமாம்" என்றான்.

இரவு. நான் பஸ்ஸில் உட்கார்ந்திருக்க,



வெளியில் கம்பியைப் பிடித்தபடி அண்ணா நின்று கொண்டிருந்தான்.

"ஏன் அண்ணா! கீதாவை லீவு போட்டுப் பார்த்துக் கொள்ளச் சொல்லக் கூடாதா...? அவளுக்காகத் தெரியா விட்டாலும் நீயாகச் சொல்லக் கூடாதா?"

"நான்தான் வேண்டாமென்று சொன்னேன். அவள் போடுவதாகத்தான் சொன்னாள்."

"ஏன்? பாவம், ராத்திரியும் கண் விழித்துப் பகலிலும் ஆபீஸில்...."

"உம்.. என்ன செய்வது? கீதாவிற்கு அம்மா கிடையாது... அப்பா மட்டும்தான். உனக்குத்தெரியுமே... அவருக்குஸ்டிரோக்... கோமா ஸ்டேஜ்.. ஒரே பெண் இவள்தான். ஒரு வேலைக்காரன்தான் பார்த்துக் கொள்கிறான்."

எனக்கு என்னவோ போல இருந்தது.

"லீவு போட்டால் இருபத்து நான்கு மணி நேரம் வீட்டில் அப்பாவைப் பற்றி நினைத்துக் கலங்கிப் போவாள். கொஞ்சம் மாறுதலாக இருக்கட்டும் என்றுதான் ஆபீஸுக்குப் போகச் சொல்கிறேன்."

"கீதாவுக்கு அப்பாவைப் பார்க்கப் போக வேண்டுமென்று..."

"இருக்காதா...? இருக்கிறது. என்ன செய்ய....? என்னதான் அம்மாவாக இருந்தாலும் இப்போது வெறும் உடம்பைத் தொட்டுத் தூக்க எனக்குச் சங்கடமாக இருக்கிறது. நான் கிட்ட வந்தாலே அம்மா கூசிப் போகிறாள். இவளை அனுப்பி விட்டு என்ன செய்ய?"

நான் மௌனமாக இருந்தேன்.

"உன்னைக் கொஞ்ச நாட்கள் இருக்கச் சொல்லலாம் என நினைத்தேன். கீதா கொஞ்ச நாட்கள் அவள் அப்பாவைப் பார்த்துக் கொள்ளலாம். உனக்கு முடியவில்லை. கீதாவும் தானே செய்வதாகச் சொல்கிறாள். விட்டுப் போனால் மறுபடியும் எடுத்துச் செய்யச் சிரமப்படும். ஊருக்குப் போனால் திரும்பி வரும் போது ரொம்ப மனசு கலங்கும். நியாயம்தானே."

நான் என் இருக்கையில் நெளிந்தேன்.

பஸ் புறப்பட நான் அந்த இறுக்கமான சூழ்நிலையிலிருந்து விடுபட்டேன்.

நான் என் குடும்பத்துடனேயே இருப்பதும் நியாயம், என் வீட்டுக்காரர் சொன்னதும் நியாயம், மன்னி வேலைக்குப் போவதும் நியாயம், அண்ணா சொல்வதும் நியாயம், வேலைக்காரி வைத்துக் கொள்வதும் நியாயம்.

இந்தமாறுபட்ட நியாயங்களுக்கெல்லாம் காரணம் — அவரவர்கள் சுபாவம். அதை நியாயப்படுத்திக் காட்ட எத்தனை எத்தனை காரணங்கள் கற்பிக்கப்படுகின்றன?

நான் உண்மையாக ரொம்பவும் வெட்கப்பட்டேன்!

அருள்வாக்கு

வம்ச வாரியாகப் பூசாரி உடுக்கடித்து பாரதம் சொல்லிக் கொண்டு வருகிறானா? அப்படியானால் அதுவும் ஒரு கலை. அதுவும் ஒரு சாஸ்த்ரம். அது இந்தத் தலைமுறையோடு போகாமல் அவன், பிள்ளைக்கோ இன்னொருத்தனுக்கோ சொல்லித் தருவதற்கு சாச்வதமாக திரவிய உதவி ஏற்பாடு பண்ணுங்கள் என்கிறேன். இப்படியே கரகம், பொம்மலாட்டம் எதுவானாலும் கோவில், தெய்வம், புராணம் ஸம்பந்தப்பட்டதாக இருக்கிற அந்தக் கிராமக் கலை (நம் தேசத்தில் கிராமக் கலை, நகரக் கலை எதுவானாலும் ஈச்வரனை மையமாகக் கொண்டதுதான்) நம் காலத்தோடு நசிக்காமல் அடுத்த தலைமுறைக்குப் போகும்படியாகச் செய்யுங்கள் என்று சொல்லி வருகிறேன்.

இன்னும் எத்தனையோ சாஸ்த்ரங்களிருக்கின்றன. இப்போதைய பிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி, ஜுவாலஜி, ஜியாலஜி, என்ஜினியரிங் முதலியவற்றுக்கு நம் தேசத்திலேயே மூல சாஸ்திரங்கள் இருக்கின்றன. வராஹ மிஹிரரின் "ப்ருஹத் ஸம்ஹிதை"யும் போஜ ராஜனின் "ஸமராங்கண ஸூத்ரதார"த்தையும் பார்த்தால் இவற்றைப் பற்றி அறியலாம். ஆனால் மேல் நாட்டு ஸயன்ஸ்களே இங்கேயும் ப்ரசாரமானபின் நம் ஸ்வதேச விஞ்ஞான சாஸ்த்ரம் தெரிந்தவர்களே இல்லாமல் போய் விட்டார்கள். அதனால் இவற்றிற்கு வாத்யார்கள் கிடைப்பதே ஸாத்யமில்லாததாகத் தோன்றுகிறது.



இப்படியாகச் சில வித்யைகளை இன்று கற்றுக் கொள்ளச் சிஷ்யர்கள் மட்டுந்தான் இல்லை என்றில்லாமல், அவற்றைக் கற்றுக் கொடுக்க ஆசிரியர்களும் இல்லாமலிருக்கிறது. இப்படிப்பட்டவற்றில், நல்ல புத்தி வன்மை உள்ளவர்களுக்குப் பழைய நூல்களைத் தேடி எடுத்துக் கொடுத்து, அல்லது அவர்களே தேடிப் பெறுவதற்கு எல்லா வசதியும் செய்து கொடுத்து, அவற்றை அவர்கள் படித்து ஆராய்ந்து அறியச் செய்ய வேண்டும். இப்படி ஆசிரியரை முதலில் ஸ்ருஷ்டி செய்து விட்டு, அப்புறம் இவரிடம் மாணவர்கள் சேர்ந்து இவர் புதிதாகத் தெரிந்து கொண்ட பழைய வித்யையைக் கற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

மணவாழ்விலே குளுமை...

அருண்

ஐஸ்க்ரீம்

தருமே இனிமை!

திருமணம் மற்றும் பார்ட்டிகளில்
சுவைத்து மகிழச் சிறந்தது.

பரவசமூட்டும் எங்களின் இதர வகைகளில்
சுவை கூட்டும் அறிமுகம்-

- கிங் கேஸர்
- ஜூஸி காஷி

உங்கள் தேவைகளுக்கு அருகிலுள்ள
எங்கள் நிலையத்தை அணுகவும்.

சென்னை மற்றும்
தமிழகமெங்கும் அருண் ஐஸ்க்ரீம் பார்லர்கள் உள்ளன.

அருண் ஐஸ்க்ரீம்ஸ்—
தமிழகத்தின் முன்னணி விற்பனையாளர்.



Imageads - 2610



GOKULAM

in English — A colourful experience!

Price: Rs. 3.00; 96 Pages

September issue now on sale.

Colour picture: Yoga.



Highlights:

* Moony Mouse in Planet Xenoba
* The Childhood days of cricket hero Srikanth.
* The Seven Wonders of the World
* Tales from the Panchatantra 16 page picture story in Colour.

Annual Subscription: Rs. 36.00 (India)
Overseas: Rs. 270.00 (Air mail)
Rs. 120.00 (Sea mail)

For agency and Subscription contact:
Gokulam, Guindy, Madras-600 032.
Telephone: 434157, 434190.



உண்மையைச் சொன்ன போது...

"அப்பா, உங்க மாப்பிள்ளைகிட்ட ஒரு வார்த்தை சொல்லிடுங்கோ. நாளைக்குத் தெரிஞ்சா மறைச்சு வைச்சுக் கல்யாணம் செய்துட்டதா, என் வாழ்க்கை நரகமாயிடும்" — நந்தினி கலக்கத்துடன் தன் பெற்றோரைப் பார்த்தாள்.

புது மஞ்சள் கயிறும் புது நகைகளும் அவள் மணவறைக்குள் நுழைந்து சில மணிகளே ஆகியிருக்கிறது என்பதைச் சொல்லின.

"கமலம், உன் பெண்ணைப் பார்த்தாயா! இப்படி ஒரு இஞ்ஜினியர் மாப்பிள்ளை பிடிச்சு இவ கல்யாணத்தை முடிக்க நாம எப்படியெல்லாம் கஷ்டப்பட்டிருப்போம். இவளோ நம்ம தலையில் நம்மையே கல்லைத் தூக்கிப் போடச் சொல்றா..."

"நந்தினி, இங்கே பாரும்மா. ஆயிரம் பொய் சொல்லிக் கல்யாணம் செய்யலாம் பாங்க. நாங்க பொய் சொல்லலை. எப்பவோ நடந்ததைச் சொல்லாம விட்டோம். கல்யாணத்துக்கு முன்னாடி சொன்னால் உன் கழுத்தில் மஞ்சள் கயிறு ஏறுமா? கல்யாணம் நல்லபடியா முடிஞ்சிருக்கு. அங்கே மாப்பிள்ளை சந்தோஷமாச் சீட்டு விளையாடறார். அவர்கிட்ட இதைச் சொல்லி ஒரு பிரளயத்தை உண்டு பண்ணச் சொல்றியா?"

"அவசியமானதை மட்டும் சொல்லணும்மா. வேண்டாததைச் சொல்ல வேண்டியது இல்லை. வீணா மனசைக் குழப்பிக்காதே!"

தாயும் தந்தையும் மாறி மாறி அறிவுரை கூறினாலும் நந்தினிக்குச் சமாதானமாக இல்லை. அவள் கண்களைத் துடைக்கும்போது, தோழிகள் பட்டாளம் உள்ளே படையெடுக்க, நந்தினி சிரிக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளானாள்.

முதலிரவுக்கான சகல ஏற்பாடுகளுடன் சசிதரன் காத்திருக்க, தோழிகளின் சீண்டலுடன் நாணமும் மகிழ்வையும்விடத் திகிலை விழி நிறையக் கைப்பிடித்தபடி அறைக்குள் நுழைந்தாள் நந்தினி.

சசிதரன் அவளைக் குழந்தையாய் அணைத்து மஞ்சத்திற்கு அழைத்துப் போனான்.

"நந்தினி, நமக்குள் எந்த ஒளிவும் மறைவும் இருக்கக் கூடாது. நீ என்னை விரும்பறியா? எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. ஐ லவ் யூ நந்தினி."

அவன் அணைப்பில் அவன் சொன்ன வாசகத்தில் சிவந்து வியர்த்தாள் நந்தினி.

"உம்..."

அவளை அணைத்திருந்த அவன் கரங்களில் லேசாகப் படர்ந்திருக்கும் வெள்ளைத் தழும்புகளில் அவள் விழிகள் பதிகின்றன.

"நந்தினி, எனக்கு முன்னர் லியூக்கோடர்மா இருந்தது. மருந்து சாப்பிட்டு மறைஞ்சுக்கிட்டு வருது. மத்தப்படி நான் மனசால கூடத் தொட்ட முதல் பொண்ணு நீதான் நந்தினி. நானே பேசிக்கிட்டுப் போறேன். உன்னைப் பத்தி நான் தெரிஞ்சுக்க வேணாமா? சொல்லு. எங்கே, சொல்லு, நந்தினி."

"...ம்...ம்..."

"சொல்லு. எதுவாயிருந்தாலும் பயப்படாமல் சொல்லு நந்தினி."

"வந்து... நீங்க தப்பா நினைக்கக் கூடாது. மூணு வருஷத்துக்கு முந்தி எனக்கு டி. பி. வந்தது. மருந்து சாப்பிட்டு இப்ப நல்லாயிருக்கேன். முன்னாடியே உங்ககிட்ட இதைச் சொல்லச் சொன்னேன். எங்க அம்மா, அப்பா கேட்கல. என்னை மன்னிச்சிடுங்க."

அவளை அணைத்திருந்த அவன் கை விலகியது.

"என்னது, நீ டி. பி. பேஷண்டா? மூடி வைச்சு உன்னை என் தலையிலே கட்டிட்டாங்களா?"

"முன்னாடி இருந்ததுங்க. இப்ப ஆரோக்கியமா இருக்கேங்க. ப்ளீஸ் என்னை நம்புங்க."

"ஐயோ, என்னை இப்படியுமா ஒரு வியாதிக்காரியைக் கட்டி வைச்சு ஏமாத்திட்டாங்க... சண்டாளி!"

அவன் கதவைத் திறந்து கொண்டு வேகமாக வெளியே சென்றான்.

— ஹம்சா தனகோபால்.

பொழுது இன்னும் விடியவில்லை.

ஆனால் —

வாசலில் கூச்சல் கேட்டது. குடிப்பது, அடிப்பது, கிடைத்த நேரத்தில் சாப்பிடுவது, நினைத்த நேரத்தில் தூங்குவதெல்லாம் அந்தத் தெருவாசிகளுக்கு மாமூல்தான்! வாசல் தெளிக்கிற நேரத்தில் வழக்காடுவது புதிதில்லை. என்றாலும் அந்தக் கூச்சல் தன் வீட்டு வாசலில் நின்று நிலைப்பது செங்கம்மாவுக்கு அதிசயமாக இருந்தது.

"ரத்தனம்... ரத்தனம்... அட, எழுந்திருப்பா, பொழப்பு கெடைச்சிருக்கு" என்ற குரல் அவளுக்குப் பழக்கமானது.

பக்கத்தில் படுத்திருந்த ரத்தினம் சட்டென்று எழுந்து போய்க் கதவைத் திறந்தான். அவளும் அவனைத் தொடர்ந்து போய் வாசலைப் பார்த்தாள்.

அம்மாசி, பெருமாள், தீனன், ஜெயபால், இன்னும் எவனோ.

"அட என்ன அம்மாசி, பாதித்தூக்கத்தில எழவு விழுந்த மாதிரி வந்து எழுப்பறே!"

"எழவு விழுந்துடுச்சி."

"என்ன சொல்றே?"

"மேட்டுத் தெரு கோபால் நாய்க்கர் வீட்டில ரொம்ப நாளா காயலா இருந்த தில்லே!"

"ஆமாம், கெழவி... இழுத்துக் கிடந்தது."

"ராத்திரி புட்டுக்கிச்சி."

"நிஜமாவா?"

"இதில என்ன தமாஷ் கெடக்குது? பூட்சிபா. எங்களைத்தான் சாவு மோளத்துக்குக் கூப்ட்டாங்க. உனக்கும் சொல்லிட்டு, கூட்டிட்டுப் போகலாம்னு வந்தோம்."





சாவுக்கூத்து

— எஸ்.குமார் —

"தோ, ஒரே ஒரு நிமிஷத்தில வந்துட றேன்."

ரத்தினம் காடா விளக்கை ஏற்றி வைத் தான். மூலையில் பந்தாய்ச் சுருண்டு கிடந்த சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டான். அதுவரை மெளனமாகப் பார்த்துக் கொண் டிருந்த செங்கம்மா குறுக்கிட்டாள்.

"நீ அவங்களோட போகப் போறியா?"

"பின்னே?"

"இது ஒரு பொழைப்பா?"

"இல்லாம..... விளையாட்டா?"

"உனக்கு என்னய்யா தலையெழுத்து?"

"இதோ பாரு, சின்ன வயசிலிருந்து பழ கிப் போயிட்டுது. திடீர்னு விட்டுட முடி யுமா?"

"விட்டுத்தான் ஆகணும். நமக்குன்னு காணி நிலம் இருக்கு. ரெண்டு கறவை இருக்கு. வானம் காஞ்சி போய் இப்பக் கொஞ்சம் கஷ்டப்பட்டாலும்... கூலிக்குப் போயாவது வயித்தை ரொம்பிக்கிறோம். நாளைக்குச் செல்லியம்மா மனசு வச்சு, மழை கொட்டுச்சின்னா நம்ம வீட்டுச் சோத்தை நாய் தின்னுட்டுப் போகும். நீ ஏன்யா பொணத்துக்கு முன்னால போய் ஆடணும்?"

"ஏம்மே, சாவுக் கூத்துன்னா உனக்கு அவ்வளவு எளக்காரமாப் போயிடுச்சா?"

"நான் அதுக்குச் சொல்லலே!"

"பின்னே.... எதுக்கு என்னைத் தடுக் கறே?"

"கண்ணு மண்ணுத் தெரியாம குடிச்சிட்டு ஆடித்தான் பிழைக்கணுங்கிற நிலைமையில நாம இல்லே. உழைச்சிப் பிழைக்கலாமே!"

"இதுவும் உழைப்புத்தான்டி. சொல்லப் போனா கறாரா நாம கேட்கிற கூலி கிடைக் கிற உழைப்பு இதுதான்! நான் வரேன்."

வெளியேறினான்.

அவர்களுடன் உற்சாகமாகப் பேசிக் கொண்டே நடந்தான்.



அம்மாசியும் சகாக்களும் மேட்டுத் தெருவை அடைந்தார்கள்.

சாவுக்கு வந்த கூட்டம் கோபால் நாய்க் கர் வீட்டு வாசலில் மட்டுமில்லாமல் எதிர் வீடுகளிலும் பக்கத்து வீடுகளிலும் திண் ணையிலும் தெருவிலும் உட்கார்ந்து கொண்டும் நின்று கொண்டும் இருந்தது.

உள்ளேயிருந்து ஒப்பாரி. சத்தம் காதைக் கிழித்தது.

"நீ குயிலு போல வந்தாயோ
பாவி குண்டு போட்டுச் சுட்டானோ....
நீ மயிலு போல நின்னாயோ
பாவி மனசு வந்து சுட்டானோ...."

அம்மாசி வாசலில் கிடந்த குப்பையை யும் வைக்கோலையும் திரட்டினான்.

மடியிலிருந்த தீப்பெட்டியை எடுத்து அதைப் பற்ற வைத்துக் கையிலிருந்த தப் பட்டையைக் காய்ச்சினான். அவனைத் தொடர்ந்து பெருமாளும் தீனனும் தங்கள் கை வாத்தியங்களின் தோல்களுக்குச் சுதி ஏற்றினார்கள்.



"அந்த டாக்டரோட ப்ளேஸக் கேட்டதும் நமக்கு 'கிலி' ஏற்படுதுன்னு தெரிஞ்சு போய் 'கிளினிக்'குன்னே எழுதி வெச்சிருக்காங்க பாருங்க!"

— ஜமை. அ. கதிர்வேல்.

அம்மாசி ஆரம்பித்தான். பெருமாளும் தினனும் தொடர்ந்தார்கள். ஜெயபால் சீழ்க்கை அடித்து மற்றவனுடன் ஆடத் துவங்கினான். ரத்தினத்துக்கு உடம்பு பரபரத்தது. வட்டாரத்தில் அவனுக்கு நிகரான ஆட்டக்காரனே இல்லை.

மரியாதை வந்த பிறகு ஆடலாம் என்று ஆவலைக் கட்டி வைத்தான்.

தப்பட்டையின் ஒலியும் சீழ்க்கையும் ஏற்றிய சுதியில் ஒப்பாரிப் பெண்கள் பக்க வாத்தியச் சுறுசுறுப்பில் ஒப்பாரியை விமரிசையாகத் தொடர்ந்தார்கள்.

அவர்களின் ஒப்பாரி இழுப்பு முடிந்ததும் தப்பட்டை வரிசை பலத்தது.

சத்தம் கேட்டு வெளியே வந்த கோபால் நாய்க்கரின் பையன் சிவா, "வந்துட்டியா, அம்மாசி?" என்றான்.

"ஆமாம், சாமி."

"பெரிய சாவு. எடுப்பு பிரமாதமா இருக்கணும். உன் கைவரிசை அட்டகாசமா இருக்கணும்."

"அதெல்லாம் வெளுத்துடுவோம். நீங்க எங்களுக்குத்தான் சொல்லி விட்டிங்க. நாங்க ரத்தினத்தையும் கூட்டி வந்துட்டோம்."

அப்பொழுதுதான் தெளிவாகப் பார்வையை ரத்தினத்தின் மேல் ஓட்டிய சிவா, "நல்லதாப் போச்சி. இனி களை கட்டிடும்" என்றான்.

அதுவரை பேசாமல் இருந்த ரத்தினம், "முதலாளி, முதல்ல சுதி ஏத்தணும். அப்புறம் பாருங்க....." என்றான்.

"எனக்குத் தெரியும் ரத்தினம். உன்னை மாதிரி ஆட எவன் இருக்கான்?"

சிவா சட்டைப் பையில் கையை விட்டு, கத்தையாய் இருந்த நோட்டுக்களிலிருந்து ஐம்பது ரூபாய் நோட்டை எடுத்து அம்மாசியிடம் கொடுத்தான்.

"இப்ப திருப்தியா, ரத்தினம்?"

"இப்போ சரி. எறங்கிடுச்சின்னா....."

"கொடுத்துக்கிட்டே இருக்கேன். ஏத்திக்கிட்டே இரு."

"ஆகட்டும், முதலாளி."

சிவா உள்ளே போனான்.

அவர்கள் தப்பட்டைகளையும் தமுக்கையும் ஓரத்தில் வைத்து விட்டுச் சென்றார்கள்.

ஊற்றிக் கொண்டு வந்த பிறகு அவர்களுக்கு உற்சாகம் பீறிட்டது.

தப்பட்டையும் தமுக்கும் விசிலும் சாவுக் கூத்தும் அமர்க்களப்பட்டது.

புதிது புதிதாக வந்தவர்களால் புதிது புதிதான பாடல் வரிகள் சொல்லப்பட்டு ராகமான அழுகைகள் ரகம் ரகமாக வந்தன.

பாடை தயாராக இருந்தது.

பிணம் பெஞ்சில் கிடத்தப்பட்டுக் குளிப்பாட்டப்பட்டது. ராகமான ஒப்பாரிகளுக்கு பதிலாகக் கூக்குரல்கள் எழுந்தன.

"ஐயோ, என்னை விட்டுட்டுப் போறியே!"

"என்னை இப்படி அனாதை ஆக்கிட்டியே!"

"கடைசி பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணிப் பாக்கணும்னு துடிச்சியே! ஆசை நிறைவேறாமப் போறியே! உன் நெஞ்சு வேகுமா?"

அம்மாசியும் சகாக்களும் நெடுக அடித்தபடி செல்ல வாத்தியம் வாகாக இருக்கிறதா என்று சோதித்துக் கொண்டிருந்தார்கள்.

அம்மாசி, "ரத்தினம், உன் நேரம் வந்துடுச்சி. பிச்சி உதறு" என்றான்.

ரத்தினத்திடமிருந்து உற்சாகமான பதில் வரவில்லை.

உடம்பில் தெம்பில்லை. கண் மசமசவென்றது. மூன்றாவது முறையாகச் சாப்பிட்ட சரக்கு அவனை வீழ்த்திக் கொண்டிருந்தது. வயிறு கூடக் கடகடத்தது.

"என்னன்னு தெரியலே, அம்மாசி. ஃப்ளாட் ஆயிடுவேன் போல இருக்கு."

"இன்னா ரத்தினம் கதை விடறே! நீயா?"

"நிஜமாத்தான் சொல்றேன்."

"மேலேயே கொஞ்சம் போட்டா அழுக்கிடும்."

"எனக்கு அப்படித் தோணலே. கடைசியாப் போட்ட ஊறல்ல ஏதோ மிஸ்டேக் இருக்குது."

"அதெல்லாம் ஒண்ணும் இருக்காது. நீ வேணும்னா கொஞ்ச நேரத்துக்கு ஓரமாக் குந்திக்க. சரியான பிறகு ஆடிக்கலாம்."

"சரி."

"இந்தா, பீடி அடி. தெம்பாயிடுவே!"

ரத்தினம் பீடியையும் தீப்பெட்டியையும் வாங்கிக் கொண்டு மூலையில் உட்கார்ந்தான்.

வாந்தி வருகிற மாதிரி புரட்டியது. பீடியைப் பொருத்திப் பற்ற வைத்தான். நீளமாக இழுத்தான்.

பத்து நிமிஷங்களில் பாடையும் பிணமும் தோள்களில் ஏறிப் பயணம் புறப்பட்டன.

ரத்தினம் எழுந்து கொண்டான்.

அம்மாசி, பெருமாள், தினன் அடித்த அடிக்கும் ஜெயபாலின் விசிலுக்கும் வாட்ட

நீங்கள் உபயோகிக்கும் கொசுவிரட்டி உங்களுக்கு எரிச்சலூட்டுகிறதா?





நீங்கள் உபயோகிக்கும் கொசுவிரட்டியின் பாதிப்பை நினைத்துப் பாருங்கள்.

கொசுவர்த்திச் சுருள்கள் அறை முழுதும் புகை கிளப்பி, தொண்டையிலும், கண்களிலும் எரிச்சலூட்டுகின்றன.

க்ரீம்களோ, பிசுபிசுப்பாக தோலில் ஒட்டிக் கொண்டு, துணிகளை கறைபடுத்தும். மேலும் தாங்க முடியாத நெடி வேறு!

இத் தொல்லைகளையெல்லாம் விரட்ட வருகிறது மைலால் கொசு விரட்டி.



மைலால்—மேனிமேல் இருப்பதை உணரமாட்டீர்கள். நெடியேதுமில்லை.

அது தடவியதே தெரியாது! ஆம், மைலால் நிறமற்றது. மணமற்றது. பிசுபிசுப்பே இல்லாதது.

பயன்படுத்த எளிது

சில துளிகள் மைலால் மேனியிலே லேசாக தடவினால் போதும், கொசுக்களிலிருந்து, கண்ணுக்கு தெரியாமல் பாதுகாக்கும்.

மைலால்

திரவ வடிவ கொசுவிரட்டி.

கொசுக்களை விரட்டும். உங்களை அல்ல.

HTA 2356

மாகக் கால்களைச் சுழற்றிப் போட்டான்.

மிகவும் சிரமமாக இருந்தது.

இன்று எனக்கு என்னவோ ஆகி விட்டது. எப்படியாவது சமாளிக்க வேண்டும். நாய்க்கர் சுடுகாடு ரொம்ப தூரமில்லை. பத்துப் பதினைந்து நிமிஷம் தாக்குப் பிடித்தால்.....

முடியவில்லை. வயிற்றைப் புரட்டியது.

அம்மாசிக்கு ஜாடை காட்டி விட்டு, சற்று நகர்ந்து சாலை ஓரத்துக்கு வந்தான். குனிந்தான்.

கபகபவென்று வாந்தி வந்து விழுந்தது. கண்கள் இருட்டின. கை கால்கள் சோர்ந்தன. அங்கேயே அரை ஞாபகத்துடன் உட்கார்ந்தான்.

ஞாபகம் முழுதும் மங்கிப் போன நிலையில் தரையில் சரிந்தான்.

செங்கம்மா தேற்ற முடியாமல் அழுதாள். நம்ப முடியாத உண்மையாக எதிரே நீட்டிக் கிடக்கும் ரத்தினத்தின் சவத்தையும் ஆதரவற்றுப் போன மகன் மூர்த்தியையும் மாறி மாறிப் பார்த்துக் கட்டுப் படுத்த முடியாமல் அழுதாள்.

அக்கம் பக்கத்துப் பெண்களும் இப்படியா ஒரு சாவு வரும் என்று அங்கலாய்த்து அழுதார்கள்.

தாயம்மாக் கிழவிக்கும் தாங்க முடியாத துக்கம்தான்! என்றாலும் அவள் அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு, சவத்தின் மீதும் சுவரின் மீதும் தன் முகத்தின் மீதும் கைகளை அறைந்து கொண்டு தவிக்கும் செங்கம்மாவைச் சமாதானப்படுத்தவும் அவள் கைகளைக் கட்டுப்படுத்தவும் முயன்று கொண்டிருந்தாள்.

முடியவில்லை.

எல்லாம் பாழாய்ப் போன சாராயத்தால் வந்த வினை.

அம்மாசியும் அவன் சகாக்களும் ஆஸ்பத்திரியில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். யார் யார் பிழைப்பார்களோ, யார் யார் சாவார்களோ.... ரத்தினம் முந்திக் கொண்டான்.

வெளியே யாரோ பறையடிக்கும் சத்தம்.

அது யார்?

தாயம்மா எட்டிப் பார்த்தாள்.

அம்மாசி, தீனன், பெருமாள், ஜெயபால் கோஷ்டி இல்லாவிட்டாலும் அடுத்த தலைமுறை பொறுப்பேற்றுக் கொண்டிருந்தது.

அடுத்து சீழ்க்கையொலி கிளம்பியது.

ஒரு விடலைப் பையன் சீழ்க்கை அடித்தபடி ஆடத் துவங்கினான்.

ஊருக்கெல்லாம் ஆட்டம் ஆடியவன் பிணத்துக்கு இப்பொழுது ஒருவன் ஆடுகிறான்.

உற்றுப் பார்த்தாள்.

அது அந்தப் பையன் ஆடுகிற ஆட்டமாகத் தெரியவில்லை. அவன் ஊற்றிக் கொண்ட சாராயத்தின் ஆட்டம்தான்.....!

இந்தச் சாராயம் ஆடுகிற சாவுக்கூத்து எப்பொழுது நிற்கும்?

6

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — V
ராஜ்மோகன் காந்தி



காமராஜ்: "ராஜாஜிதான் மெம்பர்; மற்றவர்கள் நெம்பர்!"

மக்களின் மனநிறைவு; கட்சிக்குள் முணுமுணுப்பு!



சலபதி ராவ்: "ராஜாஜியின் அபார ஞாபகசக்தி"

ஆபாசத் தடைச் சட்டத்தின் கீழ் எத்தனை பேர் மீது நடவடிக்கை எடுக்க முடியுமோ, அத்தனை பேர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது மத்திய அரசின் யோசனை. இதனைச் சிரமேற்கொண்டு மாநில அரசின் தலைமைச் செயலகத்தில், அதிகாரிகள் கலெக்டர்களுக்கு ஒரு சுற்றறிக்கை தயாரித்தனர். இந்தச் சுற்றறிக்கை ஒப்புதலுக்காக முதலமைச்சரிடம் வந்தது. ஸி. ஆர்., 'எத்தனை பேர் மீது நடவடிக்கை எடுக்க முடியுமோ அத்தனை பேர் மீது' என்ற வரியை அடித்துவிட்டு அதனிடத்தில், 'எத்தனை பேர் மீது குற்றத்தை நிச்சயமாக நிரூபிக்க முடியுமோ அத்தனை பேர் மீது' என்று மாற்றினார். ஏன்? முதல் காரணம், கலெக்டர்களுக்கு அனுப்பப்படும் உத்தரவுகள் சந்தேகத்துக்கு இடம் தராத வகையில் அவர் கடமையைத் தெளிவாக்குவதாக இருக்க வேண்டும். இரண்டாவது காரணம், ஆபாசமா இல்லையா என்று உறுதியாகக் கூற முடியாதபடி இரண்டுங்கெட்டான் நிலையில் உள்ள அம்சங்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்து நீதிமன்றத்துக்குப் போய்த் தோற்றால், மெய்யாலுமே ஆபாசம் படைக்கிறவர்களுக்குக் குளிர்விட்டுப் போகும். அவர்கள் இன்னும் துணிச்சலுடன் ஆபாசம் பிரசுரிப்பார்கள்.

"ஆனால்", "ஒரு வேளை" என்பது போன்ற சொற்களெல்லாம் ஸி. ஆரின் கோப்புக் குறிப்புகளில் இடம் பெறாது. உண்டு, இல்லை என்று பட்டுக் கத்தரிப்பது போல் எழுதி விடுவார். சஸ்பெண்ட் செய்யப்பட்டிருந்த ஒரு நீதிபதி அந்த உத்தரவை ரத்து செய்யுமாறு முதலமைச்சருக்கு விண்ணப்பம் செய்து [illegible]ந்தார். ஸி. ஆர். அந்தக் கோப்பில் பின்வருமாறு எழுதினார்: "இந்த சுவாரஸ்யமான, முக்கியமான விவகாரத்தின் விவரங்களை மிகவும் கவனமாகப் படித்துப் பார்த்தேன். மனுதாரர் ரூ. 1,000 லஞ்சம் வாங்கி இருக்கிறார் என்பதில் எனக்குச் சந்தேகமே கிடையாது. இவரது கோரிக்கையை நிராகரிக்கிறேன்."

ராஜாஜியின் ஞாபக சக்தி எவ்வளவு அபாரமாக இருந்தது என்பதற்குச் சலபதிராவ் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறார். மத்திய அரசு பத்திரிகைகளின் செயல்பாடு குறித்து ஆராய 'பிரஸ் கமிஷன்' என்பதாக ஒன்றை அமைத்திருந்தது. அதில் சலபதிராவும் ஓர் உறுப்பினர். ராஜாஜியைச் சந்திக்க அந்தக் கமிஷன் உறுப்பினர்கள் வந்த போது, "உங்கள் கேள்விகளையெல்லாம் வரிசையாகக் கேட்டு விடுங்கள்" என்று ஸி. ஆர். சொன்னார். அவ்வாறே ஒவ்வொருவரும் பல கேள்விகளை அடுக்கினர். கவனமாகக் கேட்டுக் கொண்ட ராஜாஜி, கடைசியில் பதில் கூற ஆரம்பித்து வரிசைக் கிரமமாக ஒரு கேள்வி விடாமல் அத்தனைக்கும் பதில் கூறி வந்தார். அந்தப் பதில்கள் தெளிவாக இருந்தது மட்டுமல்ல, பிரச்னைகளை நுணுகி நோக்கித் தரப்பட்ட பதில்களாகவும் முரண்பாடுகள் இல்லாத நியாய வாதங்களாகவும் அமைந்திருந்தன.

ராஜாஜி என்ற மாமனிதர் முன் அவருடைய அமைச்சர்கள் அதிகமாகச் சோபிக்கவில்லை. 'அமைச்சரவையில் அவர்தான் மெம்பர்; மற்றவர்களெல்லாம் நெம்பர்கள் தான்' என்று காமராஜ் பட்டாபி ராமா

விடம் கூறியிருந்தார். குறைந்த வயதுடைய அமைச்சர்களுள் ஒருவர் பட்டாபி. காமராஜ் கூறியது பெருமளவு உண்மையாயிற்று. ஆனால் ஒன்று; ராஜாஜியின் கட்டளைக்கு இணங்கிக் கட்சிக்காரர்களைத் தலைமைச் செயலகத்துக்குள் நுழைய விடாமல் அமைச்சர்கள் பார்த்துக் கொண்டார்கள். இது அதிகாரிகளுக்கு மிகவும் பிடித்திருந்தது. எந்த விதமான குறுக்கீடும் இன்றி அவர்கள் தங்கள் கடமைகளை மனச்சாட்சிக்கு விரோதமின்றிச் செய்ய முடிந்தது. இதனை முக்கியமாகக் குறிப்பிடும் அந்நாளைய அரசு அதிகாரி எம்.வி. சுப்பிரமணியம் தொடர்ந்து கூறுகிறார்: "மற்ற அமைச்சர்கள் மீது ராஜாஜிக்கு இருந்த செல்வாக்கு நிர்வாகத்துக்கு ஒரு வகையில் நல்லதாகவே அமைந்தது. ஆனால் சில சமயம் ராஜாஜி அதி சீக்கிரமாக முடிவுகளை எடுப்பது போல் எங்களுக்குத் தோன்றியது. 'இவ்வளவு அவசரப்படுவானேன்' என்று எண்ணுவோம். சுதந்திர இந்தியாவில் எங்குமே ராஜாஜி அமைச்சரவையின் செயல்திறன் போல் அதற்கு முன்பும் இருந்ததில்லை, பின்பும் இருந்ததில்லை."

அவருடைய உழைப்பாற்றல் பிரமிக்க வைப்பதாக இருந்தது. இதுவே, அவர் முதல் அமைச்சர் பொறுப்பை ஏற்கத் தயங்கி, 'நான் களைத்துப் போயிருக்கிறேன்' என்று கூறியதை அர்த்தமற்றதாகவும் கேலிக்குரியதாகவும் ஆக்கிற்று. ஸி.ஆர். சட்டசபையில் ஒருமுறை சொன்னார்: "சராசரியில் நான் ஒரு நாளைக்கு நூறு கோப்புக்களைப் பார்க்கிறேன். ஒவ்வொன்றிலும் ஒரு பிரச்னை அல்லது சோகம் அல்லது சரித்திரம் இருக்கிறது."

மனத்தில் தோன்றியதை ஒளிவு மறைவின்றிப் பேசுவார் ஸி.ஆர். அரசு, நிதி வசதியைப் பெருக்கிக் கொள்ளக் கடன் பத்திரங்களை வெளியிட்டது. மக்கள் இந்தக் கடன் பத்திரங்களை வாங்க வேண்டும் என்று கோருவதற்காக ராஜாஜி வானொலியில் பேசினார். முதல் வாக்கியமே இவ்வாறு அமைந்திருந்தது: "ஏழைமை நிலையில் உள்ளவர்கள் தயவு செய்து ரேடியோவை நிறுத்தி விடவும். எனது இந்தப் பேச்சு உங்களுக்கு அல்ல!" எத்தனை அரசியல்வாதிகள் இப்படி அப்பட்டமாகப் பேசுவார்கள்?

நினைவில் நிலைக்கக் கூடிய பல வாக்கியங்களை அவ்வப்போது கூறிக் கொண்டிருக்கும் இத்தகைய ஒரு முதலமைச்சரின் கீழ் பணியாற்றுவதும் அவரால் ஆளப்படுவதும், அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் மிகவும் சுவாரஸ்யமாக அமைந்தது. "கம்யூனிஸ்டுகள் எனது முதல் எதிரி" என்று அவர் கூறிய சில காலத்துக்குள் பொதுப்பணித் துறையில் லஞ்ச ஊழல் நிலவுவதாக ஸி.ஆருக்கு உறுதியாகத் தெரிய வந்தது. உடனே அவர் சட்டசபையிலேயே கூறினார்: "என்னுடைய இரண்டாவது எதிரியைப் பெயர் சொல்லிக் குறிப்பிட அனுமதியுங்கள்! பொதுப் பணித் துறைதான் அந்த எதிரி!"

ராஜாஜியின் இந்தப் போக்கு, அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் மிகுந்த மன நிறைவை அளித்தது என்றாலும் கட்சிக்காரர்களைத் திருப்திப்படுத்தவில்லை. 'காங்கிரஸ் கட்சி இன்று சென்னை மாகாணத்தில் ஆட்சியில் இருப்பது ராஜாஜி காரணமாகத்தான்' என்பதைக் கட்சியினர் உணர்ந்திருந்த போதிலும் அவரது சில அப்பட்டமான சொற்கள் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. உதாரணமாக ஸி.ஆரைத் தலைவராகக் காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் தேர்ந்தெடுத்த மறுநாளே அவர்களைப் பார்த்து அவர் சொன்னார்: "என்னிடம் சலுகைகளை எதிர்பார்க்காதீர்கள்; சிபாரிசுக்கு வராதீர்கள்; யாராவது ஏதாவது கேட்டால் அது நடக்காது! நான் கண்டிப்பானவன். இப்படி கண்டிப்பான பேர் வழியைத் தலைவனாக்கியதற்கு உங்களை நீங்களேதான் குறை கூறிக் கொள்ள வேண்டும்!"

கடற்கரையில் திரண்டிருந்த மாபெரும் கூட்டத்தில் பேசும் போது அவர் கூறினார்: "காங்கிரஸ் கட்சியின் பலம் சட்டசபையில் குறைந்து போயிருக்கிறதே என்று கவலைப்பட வேண்டாம். அது ஜனநாயகத்துக்கு நல்லது. கட்சிக்குள் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும். தென்னக மக்களின் அறிவாற்றலையே இது உணர்த்துகிறது. காங்கிரஸ் என்ற வீட்டுக்குள் மலிந்துள்ள நூலாம்படைகளை நீக்கியும் அடைத்துக் கொண்டிருக்கும் சாக்கடைகளைக் குத்தி விட்டுத் துப்புரவுப்படுத்தவும்தான் நான் அழைக்கப்பட்டிருக்கிறேன்."

ஆனால் காங்கிரஸ் கட்சியை அவர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வராமல் அதனைத் தூய்மைப்படுத்த முடியுமா? கட்சியில் இருந்த சிலர், ராஜாஜியே கட்சித் தலைமையையும் ஏற்க வேண்டும் என்று கருதினர். தேர்தலில் காங்கிரஸ் அடைந்திருந்த தோல்விகளையொட்டி காமராஜ் தார்மீகப் பொறுப்பேற்று ராஜினாமா செய்திருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ராஜாஜி கட்சித் தலைமையையும் ஏற்று அதனைச் சீர்படுத்தியிருக்க முடியும். ஆனால் ஆட்சிப் பொறுப்பை ஏற்க முன் வந்த அவருக்குக் கட்சிப் பொறுப்பையும் ஏற்க உடலில் சக்தியும் இல்லை; உள்ளத்தில் அதற்குத் தேவைப்படுகிற பொறுமையும் கிடையாது. எனவே சில மாதங்கள் கழித்து காமராஜ் மீண்டும் காங்கிரஸ் கட்சித் தலைமைப் பீடத்தை அலங்கரித்த போது ராஜாஜி மகிழ்ச்சி அடைந்தார். "ஆட்சிப் பொறுப்பை நானும், கட்சிப் பொறுப்பைக் காமராஜும் வகிக்க, மாகாணத்தின் நலன் நன்றாகக் காக்கப்படும்" என்று அறிக்கை விட்டார். இந்த நோக்கு யதார்த்தமானதே என்றாலும் ஆபத்தானதும் கூட என்பதைச் சீக்கிரமே பல நிகழ்ச்சிகள் நிரூபித்தன.

(தொடரும்)

நூல் அரங்கம்:

• பூவண்ணன்



கல்கியின் வரலாற்று நாவல்கள்

—டாக்டர் பூவண்ணன்—

இவ்வளவு சுவையாக ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையை எழுத முடியும் என்பதே படு ஆச்சரியகரமான சமாசாரம். அமரர் கல்கியின் பிறந்த நாளையொட்டி (9.9.1899) பூவண்ணனின் நூலிலிருந்து சில பகுதிகளை இங்கே வழங்குகிறோம்:

கி.பி. 1741 – ஆம் ஆண்டு சாமுவெல் ரிச்சர்ட்சன் என்பார் 'பாமெலா அல்லது கற்பின் பரிசு' (Pamela or Virtue Rewarded) என்னும் நாவலை எழுதினார். இதுவே ஆங்கில மொழியின் முதல் நாவல் என்பர்.

முதல் ஆங்கில நாவல் தோன்றியதற்கு நூற்று இருபத்து நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவின் முதல் நாவலான 'துர்க்கேச நந்தினி' வெளிவந்தது. இதனை கி.பி. 1865–இல் பங்கிம் சந்திரர் வங்காள மொழியில் எழுதி வெளியிட்டார். இதற்குப் பதினான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் கி.பி. 1879–இல் தமிழில் முதல் நாவல் வெளிவந்தது.

●

வரலாற்று நாவல்களில் மூவகையான மாந்தர்கள் உண்டு. ஒரு வகையினர் உண்மையான வரலாற்று மாந்தர்கள்; மற்றொரு வகையினர், உண்மையான வரலாற்று மாந்தர்கள்தாம்; ஆனால் அவர்களுடைய பெயரை வரலாறு கூறுவதில்லை. நாவலாசிரியனே அவர்களுக்குப் பெயர் சூட்டி விடுகிறான். மூன்றாம் வகையினர், வரலாற்று நாவலாசிரியன் படைத்து உலவ விடும் கற்பனை மாந்தர்கள். 'சிவகாமியின் சபதம்' நாவலில் நரசிம்மவர்மன் வரலாற்று மாந்தன்; நரசிம்மவர்மனின் மனைவி வரலாற்றுப் பாத்திரந்தான். ஆனால் வரலாறு அவளுடைய பெயரைச் சொல்லவில்லை அதனால் 'வானமாதேவி' என்று நாவலாசிரியர் அவளுக்குப் பெயர் சூட்டியுள்ளார். தேரோட்டிக் கண்ணன் முற்றிலும் கற்பனை மாந்தன். வரலாற்று நாவல் இவை போன்ற மூவகை மாந்தர்களைக் கொண்டு உருவாகிறது.

●

உண்மையில் வரலாற்று நூல்களில் ஒன்றிரண்டு குறிப்புக்கள்தாம் கிடைக்கின்றன. வரலாற்று நாவலாசிரியரின் கற்பனைத் திறத்தால் அக் குறிப்புகளைக் கொண்டு ஒரு கதையை உருவாக்குகிறான். அவன் தன் கதையை விருப்பப்படி அமைக்க முடியாமல் அக் குறிப்புகள் அவனைக் கட்டுப்படுத்தும். அதனால் சமூக நாவலாசிரியனைக் காட்டிலும் வரலாற்று நாவலாசிரியனுக்குக் கற்பனைத் திறன் அதிகம் தேவை. சமூக நாவலாசிரியன் ஒரு குதிரையில் சவாரி செய்பவன். வரலாற்று நாவலாசிரியனோ, வரலாறு, கற்பனை என்னும் இரு குதிரைகளின் மீது தன் இரு கால்களை ஊன்றி நின்று, சவாரி செய்யும் வீரனைப் போன்றவன். சற்றுக் கவனக் குறைவாக இருந்தால் ஏதேனும் ஒரு குதிரை முன்னேறி, அல்லது பின்வாங்கி வீரனை வீழ்த்திவிடும். அதனால் 'வரலாற்று நாவலாசிரியன் கதைக்குச் சிரமப்பட வேண்டியதில்லை. அது வரலாற்று நூலில் இருக்கிறது. அதை எளிதில் எடுத்து இனிதாக நாவலை எழுதி முடிக்கலாம்' என்பது பொருந்தாக் கூற்றாகும்.

●

கல்கியின் வரலாற்று நாவல்களைப் படித்த பிறகு, வரலாற்று மாந்தர்களிடம் தமிழ் மக்கள் பற்றுக் கொண்டார்கள். வரலாற்றையும் படிக்கத் தொடங்கினார்கள். வரலாற்றுடன் தொடர்பு கொண்ட ஊர்களுக்குச் செல்லவும், அங்குள்ள கோயில்களையும், கோட்டைகளையும் காணவும் ஆர்வமும் கொண்டனர். சொந்த நாட்டின் மீது கொண்ட பற்றையும், பண்பாட்டிலும், கலைகளிலும் கொண்ட ஈடுபாட்டையும் இவ் வரலாற்று நாவல்கள் வளர்த்தன.

கல்கி பழந்தமிழகத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும் மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்பதற்காகவும், மக்கள் நாட்டுப்பற்றும், விடுதலையுணர்வும் பெற வேண்டும் என்பதற்காகவும் வரலாற்று நாவலை எழுதினார். இவ் விஷயத்தில் இவரது பணி ஸர் வால்டர் ஸ்காட் போன்றோரின் குறிக்கோள்களுக்கு இணையானது.

●

கல்கியின் முதல் வரலாற்று நாவலான

'பார்த்திபன் கனவு'ம், இரண்டாவது வரலாற்று நாவலான 'சிவகாமியின் சபத'மும் பல்லவர் காலத்தைப் பின்னணியாகக் கொண்டவை. அதனால் ஆசிரியருக்குப் பல்லவர் யார் என்பதை விளக்க வேண்டிய அவசியம் ஏற்படுவது இயல்பே. 'பார்த்திபன் கனவி'ல் பல்லவரின் தோற்றத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. ஆனால் 'சிவகாமியின் சபதம்' நாவலில் அதற்கு ஓர் அத்தியாயமே செலவிடுகின்றார்.

பல்லவர் குலத் தோற்றத்தை விளக்கும் 'கடல் தந்த குழந்தை' என்னும் முதல் பாகத்தின் இருபத்தைந்தாம் அத்தியாயம் ''உண்மையில் வரலாற்று நூல்களில் அடையாததொரு தெளிவுடன் பலருடைய கருத்துக்களையும் விளக்குகிறது'' என்பர் தனிநாயக அடிகளார். ●

அருள்மொழிவர்மன் இலங்கையில் தங்கியிருந்ததை விளக்கும் 'பொன்னியின் செல்வன்' இரண்டாம் பாகத்தில், இருபத்தொன்பதாம் அத்தியாயத்தில் வலஹம் பாஹு என்னும் சிங்கள அரசன் தனக்குப் புகலிடம் அளித்த தம்பளை என்னுமிடத்திலிருந்த மலைக் குகையில், சிறியதும் பெரியதுமான பல புத்தர் சிலைகளையும், இந்து தெய்வங்கள் சிலவற்றின் படிமங்களையும் நிர்மாணித்திருப்பதை விளக்குகிறார் கல்கி. அவர் அதே பாகத்தில் அநுராதபுரத்து விஹாரங்களையும் ஸ்தூபங்களையும் பற்றி விளக்கமளிக்கிறார். இம் மாபெரும் கட்டடங்களைப் பார்த்தமையினாலேயே தஞ்சையில் மாபெரும் கோயில் அமைக்கும் எண்ணம் அருள் மொழிக்கு ஏற்பட்டது என்பது பொருத்தமான கற்பனையே. ●

மங்கையர்க்கரசி கனவு காண்பதாகவும் சமணனான நெடுமாறனை அவள் மணப்பாள் என்பதும், திருஞானசம்பந்தரால் அவன் சைவனாவான் என்பதும் அக் கனவில் தெரிவதாகக் காட்டுகிறார் ஆசிரியர். மங்கையர்க்கரசி, நெடுமாறன், குலச்



சிறையார் ஆகிய மூவர் தொடர்பான செய்திகள் 'சிவகாமியின் சபதம்' நாவலுக்கு இன்றியமையாதன அல்ல! எனினும் அச் சைவச் சான்றோரின் நினைவு வாசகரின் உள்ளத்தே எழ வேண்டும் என்னும் கருத்தில், நான்காம் பாகத்தில் மங்கையர்க்கரசி, கனவும் கற்பனையும், நெடுமாறன், குலச்சிறையார், அரண்மனைப் பூங்கா, உறங்கா இரவு, தமக்கையும் தம்பியும், அன்னையின் ஆசி ஆகிய எட்டு அத்தியாயங்களை அமைத்துள்ளார். ●

கல்கி, தாம் எடுத்துக் கொண்ட காலத்தின் வரலாற்றை வழங்குவதுடன், அதற்கு முன்னே நடந்த வரலாற்றையும், வேறு வரலாற்றுக் குறிப்புகளையும் ஆங்காங்கே தருகிறார். 'சிவகாமியின் சபத'த்தில் பல்லவர் குலத்தின் தோற்றம், சிம்ம விஷ்ணுவின் ஆட்சிக் காலத்தில் பல்லவ நாட்டின் நிலை, மயூர சன்மன் வரலாறு, முதலியவற்றை விளக்குகிறார். 'பார்த்திபன் கனவி'ல் கரிகால் வளவன், நெடு முடிக் கிள்ளி, மகேந்திரவர்மர் ஆகியோரின் சிறப்புகளைத் தருகிறார். ''பொன்னியின் செல்வ''னில் விஜயாலயன், முதல் பராந்தகன், இராஜாதித்தன், கங்க மன்னன் பிரிதிவீபதி ஆகியோரின் வீரச் செயல்





களையும், இலங்கையின் துஷ்டகமனு, ஏலேலன், தாதுசேனன், மகாசேனன், ஸாலி ஆகியோரின் வரலாற்றையும் தருகிறார். வரலாற்று நூலையே புரட்டியறியாத ஒரு வாசகன் இந்த வரலாற்று நாவல்களைப் படித்தாலும், கதை நடக்கும் காலத்துக்கும், கதையில் இடம் பெறும் மாந்தர்களுக்கும் தொடர்புற்ற பலவற்றை அறிந்து கொள்ள வேண்டும் என்பதாலேயே இக் குறிப்புகளை ஆங்காங்கே நுழைத்துச் செல்கிறார். ●

இரு மதுராந்தகர்களை உண்டாக்கி, ஒருவன் செம்பியன் மாதேவி பெற்ற மகன் என்றும், மற்றவன் செம்பியன் மாதேவி வளர்த்த மகன் என்றும், கல்கி காட்டுவது கற்பனையே. எனினும் அக் கற்பனைக்கும் வரலாற்றில் ஒரு சிறு ஆதாரத்தைத் தேடித் தருகிறார். கல்வெட்டொன்று, "ஸ்ரீ மதுராந்தகதேவரான உத்தம சோழ தேவரைத் திருவயிறு வாய்த்த உடைய பிராட்டியார்" என்று செம்பியன் மாதேவியைப் பற்றிக் குறிப்பிடுகிறது. செம்பியன் மாதேவி தாம் பெற்ற புதல்வனைப் பலரும் அறிய 'மகனே' என்று அழைத்த உணர்ச்சிப் பெருக்கான நிகழ்ச்சியைச் சித்திரிக்கும் போது, கல்கி மேற்சொன்ன கல்வெட்டின் கூற்றை நுண்ணறிவோடு பயன்படுத்திக் கொள்கிறார்.

கல்வெட்டில் கண்ட ஒரு சிறிய அடைமொழியைக் கொண்டு, தம் வரலாற்று நாவலின் கதைப் பின்னலுக்கு ஓர் அரிய திருப்பத்தை உண்டாக்கிய கல்கியின் ஆற்றல் வியக்கத்தக்கதே. ●

வந்தியத் தேவன் துணை மாந்தனே. அருள்மொழி வர்மரே தலைமை மாந்தர். ஆனால் வந்தியத்தேவன் தன் வீரதீரச் செயல்களால் மெல்ல மெல்ல வளர்ந்து, முதல் பக்கத்திலிருந்து முடியும் பக்கம் வரை ஆதிக்கம் செலுத்துகிறான். அவனை உருவாக்கிய கல்கியே, அவன் திறமையில் மயங்கி, இரண்டாம் பாகத்திலேயே அவனைத் தலைமை மாந்தனாக ஒப்புக் கொண்டு, "நம் கதாநாயகனான வந்தியத் தேவன்" என்று அறிவிப்புச் செய்கிறார். இது கல்கிக்குத் தோல்வி; அவரது கதாபாத்திரத்துக்கு வெற்றி. ●

"சிவகாமி! நீ மட்டும் ஒரு வார்த்தை சொல்லு! இராஜ்யம் எக்கேடாவது கெட்டும் என்று விட்டு விட்டு உன்னோடு இருந்து விடுகிறேன். உன்னை விட எனக்கு இராஜ்யம் பெரிதல்ல" என்கிறார் நரசிம்மர். இக் கூற்று, அரசகுலத்தில் பிறக்காத பெண் ஒருத்தியை மணந்து கொள்வதற்காக மணிமுடி துறந்த எட்டாம் எட்வர்ட் கூற்றாக ஒலிக்கிறது என்பர். ●

இறுதியில் சிவகாமியுடன் தப்பியோட முயன்ற நாகநந்தி பரஞ்சோதியிடம் சிக்கிய போது விஷக்கத்தி எறிந்து அவளைக் கொல்ல முயன்றது, அவள் பேரில் அவர் கொண்ட காதலின் கடைசிப் பரிசு என்று கூறுகிறார்.

கொடிய பிக்ஷுவின் இந்தக் கூற்று உண்மை! முற்றிலும் உண்மை! தன் காதலர் மாமல்லரின் வெறுப்பு மொழிகளைக் கேட்டு அவர் ஏற்கனவே மணம் புரிந்து இரு மக்களையும் பெற்ற தந்தையானார் என்பதை அறிந்து, காதல் கனவு சிதைந்து வாழ்நாளெல்லாம் துன்பம் அனுபவிப்பதைக் காட்டிலும், இவை ஒன்றும் அறியாமல் இறப்பது மேலல்லவா? நாகநந்தி அவளைக் கொல்ல முயன்றது காதலின் பரிசு என்பதைத் தயங்காமல் ஒப்புக் கொள்ளலாம். ●

'சிவகாமியின் சபதம்' நாவலில் இராமாயணக் கதையின் சாயல் படிந்துள்ளது என்பர் சிலர். சிவகாமியிடம் நாகநந்தி கொண்ட காதலால் அவள் பகைவர் நகரமான வாதாபியில் சிறையிலிருக்கிறாள். நரசிம்மவர்மர் புலிகேசியைக் கொன்று வாதாபியை அழித்து அவளை மீட்டு வருகிறார். இது சீதை இலங்கைச் சிறையில் இருந்ததையும், இராவணனைக் கொன்று இராமன் அவளைச் சிறை மீட்டதையும் நினைவுபடுத்துகின்றன என்பது உண்மையே. சீதையைச் 'சிறையிலிருந்த செல்வி' என வழங்குவர். கல்கியும், தம் 'கல்கி' பத்திரிகையின் மலரில் வெளியிட்ட சிவகாமியின் ஓவியத்துக்கு விளக்கம் எழுதும் போது "பகைவர் நாட்டில் பல காலம் சிறையில் இருந்த செல்வி" என்று குறிப்பிடுகிறார். சிவகாமியைச் சீதையாக நினைக்கும் போது நரசிம்மவர்மரை இராமனாகக் கருதிக் கல்கி தம் நாவலில் சில இடங்களிலும் இராமனுக்கு உவமையாக்கி எழுதியுள்ளார். இங்கு காசக்குடிப் பட்டயம், நரசிம்மவர்மர், மானவன்மனுக்காக இலங்கையில் போரிட்டுப் பெற்ற வெற்றியைக் குறிப்பிடும் போது, "நரசிம்மன் இலங்கையில் பெற்ற வெற்றி இராமன் இலங்கையில் பெற்ற வெற்றி போன்றது" என்று குறிப்பிடுவது கருதத்தக்கது.

வெளியீடு: வானதி பதிப்பகம்,
சென்னை — 600 017.
விலை ரூ. 27.00.

— சுப்ர பாலன்.



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால் 1542ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 85 மாணுக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க சுமார் ரூ 250/— ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ 2500/— மூலதனம் ஏற்படுத்தியோ அல்லது அவ்வப்போது ரூ 250/— அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹா ராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி
D—76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம்—612 001.

இந்த நன்கொடைக்கு 80 G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு.

சுஜாதா

22

இருள் வரும் நேரம்

மாஜிஸ்திரேட் அவளை அன்பாகத் தான் பார்த்து, ''உங்க பேரு என்ன?'' என்று கேட்டார்.

அம்ருதா சுற்றிலும் பார்த்தாள். எதிரே பார்த்தாள். நிமிர்ந்து பார்க்காத பாபு, நிமிர்ந்து அவளைப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்த பால்குண்டு, கணவன் ராம்பிரகாஷ் எல்லாரையும் பார்க்க அவளுக்குப் பயம் அதிகமாகி, நாக்கு உலர்ந்தது. மெதுவாக ''அம்ருதா'' என்றாள்.

''மிஸஸ் ராம்பிரகாஷ். சம்பவம் நடந்த அன்றைக்கு என்ன என்ன நடந்ததுன்னு வெவரமாச் சொல்லுங்க...''

அம்ருதாவின் மனத்தில் அந்தப் பிம்பங்கள் ஓடின.

ஆட்டோவில்ராத்திரிஓடியது: அந்தமுகங்கள், ஆட்டோவின் சப்தம், குரல்கள், வியர்வை, மண்டபம்,மார்பின் மேல் அழுந்திய கரங்கள்...

''பஸ்... பஸ் கெடைக்காம...''

''பார்டன்?''

''பஸ்ஸுக்காக... என்... பஸ்ஸில் வரும்படியா இல்லை, கல்யாணம் ரிஸப்ஷன் கார்ல போய்க்கிட்டு இருந்த போது பஸ்... கார் நின்னு போயி...

''மிஸஸ் ராம்பிரகாஷ், நீங்க சொல்றதைச் சரியா, தொடர்ச்சியாச் சொல்லுங்க. அர்த்தம் பண்ணிக்க முடியலை.''

''தாகம்! நாக்கு உலர்றது.''

''அதாவது பஸ்ஸுக்குக் காத்திருந்த போது தாகமா இருந்தீங்களா?''

''இப்ப தாகம்'' என்றாள்.

''ப்ளீஸ் கிவ் ஹர் வாட்டர்!''

''மிஸ்டர் ப்ராஸிக்யூட்டர், நீங்க ஒரு ஸம்மரி மாதிரி கேக்கறது நல்லது. இவங்க குழப்பத்தில இருக்காங்க. என்ன மிஸ்டர் கோவர்த்தன் ராவ், உங்களுக்குச் சம்மதம் தானே?'' என்றார் மாஜிஸ்திரேட்.

ராவ் எழுந்து, ''நோ, யுவர் ஆனர், ஒரு ஸம்மரிக்கு நான் ஒப்புத்துக்க முடியாது. இண்டியன் எவிடன்ஸ் ஆக்ட் படி...'

''கமான் ராவ்ஷி ஈஸ் எ உமன்!'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''சட்டத்துக்கு முன்னால மான், உமன் ஏதும் கிடையாது, இன்ஸ்பெக்டர்! கோர்ட்டில் கூண்டில நிறுத்தியாச்சுன்னா... அதுக்குன்னு வழிமுறைங்கள்லாம் இருக்குது.''

''விஜி உங்க லைன் ஆப் ஆர்க்யூமெண்ட் என்ன?'' என்றார் மாஜிஸ்திரேட்.

''ஸாரி யுவர் ஆனர்! இந்தக் கேஸே ஜோடிச்ச கேஸ். என் க்ளையண்டு இந்தம்மாவை ரேப் பண்ணதாச் சொல்றாங்க. அது முழுக்க முழுக்கத் தப்பு, பொய்! இந்தம்மா தான் என் க்ளையண்டை ரேப் பண்ணதா நிரூபிக்கப் போறோம்!''

''அப்படியா!''

''ஸாரி யுவர் ஆனர், ''இந்தக் கேஸ் ரொம்பச் சிக்கலானது. இந்தம்மா என் க்ளையண்டைச் சம்பவ தினத்துக்கு முன்னாடி ஒரு வருஷமா சந்திச்சுக்கிட்டு இருந்திருக்காங்கங்கிறதுக்கு ஆதாரமாச் சாட்சி கொண்டு வரப் போறோம்!''

மாஜிஸ்திரேட் நிமிர்ந்து பார்க்க, ப்ராஸிக்யூட்டிங் இன்ஸ்பெக்டர், ''மைகாட், திஸ் ஈஸ் தி லிமிட்!'' என்று அதிர்ந்த குரலில் சொன்னார்.

''எது லிமிட் மிஸ்டர் இன்ஸ்பெக்டர்? தேர்ட் டிகிரி முறைகளை வெச்சுக்கிட்டு கன்பெஷன் வாங்கறதா? இல்லை இதா?''

''ராவ் டோண்ட் டெல்மி! திஸ் ஈஸ் ரிடிக்யுலஸ்!''

''அப்படி ஒண்ணும் அது ரிடிக்யுலஸ்



இல்லேங்கறது சாட்சிகள் மூலம் வெளிப் படும்.''

''மிஸ்டர் ப்ராஸிக்யூட்டர் கேஸ் இந்த மாதிரி திரும்பப் போறதுன்னு நான் எதிர் பார்க்கவே இல்லை!''

''இது ரொம்பக் கவர்ச்சிகரமான கேஸ் யுவர் ஆனர். என் க்ளையண்டுக்கும் சாட்சிக் கூண்டில் இருக்கிற திருமதி ராம்பிரகாஷுக்கும் ஒரு வருஷமாப் பழக்கம். ஒரு நாள் மழையில மாட்டிக்கிட்டு அவங்க பிரிகேட் ரோடில ஒரு ஷாப் முன்னால காத்துக்கிட்டு இருந்தப்ப...''

''ஐ டோட்டலி அப்ஜெக்ட் யுவர் ஆனர்! இர்ரெலவண்ட்! இர்ரெஸ்பான்ஸிபிள் அண்ட் ஸ்லாண்டரஸ்! ஸ்காண்டலஸ்!''

''ராவ் இதையெல்லாம் நீங்க நிரூபிக்கப் போறீங்களா?''

''ஆமாம், நிரூபிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. அதுக்குப் ப்ராஸிக்யூஷன் தான் காரணம். கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறியறாங்க. திஸ் ஈஸ் நாட் ரேப் யுவர் ஆனர். திஸ் ஈஸ் நிம்ஃபோமானியா.''

டாக்டர் ராம்பிரகாஷ் கோவர்த்தன் ராவை அணுகியதை அவர் கவனிக்க வில்லை. பின்னால் அணுகி, பெஞ்சியைத் தாண்டி ஒரு கான்ஸ்டபிள் அவரைப் பிடிப் பதற்குள் ராம்பிரகாஷ் கோவர்த்தன்ராவின் கழுத்தைப் பிடித்து உலுக்க ஆரம்பித்தார். அவர் முகம் முழுவதும் ரத்தம் பாய்ந்து சிவந்து நரம்புகள் புடைக்க வெறித்தனமாகக் கத்தினார், ''யூ பூல். யூ பேஸ்லஸ் இடியட்! யு லையர்!'' என்று.

அதற்குள் ஒரு போலீஸ் அதிகாரி அவர்கள் இருவரையும் விலக்க, மாஜிஸ்திரேட் கோபத் துடன், ''வாட் ஈஸ் இட்! யார் இது?'' என்று கேட்டார்.

''ப்ரொபஸர் ராம்பிரகாஷ்.''

''ஸ்டாப் ஹிம். ப்ரொபஸர்! இது கோர்ட்டு! கோர்ட்டில் சில டெக்கரம் எல்லாம் இருக்கிறது. நீங்கள் ஒரு மரியா தைக்குரிய ப்ரொபஸர். நீங்கள் எப்படி?''

''உண்மையைச் சொன்னால் கோபம் வரு கிறது'' என்று கோவர்த்தன ராவ் தம் கழுத்தைத் தளர்த்திக் கொண்டு, இருமிக் கொண்டு சொன்னார்.

''ப்ரொபஸர், நீங்கள் நடந்து கொண்ட விதம் நல்லதல்ல. அதற்காக உங்க ளுக்குத் தண்டனை அளிக்க வேண்டும். தி கோர்ட் ஈஸ் அஜர்ண்ட். ப்ரொபஸர் ராம் பிரகாஷ், மிஸ்டர் விஜிராவ், இரண்டு பேரும் என்னை என் அறையில் வந்து பாருங் கள்!'' என்று மாஜிஸ்திரேட் விலகிச் செல்ல, பாபுவும் பால்குண்டுவும் அழைத்துச் செல் லப்பட்டனர்.

மாஜிஸ்திரேட் பீமப்பாவின் அறை சிறிய தாக இருந்தது. அதில் மேசைமேல் பொட்ட லம் விரித்து ஸாண்ட்விச் சாப்பிட்டுக்கொண் டிருந்தவர், ராம்பிரகாஷ் வந்ததும், ''நீங்க நடந்துக்கிட்டது ரொம்ப ரொம்ப மோசம். 'நோ வயலன்ஸ் இன் மை கோர்ட்!' என்று எடுத்துரைத்தார்.

''கோவர்த்தன் ராவ் சொன்னது அத்த னையும் அப்பட்டமான கலப்பில்லாத பொய். இத்தனை அபாண்டமா யாராலும் நினைத்துப் பார்க்கக் கூட முடியாது. கோவர்த்தன் ராவைப் பார்த்து, ''ஏன் ஸார், எப்படி உங்களால் கூசாமல் பொய் சொல்ல முடிகிறது? மை காட்! உங்க தொழிலுக்கு ஒரு ரெஸ்பெக்ட் கொடுங்க சார். எப்பேர்ப்பட்ட பெரிய மனுஷங்க ளெல்லாம் வக்கீலா இருந்திருக்காங்க! அவங் களுக்கெல்லாம் ஒரு மரியாதை கொடுங்க!''

''ராம்பிரகாஷ்'' என்று கோவர்த்தன் ராவ் அவரைத் துருதுருவென்று பார்த்தார். ''உங்க மேலே எனக்கு எந்த விரோதமும் இடையாது. இன்பாக்ட் உங்ககிட்ட பர்ஸ னலா அப்புறம் மன்னிப்புக் கேட்கத்தான் இருந்தேன். என் இலக்கெல்லாம் இந்தப் போலீஸ்காரங்க! அவங்க பண்ற அட்ட காசம் அவங்க அடிதடி. இதைத்தான் எதிர்க் கிறேன். அவங்க ஒரு மாதிரி வன்முறையைப் பயன்படுத்தறாங்க ஸ்டேஷன்ல. நான் வேறே மாதிரி அயோக்கியத்தனத்தைப் பயன் படுத்தறேன், கோர்ட்டில! முள்ளை முள் ளாலதான் வாங்கியாகணும். வக்கீல் தொழி லுக்குக் களங்கம் விளைவிக்கிறேன்னு சொல் றீங்க. என் மாதிரி ரெண்டு மூணு வக்கீலும் தேவை, ஸார். இல்லைன்னா இவங்க அராஜ கத்தை அவங்க அநியாயத்தைக் கட்டுப் படுத்தவே முடியாது. ஸம்படி ஹேஸ் டு ஃபைட் அனார்க்கி!

''இல்லை ஸார். இந்த முறை தப்பு!''

''நீங்க எதுக்கு ஸார் கோர்ட்டுக்கு வந் திங்க? உங்க சம்சாரம் எதுக்கு ஸார், கோர்ட் டுக்கு வந்தாங்க? இவங்கதான்னு எப்படிச் சொல்ல முடியும்! சம்பவம் நடந்தது இருட் டுலே! யாரோ யாரையோ அரஸ்ட்டு பண் ணிட்டு இவங்கதான்னு காட்டச் சொன்னா காட்டிர்றதா? அதுக்கு எப்படி ஒப்புத்துக்கிட் டீங்க?''

''இவங்கதான் ஸார்!''

''நோ ஸாரி! பெனிபிட் ஆப் டவுட் கொடுத்தே ஆகணும். ஏழு மணிக்கு கபன் பார்க் இருட்டில் யாராலயும் தெளிவா அடை யாளம் சொல்ல முடியாது!''

''இப்ப கேஸை இந்த மாதிரித்தான் நடத் தப் போறீங்களா?''

''இந்த மாதிரித்தான் யுவர் ஆனர். இது தான் ஆரம்பம்!'' ராம்பிரகாஷ் மாஜிஸ்தி ரேட்டைப் பார்த்தார்: ''ஸாரி ஸார்... யுவர் ஆனர். நான்... நாங்கள்லாம் மரியாதைப் பட்டவங்க. எங்களால இந்த அவமானத் தைத் தாங்கிக்க முடியாது. வித் ட்யூ ரெஸ் பெக்ட் டுதி கோர்ட், நான் என் மனைவி சாட்சி சொல்றதை உடனே நிறுத்திட விரும் பறேன்!''

''அது எப்படி? இண்டியன் எவிடன்ஸ் ஆக்ட் படி...'' என்று ஆரம்பித்தார் ராவ்.

''ஹெல் யுவர் ஆக்ட் மேன்!'' என்று திரும்பிப் பார்க்காமல் விருட்டென்று புறப்பட்டுக் கிளம்பி வந்தார். ''அம்ரு! வா கோர்ட்டு முடிஞ்சு போச்சு!''

அம்ருதா காரிடாரில் வெற்றுப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள். ''இனிமே வேண்டாம். நான் அங்கே போகலை. எனக்கு எவிடன்ஸ் வேண்டாம்! சாட்சி வேண்டாம்! ரொம்ப ஆபாசமாக் கேக்கறார் அவர்!''

''அம்ரு நீ ஏதும் சொல்லப் போறதில்லை. நாம வீட்டுக்குப் போறோம் இப்ப. வேண்டாம் வேண்டாம்னு நான் அடிச்சுக்கிட்டதே இதுக்குத்தான். இது வேறு உலகம் அம்ரு. நாமெல்லாம் நல்ல டிரஸ் போட்டுண்டு இருக்கோம். இந்தச் சகதியில கால் வெக்க முடியாது!''

சோமசேகர் அவருடன் பின்னால் அவசரமாக வந்து, ''ப்ரொபஸர் ப்ளீஸ்!'' என்று கூப்பிட்டார்.

ராம்பிரகாஷ் திரும்பிப் பார்த்து, ''என்ன?'' என்றார்.

''கோவர்த்தன ராவ் மாதிரி ஆளுங்க பண்ற அக்கிரமத்தை நிறுத்த நமக்கெல்லாம் பொறுப்பிருக்கில்லையா?''


''அவர் நீங்க பண்ற அக்கிரமத்தைத் தடுக்கிறதுக்காகத்தான் அப்படிச் செய்யறாராம்!''

''ராம்பிரகாஷ்'' என்று சோமசேகர் ஏதோ சொல்ல முற்பட அவரைத் தடுத்து, ''லுக் சோமசேகர், ஐ'ம் ஃபெட் அப்! எனக்கு நீங்க எல்லோருமே ஒரே கட்சின்னு சந்தேகம் வருது!'' என்றவர், ''வா அம்ரு'' என்றார், அம்ருவைப் பார்த்து.

''ஒரு நிமிஷம் இருங்க மிஸ்டர் ராம்பிரகாஷ்! இந்தக் கேஸை நாங்க, போலீஸ்ல வாபஸ் வாங்கிக்க வேண்டி வரும், சாட்சியங்கள் போதலைன்னு. பரவாயில்லை. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் பாபு, பால்குண்டு ரெண்டு பேர்தான் செய்திருக்காங்க. அதைப் பற்றிச் சந்தேகமே இல்லை. எனக்கு மோதிரம் கிடைச்சிருக்கு. பேப்பர் கட்டிங்ஸ் இருக்கு. பாபு தன் னிச்சையாச் செய்ததெல்லாம் ஒப்புத்துக்கிட்டு இருக்கான். ஆனா கோர்ட்டில சட்டபூர்வமா இவங்களைக் குற்றவாளின்னு எங்களால் நிரூபிக்க முடியலை. இது நம் சட்ட முறை ஃல்ல இருக்கிற குறைபாடுன்னுதான் சொல்லணும். யாரோ ஒண்ணு ரெண்டு பேர் சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்யறாங்கங்கிறதுக்காக அதைக் காக்க ரொம்ப ஓட்டைங்கள்லாம் இருக்குது! இவங்க ரெண்டு பேத்தையும் தண்டனை இல்லாம மறுபடி நம்ம வீதிகள்ல உலாவ விடப் போறோம். இட்ஸ் எ கிரேட் பிட்டி!''

ராம்பிரகாஷ், ''அதனால என்ன?'' என்றார் அலட்சியமாக.

''நீங்க கோர்ட்டில ஏதும் சொல்ல வேண்டாம் என் ஆபீசுக்கு ஒரு முறை என் கூட



இப்ப வாங்க போதும்!''

''எதுக்கு?''

''அங்கே வந்தாச் சொல்றேன் வாங்க.''

''எதுக்குச் சொல்லுங்க?''

''ஒரு மாதிரி நெமிஸிஸ், பொயட்டிக் ஜஸ்டிஸ்! ஒரு நியாயம் நடக்கனும்!''

''புரியலை.''

''தயவு செய்து மேலே கேக்காதீங்க, எங்கூட வாங்க! தர்மராஜன் இங்க வாங்கய்யா!''

அம்ருதா பிரமித்துப் பார்த்து நின்று கொண்டிருந்தாள்.

''சிரமத்துக்கு மன்னிச்சுக்குங்கம்மா. இனிமே நீங்க கோர்ட்டுக்கு வர வேண்டாம். ஆனா ஒரு சின்ன வேலை பாக்கியிருக்கு இந்த கேஸ்ல!'' என்றார்.

அம்ருதா பதில் சொல்லவில்லை.

சோமசேகர் மாஜிஸ்திரேட் கோர்ட்டிலிருந்து ரெஸிடென்ஸி ரோட்டிலிருந்த அவர் அலுவலகத்துக்கு இருவரையும் அழைத்துச் சென்றார். வயர்லெஸ் ஆண்டெனாவைத் தாண்டிக் கம்பத்துக்கு மேற்புறமாக சிமெண்ட் பைகள் போட்டுக் கட்டடம் பாதி கட்டிக் காலியான அறைகள் இருந்தன. அதில் ஒன்றில் ஒரே ஒரு நாற்காலி போட்டார். ''கொஞ்ச நேரம் உட்காருங்க!'' என்றார். சற்று நேரத்தில் திரும்பி வந்தார். ராம்பிரகாஷ் திடுக்கிடுமாறு இருவர் உள்ளே தள்ளப்பட்டு அவர் காலடியில் விழுந்தனர், பாபுவும், பால்குண்டுவும்!

(தொடரும்)

தாலசீமியா தாக்கினால்?!

கேள்வி: தால சீமியா என்பது என்ன?

பதில்: இது ரத்தம் சம்பந்தமான நோய். இதனால் பாதிக்கப்பட்டவர்களின் ரத்தத்தில் ஆக்ஸிஜன் மிகக் குறைவாகவே இருக்கும். இது ஒரு வம்சாவழி நோயும் கூட. இதிலே தால சீமியா — மைனர், தால சீமியா — மேஜர் என இரு வகையுண்டு. தாலசீமியா — மைனர் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், உடல் ஆரோக்கியமாகத்தான் இருப்பார்கள். ஆனால், அவர்கள் தம் குழந்தைகளுக்கு இந்த நோய் வர 50 சதவீத வாய்ப்புகளுண்டு. தாலசீமியா — மேஜர் விஷயத்தில், பிறக்கும் போது குழந்தை ஆரோக்கியமாகவே இருக்கும். ஆனால் நாளடைவில், ரத்தத்தில் ஹிமோகுளோபின் அணுக்கள் குறைவின் காரணமாய் ரத்த சோகை ஏற்படும். குழந்தை எப்போதும் சிடுசிடுவென்றும், சலிப்புடனும், அழுது கொண்டும், ஜுரம், ஜலதோஷத் தொல்லைகளுடனும் காணப்படும். வயிற்றுப் போக்கு, வாந்தி இருக்கும், டானிக், ரத்த புஷ்டி மருந்துகள் பலனளிக்காது. சோதனைகள் மூலம் இந்த நோயினைக் கண்டுபிடிக்கலாம்.

கேள்வி: இந் நோய்க்கு சிகிச்சை என்ன?

பதில்: இந் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, பதினைந்து அல்லது முப்பது நாட்களுக்கு ஒரு தடவை வீதம் வாழ்நாள் முழுவதும் ரத்தமளித்துக் கொண்டே இருக்க வேண்டும். இதிலும் ஒரு சிக்கல் உண்டு. தொடர்ந்து ரத்தம் அளிப்பதன் காரணமாய், அதிகப்படியான இரும்புச் சத்து, நோயாளியின் இதயம், கல்லீரல், சிறுநீரகம் போன்ற பாகங்களில் படிய ஆரம்பிக்கும். இக் கூடுதல் இரும்புச் சத்தை டெஸ்பெரால் என்கிற ஊசி மருந்து மூலம் நீக்க வேண்டும். இச் சிகிச்சைக்கு மாதம் சுமார் 2500 ரூபாய் வரை செலவாகலாம்.

கேள்வி: இந்த நோயினைத் தடுப்பது எப்படி?

பதில்: தால சீமியா மைனர் உள்ளவர்களைக் கண்டறிந்து, முறையான அறிவுரைகள் மூலம், அதே நோயுள்ள இருவர் மணமுடிக்காமல் தடுக்க வேண்டும். அப்படியின்றி, இந் நோயாளிகள் இருவர் தம் பதிகளாய் இருப்பின் அவர்கள் குழந்தைப் பேற்றைத் தவிர்க்க வேண்டும். அல்லது குறைத்துக்கொள்ள வேண்டும். ஆரம்ப காலம் முதலே, முறையான மருத்துவப் பரிசோதனைகள் செய்து கொள்ள வேண்டும்.

நன்றி: சென்னை ரிஃபைனரீஸ் பிரசுரம்.

தகவல்: ஜூலி

* சமீபத்தில் எம். ஆர். எல். நிறுவன ஊழியர்கள் தாலசீமியா தாக்குதலுக்குள்ளான ஐந்து குழந்தைகளைத் 'தத்து' எடுத்துக் கொண்டு, 'வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து ரத்த தானம் அளிக்க முன்வந்துள்ளனர். படத்தில்: நோய்க்குள்ளான குழந்தைகளும், 'தத்து' எடுத்துக் கொண்ட ஊழியர்களும்.



வட்ட மேஜை

* ஆர்டர் கொடுத்து விட்டு, வர இருக்கும் உணவிற்காகக் காத்துக் கிடக்கும் என் போன்ற பலருக்கு அதிவேகமாய் உணவு தரும் கடைகள் வருவதில் ஏக தெம்பு!

குத்தாலம், எஸ். ராஜா.

* மும்தாஜ்யாசின் எழுதிய 'வேர்' சிறுகதை மிகவும் யதார்த்தமாக இருந்தது. கணவனிடம் மிகுந்த அன்புடைய மனைவி எப்படி இருப்பாள் என்பதையும், இருவருக்கிடையே ஏற்படும் சிறு சிறு ஊடல்களை எப்படி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் ஆசிரியர் நன்றாக எடுத்துக் கூறியுள்ளார்.

தலைஞாயிறு. ந. இளங்கோவன்.

* சந்தையில் நடக்கும் சம்பாஷணைகளை அப்படியே கண்முன் கொண்டு வந்து நிறுத்திய 'தன்மான உணர்வு' சிறுகதைக்குப் பரிசு கொடுத்தது மிகவும் பொருத்தம். வடிவு, அருமையான பாத்திரம்!

கடலூர், ஆர். வேணுமணி.

* தன் குடும்பத்தின் தீபாவளிப் பண்டிகையையே அந்தக் கோழியை விற்றால்தான் கொண்டாட முடியும் என்ற அந்த நிலையில் கூடத் தன்னுடைய தன்மான உணர்வை விட்டுக் கொடுக்காமல், கோழியை விற்காமல் திருப்பி எடுத்துச் சென்ற 'வடிவு' கேரக்டர் மூலம் ஏழைகளிடம் உள்ள ஒரே சொத்தான தன்மான உணர்வுக்கு ஒரு தனி அந்தஸ்து பெற்றுக் கொடுத்து விட்டார் பரிசு பெற்ற 'தன்மான உணர்வு' கதை ஆசிரியர் கவி கோபால கிருஷ்ணன்.

மயிலாடுதுறை. கிருட்டிண. எழில்.

* 'தற்கொலைக்குத் தூண்டும் தூக்கமின்மை' கட்டுரை, தூக்கமின்மையால் அவதிப்படுபவர்களுக்கு மிகவும் பயனுள்ளது. அதே போல் அதிக நேரம் தூங்குபவர்கள், தூக்கத்தில் நடப்பவர்கள் போன்றவர்களைப் பற்றிய கட்டுரைகளும் வெளியானால் மேலும் பயனுள்ளதாய் இருக்கும்.

சென்னை — 71. எம். ஐ. முஹம்மத் லத்தீப் ராஜா.

* தூக்கமின்மை ஏற்படும் விதத்தையும், தூக்கமின்மையினால் ஏற்படும் பின் விளைவுகளையும் தெளிவாகப் பட்டியல் போட்டுக் காட்டி விட்டார் டாக்டர் மாத்ருபூதம். புரிந்து கொள்வதற்கும் மிக எளிதானதாக இருந்தது. இது போன்ற பயனுள்ள கட்டுரைகள் தொடர்ந்து வெளிவர வேண்டும் என எண்ணுகின்றேன்!

மதுரை — 7, எஸ். செல்வன்.

* ''அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி என்னும் நிலையிலுள்ள சிக்கன திலகம் மைக்கேல் டுகாகிஸ் போல் நமக்கு ஒரு சிக்கன திலகம் பிரதமராக வரமாட்டாரா?'' என்று ஏக்கமாக இருக்கிறது.

வலங்கைமான், ஜி. ராஜ ப்ரியா.

* தொலைபேசியில் ஒட்டுக் கேட்பதை மிக நன்றாக ஒரு கட்டுரையாகச் சித்திரித்துச் சிரிப்பை வரவழைத்து விட்டார் செம்பியன்; பாராட்டுக்கள்.

புதுச்சேரி. புதுவை ராஜமுனி.

* ஹலோ...! கல்கி ஆபீசா? செம்பியனா? இந்த ஒட்டுக் கேட்கிற கருவி சமாசாரமாப் பேசணும்.... ஆங்.... அதே கருவிதான்! உம்ம பிரண்டு கிட்டச் சொல்லி எனக்கும் ஒரு ஒட்டுக் கேட்கிற கருவி வாங்கித் தாரும்! ஏன்னா, இந்த 'ஆட்டோ சங்கர்' விஷயமா அரசியல்வாதிங்களெல்லாம் என்ன பேசிக்கிறாங்கங்கிறதைத் தெரிஞ்சிக்கிடலாம்னு ஒரு நப்பாசை! ஹி.... ஹி...!

சின்னமனூர், எம். எஸ். தாசன்.

* 'ஒரு சர்வாதிகாரியின் மரணம்' என்ற தலையங்கம் படித்தேன். சரியான நேரத்தில் மிகச் சரியாக எழுதப்பட்ட சிந்திக்க வைக்கக்கூடிய தலையங்கம். பாராட்டுக்கள்.

திருச்சி, செல்வன்ஜி.

* ஒருவர் இறந்து விட்டார் என்பதற்காக நடக்காதவைகளையெல்லாம் ஞாபகமூட்டிச் சிலாகித்து எழுதாமல், நடுநிலையோடு எழுதப்பட்டிருந்த 'ஒரு சர்வாதிகாரியின் மரணம்' தலையங்கம் வெகு நேர்த்தி!

திருத்துறைப்பூண்டி, ஜெயந்தி ப்ரியன்.

* 'இருள் வரும் நேரம்' தொடர்கதையின் 18—வது அத்தியாயத்தில், தர்மராஜன் பாபுவை 'மணி என்ன' என்று கேட்கும் இடத்தில் போலீஸ் சீருடையில் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 19—வது அத்தியாயத்தில் பாபு, ஒரு பெண்ணைப் பிடித்துக் கொள்ளும் இடத்தில் தர்மராஜன் சீருடையில் இருப்பதாகப் படம் வரையப்பட்டுள்ளது. ஏன் இந்தத் தவறு?

சென்னை — 82, வி. ஜி. கணேசன்.

* கடந்த 21.8.88 கல்கி இதழில் வெளியான ஜே. பண்ணை பற்றிய கட்டுரையில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் உட்பட மற்ற விவசாயக் கல்லூரிகளில் மாணவர்கட்கு டிராக்டர் வசதி இல்லையென்று குறிப்பிட்டிருந்தீர்கள். இந்தச் செய்தி தவறானது. கோவை வேளாண் பல்கலைக் கழகத்திற்குட்பட்ட கல்லூரியான வேளாண் பொறியியற் கல்லூரியில் மட்டும் மாணவர்களுக்காக ஐந்து டிராக்டர்கள் உள்ளன. இதைத் தவிர மத்திய பண்ணையிலும் வேளாண்மைக்காகப் பல டிராக்டர்கள் உள்ளன. மேலும் ஜே. பண்ணையிலுள்ளது போலவே டிராக்டரின் பாகங்கள் பிரித்து வைக்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கோவை — 3, எம். பாக்யநாதன், ஜி. கிருஷ்ணன், வேளாண் பொறியியல் மாணவர்கள்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157: ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
அறுமாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.

என்றும் மிளிரும் நட்சத்திரங்கள்.

The Thapar G



மறக்கத்தான் முடியுமா 'உம்ராவ் ஜான்' படத்திலே ரேகா நடிப்பின் சிகரத்தை எட்டியதை! காவியச் சிறப்புகள் நிறைந்த இந்த திரைப்படம் காலமெல்லாம் நிலைக்கும், இதயத்தை உருக்கும், இன்பத்தை பெருக்கும்.

ரேகா திறமையாக நடித்துள்ள பல படங்களில் இதுவும் ஒன்று.

அதே வகையில் என்றும் பிரகாசிக்கும் மற்றொரு நட்சத்திரம் பற்றி உங்களுக்கு தெரிவிக்கிறோம்.

அதுதான் கிராம்ப்டன் கிரீவ்ஸ் கலர் டிவி.


இது மிக நவீன தொழில்நுட்பங்கள் பொருந்திய டெலிவிஷன் —உங்கள் உடைமை யாக்கக் கூடிய இந்த விசேஷ டிவி, பல சிறப்பம்சங்களைக் கொண்டதாகும்.

இதைவிட பரிபூரண 12-மாத உத்தரவாதம் தருகிறது. மிக விலையுயர்ந்த பகுதியான பிக்சர் ட்யூபுக்குக்கூட இதன் காப்புறுதி உள்ளது.

இணையில்லா ஸர்வீஸ் பின்பலம் உள்ளது.

நினைவிருக்கட்டும் காலமெல்லாம் உங்கள் நம்பிக்கைக்கு உரியது கிராம்ப்டன் கிரீவ்ஸ்.

ஆம், காத்துக்கொள்ள வேண்டிய எங்கள் பெயரும் புகழும் மிகப் பெரியது அன்றோ.



Crompton Greaves

கிராம்டன் கிரீவ்ஸ் டிவி
விலையில், வேறு இல்லாத சிறப்பம்சங்கள் பல உண்டு.

பிராஞ்ச் ஆபீஸ் : நம். 3 ஏ, கோடம்பாக்கம் ஹைரோடு,
த.பெ. நம். 3316, நுங்கம்பாக்கம், சென்னை-600 034 ☎போன் : 47 0316, 47 4741.

Enterprise/CGL/241

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

